தொல்காப்பியம்

உரைவளம்

சொல்லதிகாரம்

இடையியல்

யாதும் ஊரே யாவரும் கேளிர்

INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES

பதிப்பாசிரியர்:

ஆ.சிவலிங்கனார்

தொல்காப்பியம்-சொல்லதிகாரம்
(உரைவளம்)

பதிப்பாசிரியர்

ஆ. சிவலிங்கனார்

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
International Institute of Tamil Studies
டி.டி.டி.ஐ., தரமணி, சென்னை-600 113.

தொல்காப்பியநூல் உரைவளா
வெளியீட்டுத் திட்டம் வெளியீடு 18

Bibliographical Data

Title of the book	:	Tolkappiyam, Idaiyiyal
Author	:	A. SIVALINGANAR International Institute of Tamil Studies T.T.T.I., Tharamani, Madras-600 113.
Publisher	:	International Institute of Tamil Studies, T T T.I., Tharamani, Madras-600 113.
Publication Number	:	126
Language	:	Tamil
Edition	:	First
Date of Publication	:	July 1986
Paper used	:	14.6. T
Size of the book	:	21×14cms
Printing Type used	:	10 Point
Number of Copies	:	1200
Number of Pages	:	XVI+222
Price	:	Rs. 22/-
Printers	:	Sri Gomathy Achagam, 41, Surappa Mudali Street, Triplicane, Madras-600 005-
Binding	:	Card board
Artist	:	ESWARI
Subject	:	Grammar
Summary	:	Commentaries on Tolkappiyam.

டாக்டர் ச. வே. சுப்பிரமணியன்
இயக்குநர்
உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம்
சென்னை-113.

முன்னுரை

தொல்காப்பியச் சொல்லதிகார இடையியல் உரைவளம், உலகத்தமிழாராய்ச்சி நிறுவனத்தின் தொல்காப்பிய நூல் உரைவள வெளியீட்டுத் திட்டத்தின் மூலம் வெளிவரும் 18-ஆம் நூலாகும்.

இந்நூலில் இளம்பூரணர், சேனாவரையர், தெய்வச் சிலையார், நச்சினார்க்கினியர், கல்லாடனார் உரைகளும், வேண்டிய அளவில் ஆதித்தர், வெள்ளைவாரணனார் உரைகளும், சுப்பிரமணிய சாஸ்திரியார் குறிப்புரையும், தற்கால அறிஞர் பெருமக்களின் கருத்துரைகளும் வெளிவந்துள்ளன. ச. பாலசுந்தரம் அவர்களின் உரையும், டாக்டர் ஆல்பர்ட் அவர்களின் இடையியற் சூத்திர ஆங்கிலமொழி பெயர்ப்பும், இந்நூலில் புதியனவாக அமைக்கப்பட்டுள்ளன. டாக்டர் சி. இலக்குவனாரின் ஆங்கில மொழிபெயர்ப்பும் உண்டு.

இந்நூலை உருவாக்கிய ஆ. சிவலிங்கனாரையும், அவர்க்கு உதவிய அறிஞர்களையும் பாராட்டுகிறேன்.

எங்கட்கு முழு ஆதரவு தந்து ஆக்கமும் ஊக்கமும் அளித்து வரும் தமிழகக் கல்வியமைச்சர் மாண்புமிகு செ. அரங்கநாயகம் அவர்கட்கு மிக்க நன்றியுடையேன்.

நூலை யேற்கும் தமிழுலகுக்கும், அழகுற அச்சிட்டுதவிய ஸ்ரீகோமதி அச்சக உரிமையாளர் திரு. சரவணகுமார் அவர்கட்கும் நன்றி.

சென்னை
1-8-1986

ச. வே. சுப்பிரமணியன்

பதிப்புரை

சென்னை, உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம் தொல் காப்பிய நூல் உரைவள வெளியீட்டுத் திட்டத்தின் மூலம் வெளியிடப்படும் 18 ஆம் நூல் இடையியல் உரைவளமாகும்.

இதில் இளம்பூரணர், சேனாவரையர், தெய்வச் சிலையார், நச்சினார்க்கினியர் கல்லாடனார் (1-10சூ.) உரைகளும், வெள்ளை வாரணனார், ஆதித்தர் ஆகியோரின் உரைகளில் வேண்டியனவும், சுப்பிரமணிய சாஸ்திரியார் குறிப்புகளும், இக்கால அறிஞர் பெருமக்களின் கருத்துரைகளும், பதிப்பா சிரியர் கருத்துரைகளும் வெளி வருதலுடன், பாவலர் ஏறு ச. பாலசுந்தரம் எழுதி அனுப்பிவைத்த இடையியல் உரை யும் வெளி வருவது குறிப்பிடத்தக்கது. மேலும் இடையியல் சூத்திரங்களுக்கு உலகத்தமிழாராய்ச்சி நிறுவன ஆய்வாளர் டாக்டர் ஆல்பர்ட் அவர்களின் ஆங்கில மொழி பெயர்ப்பு வெளி வருவதும் குறிப்பிடத்தக்கது. மற்றைய இயல்களுக்குப் போலவே இவ்வியலுக்கும் டாக்டர் சி.இலக்குவனாரின் ஆங்கில மொழிபெயர்ப்பும் வெளி வந்துளது.

நூலைப் படிக்கும் அறிஞர் குறை நிறைவுகளைச் சுட்டிக் கூறின் திருந்தவும் திருத்தவும் வாய்ப்பாகும்.

நூல் வெளி வர வேண்டிய உதவிகளைச் செய்தோர் புலவர் க. வா. சச்சிதானந்தம், டாக்டர் வை. இரத்தின சபாபதி ஆகியோர். அச்சுப்படிவம் பார்த்தவர்கள் செல்வி லலிதா, செல்வி செயலட்சுமி, ஆர் ஆளவந்தார் ஆகியோர்.

எனக்கு ஊக்கமும் ஆக்கமும் தருபவர் நிறுவன இயக்குநர் டாக்டர் ச. வே. சுப்பிரமணியன் ஆவர். நல்ல ஆதரவு தருபவர் நிறுவனத்தலைவரும் தமிழகக் கல்வி அமைச்சரும் ஆம் மாண்பு மிகு செ. அரங்கநாயகம் அவர்களாவர். அழகுற அச்சிட்டவர் கோமதி அச்சக உரிமையாளர் திரு. சி. சரவணகுமார் அவர் கள். இப் பெரு மக்கள் யாவர்க்கும் என் நன்றி.

ஆ. சி.
சென்னை
1-8-86

பொருளடக்கம்

(எண்-பக்க எண்)

	பக்கம்
முன்னுரை	iii
பதிப்புரை	iv
பொருளடக்கம்	v—vi
சுருக்க விளக்கம்	vii—viii
System of Transliteration	ix
இடையியற் பொருட்சுருக்கம்	x—xvi
இடையியல்	1—8
இடைச் சொற் பொது விலக்கணம்	8–16
இடைச் சொற் பாகு பாடு	16—37
இடைச் சொல் நிற்கும் இடம்	37—41
மன்	42—46
தில்	46—49
கொன்	49—53
உம்	53—62
ஓ	62—66
ஏ	66—73
என	73—77
என்று	77—80
தில்-புறனடை	80—82
ஏ, ஓ—புறனடை	83—84
மற்று	84—87
எற்று	87—90
மற்றையது	90—93
மன்ற	93—94
தஞ்சம்	95—96
அந்தில்	97—98
கொல்	99—100
எல்	100—104
ஆர்	104—110
ஆர்-புறனடை	111—112
ஏ, குரை	113—116
மா	116—117
முன்னிலை அசைச் சொற்கள்	117—122
இகும், சின்—புறனடை	122—125

அம்ம	125—127
ஆங்க	127—129
ஒப்பில் போலி	129—131
அசைநிலைச் சொற்கள்	131—134
பிரிவில் அசைநிலை	134—141
ஔ	141—151
குறிப்பாற் பொருளுணர்த்துவன	151—155
உம்—மயக்கும்	155—159
எச்சவும்மை நிற்குமிடம்	159—162
முற்றும்மை யெச்சவும்மை யாதல்	163—166
ஈற்றசையேகாரம் ஒரு மாத்திரையாதல்	166—169
எண்ணுப் பொருள் அமையுமாறு	169—171
எண் ஏ காரம் இடையிட்டுவரல்	171—175
எனா, என்றா	175—179
தொகை பெற்றே முடியும் எண்ணிடைச் சொற்கள்	179—183
எண்ணும்மைக்கு மேலும் ஒரு முடிவு	183—189
உம் உந்து ஆதல்	189—196
எண்ணிடைச் சொல் வினையொடும் வருதல்	197—200
எண்ணிடைச் சொல் பிரிந்து ஒன்றுதல்.	200—203
இடைச் சொற்குப் பொருள்கோடல்	203—209
புறனடை	209—215

சுருக்க விளக்கம்

அகம்—அகநானூறு
ஆதி—ஆதித்தர்
ஆ. மொ—ஆங்கில மொழி பெயர்ப்பு
இல—இலக்குவனார்
இல—வி—இலக்கண விளக்கம்
இ—ள்—இதன் பொருள்
உ—ம்—உதாரணம்
உயிர். ம—உயிர் மயங்கியல்
உரி—உரியியல்
எச்ச—எச்சவியல்
எ—டு—எடுத்துக்காட்டு
எழு, எழுத்—எழுத்ததிகாரம்
எ-று—என்றவாறு
ஐங், ஐங்குறு—ஐங்குறுநூறு
கலி-கலித்தொகை
களவழி—களவழி நாற்பது
கிளவி—கிளவியாக்கம்
குறுந்—குறுந்தொகை
குறள்—திருக்குறள்
சிலப்—சிலப்பதிகாரம்
சிவ—சிவலிங்கனார்
சுப்—சுப்பிரமணியசாஸ்திரியார்
சூ—சூத்திரம்
செய்—செய்யுளியல்
சொல்-சொல்லதிகாரம்
தொகை-தொகைமரபு
தொல்—தொல்காப்பியம்
தொன்—தொன்னூல்விளக்கம்
நச்-நச்சினார்க் கினியர்
நற்—நற்றிணை
நன்-நன்னூல்
நாலடி—நாலடியார்
நான் மணி-நான் மணிக்கடிகை
நூன்—நூன்மரபு
நேமி—நேமிநாதம்

பதிற்-பதிற்றுப்பத்து
பி. இ. நா-பிற்கால இலக்கண நூல்கள்
பி. கு-பிற்குறிப்பு
புண-புணரியல்
புள்ளி-புள்ளிமயங்கியல்
புறம்-புறநானூறு
பெய, பெயரி-பெயரியல்
பெரும்பாண்-பெரும்பாணாற்றுப்படை
பொருந—பொருநராற்றுப்படை
பொருள்-பொருளதிகாரம்
மலைபடு-மலைபடுகடாம்
முத்து-முத்துவீரியம்
வினை-வினையியல்
வீர-வீரசோழியம்
வெள்-வெள்ளை வாரணனார்
வேற்-வேற்றுமையியல்
வேற். ம-வேற்றுமை மயங்கியல்

System of Transliteration

உயிரெழுத்துக்கள்—Vowels

அ	a
ஆ	ā
இ	i
ஈ	ī
உ	u
ஊ	ū
எ	e
ஏ	ē
ஐ	ai
ஒ	o
ஓ	ō
ஔ	au

மெய்யெழுத்துக்கள்—Consonants

(இலக்குவனார், ஆல்பர்ட்)

வல்லினம்	மெல்லினம்	இடையினம்
க்—k	ங்—ṅ	ய்—y
ச்—c	ஞ்—ñ	ர்—r
ட்—t(ṭ)	ண்—ṇ	ல்—l
த்—th(t)	ந்—n	வ்—v
ப்—p	ம்—m	ழ்—ḻ
ற்—ṟ	ன்—ṉ	ள்—ḷ

இடையியல்—பொருட்சுருக்கம்

இடைச்சொல்

இடை என்பதற்கு இடம் என்பதும், இடை (நடு) என்பதும் பொருள். பெயர்ச்சொல் இடமாகவும் வினைச் சொல்லிடமாகவும் வரும் காரணத்தால் இடைச் சொற்கள் இடைச் சொல் என்னும் பெயர் பெற்றன என்பர் சிலர்; இன்னும் சிலர் மொழிக்கு முன்னும் பின்னுமாகவரினும் பெரும் பான்மையும் இடையில் வருதலின் இடைச் சொல் எனப் பெயர் பெற்றன என்பர். முன்னோ பின்னோ இடையோ வரும்போது பெயரைச் சார்ந்துவரின் அப்பெயர்ப் பொருளே தமக்கும் பொருளாகவும், வினையைச் சார்ந்துவரின் அவ்வினைச் சொற் பொருளே தமக்கும் பொருளாகவும் வரும் அவ்விடைச் சொற்கள். எனவே தமக்கெனப் பொருளுடையனவல்ல அவை. அவ்வாறு வரும் போது செய்யுளில் அவற்றின் இறுதி எழுத்துகள் திரிந்து வருதலும் உண்டு. இரண்டு இடைச் சொற்கள் சேர்ந்து வருதலும் உண்டு.

அதுமன்-'மன்' என்னுமிடைச் சொல் பெயர்க்கு 1 முன் வந்தது.

கேண்மியா–'மியா' என்னுமிடைச் சொல் வினைக்கு முன் வந்தது.

கொன் ஊர்-'கொன்' என்னுமிடைச்சொல் பெயர்க்குப் 2 பின் வந்தது.

ஒஒவினிதே-'ஒஒ' என்னுமிடைச்சொல் வினைக்குப் பின் வந்தது.

உடனுயிர் போகுக தில்ல-'தில்' என்னுமிடைச்சொல் தில்ல என ஈறுதிரிந்தது.

வருகதில்லம்ம-இதில் தில், அம்ம என்னும் இரண்டிடைச் சொற்கள் வந்துள. (1,3).

பிறைக் கொட்டிலிலுள்ள எண்கள் இடையியற் சூத்திர எண்கள்.

1, 2: முன்பின் என்பன இடமுன் இடப்பின் ஆகக்கொள்க.

இடைச் சொல் வகை

இடைச் சொற்கள் எழுவகைப்படும்.

1. சாரியை இடைச்சொற்கள். இவை இருமொழிப் புணர்ச்சியில் தாம் சார்ந்த சொல்லின் பொருளை உணர்த்த உதவுவன. உ-ம்: எல்லாம் + ஐ = எல்லாவற்றையும். இதில் வற்றுச்சாரியையானது எல்லாம் என்பதை அஃறிணைப் பொருளாகக் காட்டியுதவியது. எல்லாம் + ஐ= எல்லா நம்மையும். இதில் நம் சாரியையானது எல்லாம் என்பதைத் தன்மைப் பன்மையாக, உயர்திணைப் பொருளாகக் காட்டியுதவியது.

2. வினைச் சொற்களைப் பிரித்துச் சேர்க்கும் போது காலம் காட்டும் இடை நிலைகளும் பால் காட்டும் விகுதிகளும் இடைச் சொற்களாம். உ-ம்: வந்தான் என்பதில் த் இறந்த கால இடைநிலை; ஆன் ஆண்பாலுணர்த்தும் விகுதி.

3. வேற்றுமையுருபுகள் யாவும் இடைச் சொற்கள். உருபுகளாவன ஐ ஒடு, கு, இன், அது, கண் என்பனவும் அவை சாரும் பிறவும்.

4. அசைநிலையாக வருவன. அதாவது பெயரொடு அல்லது வினையொடு சார்த்திவருவன. தமக்கெனப் பொருளுடையனவல்ல. உ-ம்: உரைத்திசினோர். உரைத்தோர் என்பதில் இசின் சார்ந்தது.

5. இசைநிறைக்கவருவன. உ-ம்: ஏஎ இவன் ஒருத்தன்.

6. குறிப்பாற்பொருள் உணர்த்துவன. உ-ம்: "சிறியகள் பெறினே எமக்கீயுமன்னே" (புறம் 235). "கொஞ்சம் கள் கிடைத்தால் தான் உண்ணாமல் எனக்குக் கொடுத்து விடுவான்" என்பது இதன் பொருள். இதில் மன் என்பதற்குத் தனிப்பொருள் இல்லை. ஆனால் இவ்விடத்தில் 'அத்தகைய வாய்ப்புக் கழிந்து விட்டது' என்னும் பொருளை நாம் குறிப்பால் உணருமாறு அமைந்துளது.

7. உவம உருபுகளாக வரும் போல அன்ன முதலியன. உ-ம்: புலி போலும் பாய்ச்சல், புலியன்ன மறவன். (2).

(மேற் கூறப்பட்ட ஏழனுள் சாரியைகள் எழுத்ததிகாரப் புணரியலிலும், இடைநிலை விகுதிகள் வினையியலிலும், வேற்றுமையுருபுகள் வேற்றுமையியலிலும், உவமவுருபுகள் பொருளதிகார வுவம வியலிலும் கூறப்பட்டன. ஆதலின் இவ்வியலில் அசைநிலை இசைநிறை குறிப்பு ஆகிய மூன்றுமே கூறப்படும். அவற்றுள்ளும் மிகுதியாகக் கையாளப்படுதலும் பொருளுணர்த்துதற் சிறப்பும் உடைய காரணத்தால் குறிப்புப் பொருளுணர்த்தும் இடைச் சொல் பற்றி முதலில் கூறப்படும்).

குறிப்பாற் பொருளுணர்த்தும் இடைச் சொற்கள்

*மன் : கழிவு ஆக்கம் ஒழியிசை எனும் பொருள்களில் வரும். (4)

தில் : விழைவு காலம் ஒழிபிசை எனும் பொருள்களில் வரும். (5)

விழைவுப் பொருளில் வரும்போது தன்மையிடத்துக்கே வரும். உ-ம்: பெறுகதில் அம்ம—பெறுவேனாக. (12)

கொன் : அச்சம் பயனின்மை காலம் பெருமை எனும் பொருள்களில் வரும். (6)

உ-ம் : எச்சம் சிறப்பு ஐயம் முற்று எதிர்மறை எண் தெரிநிலை ஆக்கம் எனும் எட்டுப் பொருள்களில் வரும். (7)

'சாத்தனும் வந்தான்' எனின் 'கொற்றனும் வந்தான்' என்பதை அதாவது சொல்லாது எஞ்சியதைத் தழுவுதலின் எச்சவும்மையாம். 'சாத்தனும் வந்தான் கொற்றனும் வருவான்' என்பதில் 'சாத்தனும்' என்பதன் உம்மைக் கொற்றனையும், 'கொற்றனும்' என்பதன் உம்மை சாத்தனையும் தழுவுதலின் அவைகளும் எச்சவும்மைகளாம். முன்னது எதிரது தழுவியதாகவும் பின்னது இறந்தது தழுவியதாகவும் கொள்ளப்படும்.

'கொற்றன் வரலும் உரியன்' என்பதன் உம்மை வாராமைக்கும் உரியன் என்பதைத் தெரிவித்தலின் எதிர்மறையும்மை.

இந்த எச்சவும்மையும் எதிர்மறையும்மையும் 'சாத்தனும் வந்தான் கொற்றனும் வரலும் உரியன்' என ஒரே தொடரில் வாரா. (35)

'சாத்தனும் வந்தான் கொற்றனும் வந்தான்' என்னும் தொடரில் ஒன்றை உம்மையின்றிச் செஞ்சொல்லாகக் கூற வேண்டின், அச்செஞ்சொல்லை முன்னே கூறிப் பின்னர் உம்மை சார்ந்த சொல்லைக் கூறல் வேண்டும். அதாவது 'கொற்றனும் வந்தான் சாத்தன் வந்தான்' எனக்கூறாமல் 'சாத்தன் வந்தான் கொற்றனும் வந்தான்' எனக் கூறல் வேண்டும். (36)

---

* உதாரணம் காட்டப்படாதனவற்றுக்கு அவ்வச் சூத்திரங்களிற் கண்டு கொள்க. விளக்கம்வேண்டிச் சிற்சில உதாரணங்கள் காட்டப்பட்டன.

முற்றுப் பொருளில் வரும் உம்மை, சில சமயம் எச்சப் பொருளிலும் வரும். 'பத்தும் கொடாதே' என்றால், 'முற்றும் கொடாதே' என்றாம்; அதுவே 'முற்றும் கொடாதே சிலகொடு' எனவும் ஆம். எனவே முற்று எச்ச மாக வந்ததாம். (37)

உம்மை எண்ணும்மையாக வரும்போது தொகை பெற்றும் பெறாதும் வரும். 'முருகனும் வேலனும் கந்தனும் ஆகிய மூவரும் வரும்' என்றோ, 'முருகன் வேலன் கந்தன் வருக' என்றோ வரலாம். (39)

எண்ணுப் பொருளில் வரும் போது வேற்றுமையுருபு கள் விரிந்தும் தொக்கும் வரலாம். 'ஆடலையும் பாடலை யும் வியந்தாள்; 'ஆடல் பாடல் வியந்தாள்' என்ன லாம். (43)

உம் உந்தாகவும் மாறும் உ-ம்: கூஉப்பெயர்க்கும்-கூஉப் பெயர்க்குந்து உம் பெயருடன் வருதல் பெரும்பான்மை. 'உண்டும் தின்றும், என வினையுடனும் வரும். (45)

ஓ: பிரிநிலை வினா எதிர்மறை ஒழியிசை தெரிநிலை சிறப்பு என ஆறு பொருள்களில் வரும். (8) சிறப்புப் பொருளில் வரும் போது அளபெடையாக வரும். உ-ம்: ஓஒ பெரியன். (13)

ஏ: தேற்றம் வினா பிரிநிலை எண் ஈற்றசை என ஐந்து பொருள்களில் வரும். (9) தேற்றப் பொருளில் வரும்போது அளபெடையாய் வரும். உ-ம் : உண்டேஎ மறுமை. (13) இசைநிறை அசைநிலைப்பொருள்களிலும் வரும். (24) ஈற்றசை ஏகாரம் அகப்பொருட்கூற்றில் ஓரளவாகவும் வரும். "கடல்போல் தோன்றல காடிறந்தோரே" என்பதில் 'காடிறந்தோரே' என்பது 'காடிறந்தோரெ' என ஒலிக்கப் படுவதாகக் கொள்க. (38) எண்ணுப் பொருளில் வரும் ஏகாரம் எண்ணப்படும் பொருள்தோறும் வாராமல் இடை யிட்டும் வரலாம். 'மலை நிலம் பூவே துலாக்கோல் என் றின்னர்' என்பதில் இடையே 'பூவே' என வந்த ஏகாரம் மற்றைய வற்றிலும் சென்று இயைவது காண்க. (40)

என : வினை குறிப்பு இசை பண்பு எண் பெயர் என்னும் ஆறு பொருள்களில் வரும். ('அழுக்காறென ஒரு பாவி' (குறள்) என்பதில் என என்னும் சொல் 'என்பது' என்னும் பெயர் நிலையில் வந்தது.) எண்ணுப் பொருளில் வரும் போது தொகை பெற்றும் பெறாதும் வரும். உ-ம் : நிலனென நீரெனஇரண்டு,'நிலனென நீரென'(39)பெயருடன் வருதல்

பெரும்பான்மை. சிறுபான்மை 'உண்ணவெனத் தின்ன வென, என வினையுடனும் வரும். (45)

என்று: 'என' போல்வதே.

மற்று: வினைமாற்று அசைநிலை என்னும் பொருள்களில் வரும். (14)

எற்று: இறந்தது என்னும் பொருளில் வரும். உ–ம் 'எற்று என் எழில்' 'எப்படி இருந்தது என் அழகு; இப்போது இல்லை' என்பது குறித்தது. (15)

மற்றையது: சுட்டியதற்கு இனமாக வரும். உ-ம்: ஆடை யொன்று காட்டிய போது அது வேண்டா தான் 'மற்றையது காட்டு' என்பது. 'மற்றையது' என்பதற்கு 'அது போன்ற பிறிதொன்று 'என்பது பொருள். (16)

மன்ற: தெளிவுப் பொருளது. 'மடவை மன்ற வாழிய முருகே, என்பதில் அப்பொருள் காண்க. (17)

தஞ்சம்: எளிமை என்னும் பொருளில் வரும். (18)

அந்தில்: அவ்விடம், அசைநிலை என்னும் பொருள்களில் வரும். (19)

கொல்: ஐயப் பொருளில் வரும். (20)

எல்: விளக்கம் என்னும் பொருளது. (21)

ஆர்: இது பன்மையைக் குறிக்கும் ஓர் இடைச் சொல் இயற் பெயர்ப்பின்—அதாவது ஒருமை குறித்த இயற்பெயர்ப்பின் வருமானால் பெயரின் ஒருமைக்கேற்ப ஒருமை வினையால் முடியாமல் தனக்கேற்ற பன்மை வினையால் முடிவு பெறும். 'சேந்தன்' என்பது ஒருமை இயற்பெயர். இது சேந்தன் வந்தான் என முடியும். 'சேந்தனார்' என 'ஆர்' இடைச்சொல் பெற்றுவரின், ஒருமைப் பொருளாதலின் அதற்கேற்ப 'வந்தான்' என ஒருமையால் முடியாது 'சேந்தனார் வந்தார்' எனப் பன்மை வினையால் முடியும்.

நம்பியார் நரியார் என எப்பெயரின் வந்தாலும் 'வந் தார்' எனப் பன்மை வினையே கொள்ளும். (22)

செய்யுளில் 'ஆர்' அசைநிலையாகவும் வரும். 'தொகை யும் உள' என்பது 'தொகையுமார் உள' (சொல். 67) என வரும். (23)

குரை: இசைநிறை அசைநிலைப் பொருள்களில் வரும். (24)

மா: வியங்கோளசைச் சொல்லாகவரும் உ-ம் ; உண்குமா. (25)

முன்னிலையசைச் சொற்கள் : மியா இக மோ மதி இகும் சின் என்பன. (26)

இகும், சின் என்பன தன்மை முன்னிலைகளிலும் வரும் (27)

அம்ம : இது ஒருவனை ஒன்று கூறுவன் கேட்க என்னும்போது வரும். (28)

ஆங்க : உரையசைப் பொருளில் வரும். (29)

போலும் : இது உவமையின்றி அசைநிலையில் வருதல் உண்டு. 'மங்கலம் என்பது ஓர் ஊர்' என்பது 'மங்கலம் என்பதோர் ஊர் போலும்' என வரும். (30)

அசை நிலையிடைச்சொற்கள் சில : யா கா பிற பிறக்கு அரோ போ மாது. (31)

ஆக, ஆகல், என்பது : என்னும் மூன்றும் பேச்சு வழக்கில் ஆக ஆக, ஆகல் ஆகல்,என்பது என்பது என இரட்டித்து வரும். (32)

ஔ : சிறப்பு, மாறுபாடு என்னும் பொருள்களில் வரும்போது 'ஔஔ' என இரட்டித்து வரும். இரட்டியாது 'ஔஉ'என அளபெடுத்தும், 'ஔ' என அளபெடாதும் வரும். இக் காலத்து இது ஓகாரமாக வழங்கப்படும். (33)

நன்றே அன்றே அந்தோ அன்னோ : என்பன சொல்லுவான் குறிப்பால்—ஓசை வேறுபாட்டால் பொருள் உணர்த்தும் (34)

எனா : இது எண்ணுப் பொருளில் வரும். அதனுடன் 'உம்' இடைச்சொல் சேர்ந்தும் தொக்கும் வரும். அவ்வாறே என்றா என்பதும் வரும். 'பின்சார் அயல்புடை தேவகை யெனாஅ' (சொல். 82) 'ஒப்பிற் புகழிற் பழியின் என்றா' (சொல் 72) எனக் காண்க. இவ்வுதாரணங்களில் எனாவும் என்றாவும் ஓரிடத்திலிருந்து பிறவிடங்களிற் சென்றன. (41)பெயருடன் வருதல் பெரும் பான்மை: சிறுபான்மை 'உண்ணவெனா தின்னவெனா' என வினையுடனும்வரும். (35)

எனா என்றா ஏ : என்பன சொல்லிறுதியில் நின்று எண்ணுப் பொருளில் வரும் போதும், பெயர்ச்சொற்கள் இடைச் சொல் இன்றிச் செவ்வெண்ணாக வரும் போதும்தொகைச் சொல் வந்தே தீரும். 'நிலனெனா நீரெனா இரண்டு' என்பது போலக் காண்க. (42)

என்று, என, ஒடு : என்பன எண்ணுப் பொருளில் வரும்போது சொற்றொறும் வருக என்னும் நியதியில்லை. ஏதேனும் ஒரு சொல்லிடத்து நின்று பொருள் கொள்ளும் போது சொற்றோறும் கொள்ளுமாறு அமைதல் உண்டு. 'வினை பகை என்றிரண்டின் எச்சம்' (குறள்.674) என்பதில் 'என்று' என்பது பகையில் நின்று வினையில் இல்லாதிருந் தாலும் பொருள் கொள்ளும் போது 'வினையென்று பகை யென்று' எனக் கொள்ளப்படுதல் காணலாம். (46)

புறனடை

பெயரிலும் வினையிலும் சார்ந்து இடைச்சொற்கள் வந்து பொருள் தருமாறு கூறப்பட்டிருந்தாலும் கூறிய வற்றுக்கு மாறாக வரும் பொருள்களும் இடமறிந்து கொள் ளுதல் வேண்டும். 'மன்' என்பது அசைநிலையில் வரும் என்பது கூறப்பட வில்லை; ஆயினும் 'அது மற்கொண்கன் தேரே' என வந்தவிடத்து 'மன்' அசை நிலையாயது காண்க. இப்படியேபிறவும். (47)

சொல்லப்பட்ட இடைச் சொற்களேயன்றிச் சொல்லப் படாதனவுளவேல் அவையும் இடமறிந்து கொள்ளல் வேண்டும். 'ஆம்' என்பது அசைநிலையில் வரும் என்பது கூறப்படவில்லை. ஆனால், 'பணியுமாம் என்றும் பெருமை' என்னும் குறளில் (978) 'ஆம்' என்பது அசை நிலையில் வந்தது காண்க. பிறவும் அன்ன. (48)

தொல்காப்பியம்—சொல்லதிகாரம்
(உரைவளம்)

இடையியல்

இளம் பூரணர்.

இவ்வோத்து என்ன பெயர்த்தோ வெனின் இடையியல் என்னும் பெயர்த்து.

சேனாவரையர்.

நிறுத்த முறையானே இடைச்சொல் உணர்த்திய எடுத்துக் கொண்டார், அதனான், இவ்வோத்து இடையியல் என்னும் பெயர்த்தாயிற்று. மொழிக்கு முன்னும் பின்னும் வருமாயினும் பெரும் பான்மையும் இடை வருதலின் இடைச் சொல்லாயிற்று.

தெய்வச் சிலையார்.

இவ்வோத்து என்ன பெயர்த்தோவெனின், இடைச் சொல்லோத்து என்னும் பெயர்த்து; இடைச் சொல் உணர்த் தினமையிற் பெற்ற பெயர். இது பெயரையும் வினையையும் சார்ந்து தோன்றுதலின் அவற்றின் பின் கூறப்பட்டது.

நச்சினார்க்கினியர்.

நிறுத்த முறையானே இடைச்சொல் உணர்த்துகின்றமை யின் இவ்வோத்து இடைச்சொல்லோத்து என்னும் பெயர்த் தாயிற்று.

கல்லாடனார்.

இவ்வோத்து என்னை பெயர்த்தோவெனின், இடைச்சொல் இலக்கணம் உணர்த்துதலான் இடைச்சொல்லோத்து என்னும் பெயர்த்து.

இடைச்சொல் என்னும் பொருண்மையென்னையெனின், பெயர் வினைகள் உணர்த்தும் பொருட்டுத் தான் இடமாக நிற்றலான் இடைச் சொல்லாயிற்று.

வெள்ளை வாரணனார்.

இடைச் சொற்களின் இலக்கணம் உணர்த்தினமையால் இடையியல் என்னும் பெயர்த்தாயிற்று. பெயரையும் வினையையும் சார்ந்து தோற்றுதலின் அவற்றின் பின் கூறப்பட்டது. மொழிக்கு முன்னும் பின்னும் வருமாயினும் பெரும்பான்மையும் இடை வருதலின் இடைச்சொல்லாயிற்று என்பர் சேனாவரையர். இடைச் சொல்லாவது பெயரும் வினையும் போலத் தனித்தனியே பொருள் உணர உச்சரிக்கப்படாது பெயர் வினைகளைச் சார்ந்து புலப்படும் என்றும், பெயரும் வினையும் இடமாக நின்று பொருளுணர்த்தலின் இடைச் சொல்லாயிற்று என்றும் கூறுவர் தெய்வச்சிலையார். பொருளையும் பொருளது புடை பெயர்ச்சியையும் தம்மாலன்றித் தத்தம் குறிப்பால் உணர்த்தும் சொற்கள், பெயர்ச்சொல் வினைச் சொற்களும் ஆகாது அவற்றின் வேறும் ஆகாது இடை நிகரனவாய் நிற்றலின் இடைச்சொல் எனப்பட்டது என்பர் சிவஞான முனிவர்.

ஆதித்தர்.

இடையியல்—இடைச்சொல் பற்றிய பகுதி எனப் பொருள் தரும். இடைச்சொல்லாவது யாது? தான் சேர்ந்த இடத்தாற் பொருள் வலியுறுஞ்சொல்.

இடை-இடம். 'எல்லாச் சொல்லும் பொருள் குறித் தனவே'—பெயரியல் முதற் சூத்திரம். பெயர் வினை இடை உரி நான்கிற்கும் பொருள் உண்டு. பெயர்—மலை, வினை—நிற்கிறது. 'மலை நிற்கிறது' எனப் பொருள் தனித்தனியாகவும் தொடர்ந்தும் தெளிவாக விளங்குகிறது.

மேல்—பொருள் யாது? ஏதோ ஒன்றின் மேல் எனப் பொருள் இருக்கிறது. ஆனால் தெளிவாக பொருள் இல்லை.

கூரை மேல்—பொருள் தெளிவாகிறது.

ஐ—ஒரு இடைச்சொல். பொருள் தெளிவில்லை. வீட்டை-ஒருவாறு தெளிவாகிறது. வீட்டைக் கட்டினான், வீட்டையிடித்தான், வீட்டை விற்றான், வீட்டை வாங்கினான் வீட்டையடைந்தான்—முன் உற்ற வினைமுற்றுடன் பொருள் மிக மிகத் தெளிவாகிறது.

த்—பொருள் என்னை? — பொருள் இல்லை
கிறு— ,, ,,
ப்— ,, ,,
படித்தான்—த்—இறந்த காலம் காட்டிற்று.
படிக்கிறான்—கிறு—நிகழ்காலம் காட்டிற்று.
படிப்பான் —ப்—எதிர்காலம் காட்டிற்று.

உம்-பொருள் யாது? ஏதோ விரைவு படித்துதல் போல ஒரு குறிப்பு

அவனும் அவளும்—இருவரும் என இணைத்துத் தெளிந்த பொருள் தருகிறது. இவ்வாறு பெயர் வினைகளிடமாகச் சேர்ந்து பொருள் விளக்கந் தருஞ் சொல் இடைச் சொல்.

* ஒரு குருடன்-உயிர் இருக்கிறது. கண் இருக்கிறது. கால் இருக்கிறது. ஆயினும் அவன் அடுத்தவனைச் சார்ந்தே நடக்க வேண்டியதாயுள்ளது. அவ்வாறு தமக்கு ஒரு குறிப்புப் பொருள் இருந்தும் பெயர் வினைகளோடு இடம் பெற்றே தெளி பொருள் தருஞ்சொல் இடைச்சொல்.

சுப்பிரமணிய சாஸ்திரியார்.

இடைச்சொல் என்று குறியிட்டதன் காரணம் :- சேனாவரையர் 'மொழிக்கு முன்னும் பின்னும் வருமாயினும், பெரும்பான்மையும் இடை வருதலின் இடைச் சொல்லாயிற்று' என்றார். நச்சினார்க்கினியரும் அவ்வாறே கூறினர். ஆனால் இடைச் சொற்களை ஆராயுமிடத்து, பெரும்பான்மையும் அவை மொழிக்கு இடையில் வருகின்றனவா என்னும் ஐயம் எழுகின்றது. இடைச்சொற்களாவன :- சாரியைகள், அன் ஆன் முதலிய வினை விகுதிகள், ஐ ஒடு கு முதலிய வேற்றுமையுருபுகள், அசை நிலைக் கிளவிகள், இசை நிறைக் கிளவிகள், தத்தம் குறிப்பாற் பொருள் செய்யும் கிளவிகள், ஒப்பில் வழியாற் பொருள் செய்யும் கிளவிகள் என்ற இவையேயாம்.

---

* இது கண்ணில்லாதவனைக் குறித்ததன்று. தெளிவாக நடத்தற்கியலாத-துணையோடே நடத்தற்கமைந்த பார்வை குறைந்தவனைக் குறித்ததாகும். பார்வையை முழுமையாக இழந்தவனும் ஒருவன் துணையுடன் நடக்க முடியும். அவ்வாறு பொருளேயில்லாத அசை நிலைச் சொற்களும் பெயர் வினைகளைச் சார்ந்து மொழியில் வரலாம். —சிவ

இவற்றுள் வினை விகுதிகளும் வேற்றுமையுருபுகளும் எப்பொழுதும் மொழியின் இறுதியிலும், அசை நிலைக்கிளவி இசை நிறைக்கிளவி என்ற இரண்டும் தனி மொழி போன்று மொழிக்கு முதலிலும் அல்லதுஇறுதியிலும், சாரியைகள் பெரும்பாலும் மொழிக்கு இடையிலும், தத்தம் குறிப்பாற் பொருள் செய்யும் கிளவிகளும், ஒப்பில் வழியாற் பொருள் செய்யுங் கிளவிகளும், தனி மொழி போன்று வாக்கியத்தினிடையிலும் வரும் ஆதலானும், சாரியைகளின் எண் மற்றெல்லாவற்றின் எண்ணினும் மிகுதியாய் இல்லாமையானும், இடைச் சொற்கள் யாவும் பெரும் பான்மையும் மொழிக்கு இடையில் வாரா, அங்ஙனமாயின், இடைச் சொல் என்பதன் பொருள் என்னை யெனின், இடச் சொல் என்பதேயாம். அஃதாவது பெயரினிடத்தும் வினையினிடத்தும் அகத்தேனும் புறத்தேனும் தோன்றுவது என்பது. பெயர், வினை என்ற குறிப்பானே அவற்றிற்கு இலக்கணம் கூறியது போலவே, இடைச்சொல் என்ற குறியானே இதற்கும் இலக்கணம் கூறினர் என்பதே ஏற்புடைத்து.

வை. தங்கமணி.

* இடை என்னுஞ் சொல்லை இடப் பொருளுணர்த்தும் இடைச் சொல்லாகக்கொண்டு, பெயர் வினைகளுக்கு முன் பின் இடை ஆகிய இடங்களில் ஏதேனும் ஓரிடத்தைத் தமக்குரிய இடமாகக் கொண்டு, இயல்பாயும் ஈறுதிரிந்தும் இணைந்தும் சார்ந்துள்ள சொல்லின் பொருளை விளக்கமுறச் செய்வதே இடைச் சொல் எனப்படும்.

ச. பாலசுந்தரம்.

இடைச்சொற்களின் இயல்புணர்த்துதலின் இஃது இடையியல் எனப்பட்டது. இடைச் சொல்லியல் என்பது இடையியல் என நின்றது.

இடைச்சொற்களின் இயல்புணர்த்து மாற்றான், அவை வகைப்படுமாறும் பெறப்பட வைத்து அவற்றுள் ஒரு சாரன இந்நூலகத்து முன்னும் பின்னும் பெறப்படுதலின், ஒரு சாரன வற்றிற்குரிய சிறப்பிலக்கணமும் அவை பற்றிய மரபும் இவ்வியலின்கண் கூறுகின்றார்.

---

* டாகடர் ஏ. ஸன். டீடருபால பூஸம தெரிவித்த கருத்து இது.

இடைச் சொல்லாவது :—பெயர்ப் பொருளையும் வினைப் பொருளையும் வேறுபடுத்தும் இயல்பினதாய் அவற்றின் வழி மருங்கு தோன்றி அவற்றொடு ஒருங்கு நடை பெற்றியல்வ தாகும்.

இடைச் சொற்களுள் ஒரு சாரன பெயரும் வினையுமாகிய சொற்களினின்று திரித்தும், சிதைத்தும், சுருங்கியும், இலக்கணக் குறியீடாக அமைத்துக்கொண்ட இடுங்கிய சொற்களாக வருத லானும், ஒரு சாரன பெயருமாகாமல் வினையுமாகாமல் அவற் றிற்கு இடைப்பட்டனவாக வருதலானும், ஒரு சாரன பெயர், வினைகள், திணைபால் இடம் கால முதலியவற்றைக் காட்டுதற் குரியஉறுப்பாக இடப்படுதலானும், பொதுவாக இவையாவும் இடைச் சொல் என்னும் காரணக்குறியீடு பெற்றன. ஆதலின், இடை என்னும் சொல் இடுங்குதல், இடை நிகர்த்தல், இடப் படுதல் என்பவற்றிற்குப் பொதுவாக நின்றது.

புணரியல் நிலையிடைப் பொருள்நிலைக் குதவுவனவாய் வரும் சாரியைகளுள் பலவும், வேற்றுமையுருபுகளுள் பலவும் பெயர், வினைகளின் இடுங்கிய சொற்களாம். இவை பற்றி அவ்வவ்வியல்களுள் ஓரளவு விளக்கப்பட்டது.

கொன், தஞ்சம், அந்தில் முதலியவை பெயர்ப் பொருட்டா யும் வினைப்பொருட்டாயும் நிற்றலையும், உவமஉருபிடைச் சொற்கள் வினைப்பொருட்டாய் நிற்றலையும், ஏ, ஓ, மன், தில் முதலியவை பெயர் வினைகட்கு இடைப்பட்டனவாய் நிற்றலையும் கண்டு கொள்க.

அம், ஆம், அன், ஆன், முதலிய ஈற்றிடைச் சொற்கள் திணைபால் இடம் ஆகியவற்றையும்—உம், கு, உ, இன், முதலிய ஈற்றிடைச் சொற்கள் காலம், இடம், ஆகியவற்றையும் த் ட், ற் முதலிய இடைநிற்கும் இடைச்சொற்கள்காலத்தை யும் காட்டற்கு இடப்படுதலையும்கண்டு கொள்க.

மற்று இவை பெயரையும், வினையையும் இடமாகக் கொண்டு தோன்றுதலின், இடச்சொல் என்பதே இடைச்சொல் என்பதாயிற்று என்பார் ஒரு சாரார்.

பெயர்ச்சொல் வினைச் சொற்களுக்கு அடிப்படையாகிய குறைச் சொற்கள் (நிரம்பா உரிச் சொற்கள்) உருவு திரிந்தும் திரியாமலும் நிரம்பிப் பெயர்—வினைகட்கு முதனிலையாய் நிற்குங்கால் அவை உரிச்சொற்க ளாகும. அவை திணைபால் இடம் காலம் காட்டும் இடைச் சொற்களொடு புணர்ந்து முழுமை பெற்ற பின்னரே பெயர்ச் சொல் என்றும் வினைச்

சொல் என்றும் குறியீடு பெற்று நிற்கும். இடைச் சொற்கள் புணராத நிலையில் முதனிலைகளைப் பெயர்ச்சொல் வினைச் சொல் எனக் கூறுதலும் அவற்றை இடமாகக் கொண்டு இடைச் சொற்கள் தோன்றி வரும் என்பதும் மொழி இயல்புக்கும் இந்நூல் நெறிக்கும் பொருந்தாமையறிக. பிற விளக்கங்களை உரியியல் உரையுட் கண்டு கொள்க.

அதனானன்றே ஆசிரியர் பெயரினும் வினையினும் நடை பெற்றியலும் என்னாது "பெயரொடும் வினையொடும்" நடைபெற்றியலும் என உடனிகழ்வதாக ஓதுவாராயினர் என்க.

இடையியல்

இடைச் சொற் பொது இலக்கணம்

***244 இடையெனப் [1]படுப பெயரொடும் வினையொடு**
நடைபெற் றியலுந் தமக்கியல் பிலவே. (1)*

(இடை எனப்படுப பெயரொடும் வினையொடும்
நடைபெற்று இயலும் தமக்கு இயல்பு இல ஏ)

ஆங்கில மொழிபெயர்ப்பு.
இலக்குவனார்.

The morphemes are to be used along
with the nouns and verbs They have no
independent existence.

ஆல்பெர்ட்.

Bound morphemes occur along with nouns and verbs;
they do not occur independently.

பிற்கால இலக்கண நூல்கள்.

நன்னூல். 420.

....
பெயரினும் வினையினும்...
ஒன்றும் பலவும் வந்து ஒன்றுவது இடைச்சொல்

---

1. படுவ—பாடம்

* சூத்திரத் தொடக்கத்தில் உள்ள எண் தொல்காப்பியச் சொல்லதிகாரத் தொடர்எண்; சூத்திரத்தின் இறுதியில் உள்ள எண் இடையியல் தொடர் எண்.

இலக்கண விளக்கம் 251.

....
பெயரினும் வினையினும்......
ஒன்றும் பலவும்வந்து ஒன்றுவது இடைச்சொல்.

தொன்னூல் விளக்கம். 130.

இடைச்சொல் தனிநிலையின்றி...
வினைபெயர் சேர்ந்து...எஃகூற்றவை என்ப.

முத்துவீரியம் ஒழிபியல். 0.

பெயர்வினை யிடத்துப் பிறப்பது இடைச்சொல்.

இளம்பூரணர்.

என்பது சூத்திரம்.

*இச்சூத்திரம் இடைச்சொற்கெல்லாம் பொதுவாயதோர் இலக்கணம் உணர்த்துதல் நுதலிற்று.

1அதுமன் (புறம் 147) என்பது பெயரொடு நடைபெற்றது.

'தமக்கியல்பிலவே' என்றதனான், இடைச் சொற்கள் 2பகவின்றியே நின்றிசைப்பனவும் உள என்றவாறு.

---

* இச்சூத்திரத்திற்குஉரை காணப்படவிலலை. பினனரும பல சூத்திரங்களுக்கு உரையில்லை. வரலாறு தொடங்கியே சிறப்புரைகள் காணப்படுகின்றன.

1. மன் என்னும் இடைச்சொல் அது என்னும் சுட்டுப் பெயரொடு வந்துளது. வினையொடு இடைச்சொல் வந்ததற்கு உதாரணம் காட்டப்படவில்லை. 'வருகதில் அம்ம' (அகம் 276) என்பதில் தில் என்னும் இடைச் சொல் வருக என்னும் வினைச் சொல்லுடன் வந்துளது.
2. பகவின்றி—பிரிக்கப்படுதலின்றி; உண்டான் என்பதில் இறந்தகால இடைநிலை டகர ஒற்றும் விகுதி ஆன் என்பதும் இடைச் சொற்கள். இவை உண் என்பதுடன் சேர்ந்து பிரிக்கப்படாமல் ஒரே சொல்லாய் வந்தது காண்க. அதுமன், வருகதில் என்பனவற்றில் மன், தில் என்பன அது, வருக என்பனவற்றிற்குப் புறமாக நிற்றல் காண்க.

வரலாறு:—உண்டான் என்னுந் தொடக்கத்தன.

சேனாவரையர்.

இதன் பொருள்: இடைச்சொல் என்று சொல்லப்படுவன பெயரொடும் வினையொடும் வழக்குப் பெற்றியலும்; தாமாக நடக்கும் இயல்பு இல என்றவாறு.

3"இடைச்சொற் கிளவியும் உரிச்சொற் கிளவியும், அவற்று வழி மருங்கிற்றோன்றும்" (பெயரியல் 5.) என்றதனான் இடைச்சொல் பெயரும் வினையும் சார்ந்து வருதல் பெறப்பட்டமையான் 'பெயரொடும் வினையொடும் நடைபெற்றியலும் தமக்கியல்பில்' என்றது, ஈண்டுப் பெயரும் வினையும் உணர்த்தும் பொருளைச் சார்ந்து நின்று அவற்றை வெளிப்படுப்பதல்லது தமக்கெனப் பொருளுடையனவல்ல என்றவாறாம்.

உதாரணம்: 'அது கொல் தோழி காமநோயே' (குறுந். 5) எனவும், 'வருகதில்லம்மவெஞ் சேரிசேர' (அகம் 276) எனவும் பெயரும் வினையும் சார்ந்து அப்பொருளை வெளிப்படுத்தவாறு கண்டு கொள்க.

4சார்ந்து வருதல் உரிச்சொற்கும் ஒத்தலின், தமக்கெனப் பொருளின்மை இடைச் சொற்குச்சிறப்பிலக்கணமாம்.

'தமக்கியல்பிலவே' என்றது சார்ந்தல்லது வாராவென வலியுறுத்தவாறு. 'பெயரொடும் வினையொடும் நடைபெற்றியலும் தமக்கியல்பில் எனப் பொதுப்படக் கூறியவதனால் 5சாரப்படும் சொல்லின் வேறாய் வருதலேயன்றி உண்டனன்

---

3. 'பெயரியலில் இடைச் சொல் (உரிச்சொல்லும்) பெயர் வினைகளைச் சார்ந்து வரும் என்பது கூறப்பட்டது. ஈண்டு இடைச்சொல் பெயர்ப் பொருளையும் வினைப் பொருளையும் சார்ந்து வரும் என்பது கூறப்பட்டது.' என்பது இப்பகுதியின் விளக்கம்.

4. உரிச்சொற்கள் தமக்கெனப் பொருளுடையன. உறு என்னும் உரிச்சொல் 'உறுபொருள்' என்ற விடத்து மிகுதி என்னும் பொருள் தருதல் காண்க.

5. சாரப்படும் சொல்லின் வேறாய் வருதல்–அதுமன், வருகதில் என்பன போலச்சொல்லின் புறமாக வருதல், சாரப்படும் சொல்லிற்கு உறுப்பாய் வருதல், இடைநிலை, சாரியை, விகுதிகளாகச் சொல்லின் அகத்தே வருதல்.

உண்டான் எனவும், என்மனார் என்றிசினோர் எனவும், அருங் குரைத்து (புறம்.5) எனவும் அவற்றிற்கு உறுப்பாய் வருதலும் கொள்க.

இனி ஓர் உரை:— 6இடைச் சொற்கிளவியும் உரிச்சொற் கிளவியும் அவற்றுவழி மருங்கிற்றோன்றும்' என்பதற்குச் சார்ந்து வருதலான் இடைச்சொல்லும் உரிச்சொல்லும் சிறப் பில; இவையுட்படச் சொல் நான்காம் என்பது கருத்தாகலின், இடைச்சொல் பெயரும் வினையும் சார்ந்து வரும் என்னும் வேறுபாடு அதனாற் பெறப்படாது. என்னை? இடைச்சொல் பெயர் சார்ந்தும் உரிச்சொல் வினை சார்ந்தும் வரினும் அவற் றது சிறப்பின்மையும், சொல் நான்காதலும் உணர்த்துதல் சிதையாது ஆகலான். அதனான் இடைச்சொல் பெயரும் வினை யும் சார்ந்து வரும் என்பது இச்சூத்திரத்தாற் கூறல் வேண்டும் என்ப. அவ்வுரைவுரைப்பார் 'பெயரினும் வினையினும் மெய் தடுமாறி' (உரி.1) என்பதற்கும், 'பெயரும் வினையும் சார்ந்து' என்று பொருளுரைப்ப.

தெய்வச்சிலையார்.

'இடையெனப்படுப...தமக்கியல்பிலவே' என்பது இடைச் சொல் இலக்கணம் உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள்: இடைச்சொல் என்று சொல்லப்படுவன பெயரோடு கூடியும் வினையோடு கூடியும் வழக்குப் பெற்றியலுமல்லது தமக்கென வழக்கில, எ-று.

என்றது, மேல் அதிகரிக்கப்பட்ட சொல்நான்கினுள் இடைச் சொல்லாவது பெயரும் வினையும் போலத் தனித்தனி பொரு ளுணர உச்சரிக்கப்படாது; பெயர் வினைகளைச் சார்ந்து புலப் படும். எ—று

---

6 'இடைச் சொல்லும் உரிச்சொல்லும் பெயர் வினையிட மாகத் தோன்றும்' என்பது இச்சூத்திரப் பொருள். இதனைப் 'பெயர்ச்சொல் இடமாக இடைச்சொல்லும் வினைச்சொல் இடமாக உரிச்சொல்லும் தோன்றும்' எனவும் பொருள் கொள்ளலாம். அப்படியானால் இடைச்சொல் பெயரிடமாகத்தான் தோன்றும் என் பதுபடும். வினைச்சொல் இடமாகத் தோன்றாது என் றாகிவிடும். அதனால் இரண்டிடமாகவும் தோன்றும் என்பது இங்குச் சொல்லவேண்டுவதாயிற்று. உரிச் சொல் இரண்டையும் சார்ந்து வரும் என்பதைப் பெய ரினும் வினை மெய்தடுமாறி வரும் என்றார்.

பெயரும் வினையும் இடமாக நின்று பொருள் உணர்த்து தலின் இடைச்சொல்லாயிற்று.

மேற்பெயரியலுள்ளும் 'அவற்று வழி மருங்கிற் றோன்றும் (பெய.5) என ஓதி, ஈண்டும் இவ்வாறு கூறுதல், கூறியது கூற லாம் பிறவெனின், ஆண்டு[1] தோற்றுவாய் செய்தார் ஈண்டு[2] இலக்கணம் கூறினார் என்க. [3]'பெயரொடும் வினையொடும் நடைபெற்றியலும்' என்றதனால், பொருள் உணர்த்தும் வழிப் பெயர்ப் பொருண்மையுணர்த்தியும், வினைப் பொருண்மை யுணர்த்தியும் வருவதல்லது வேறு பொருள் இலது என்றுமாம்.

நச்சினார்க்கினியர்.

இச்சூத்திரம் இடைச்சொற்கெல்லாம் பொது இலக்கணம் கூறுகின்றது.

இ—ள்: இடை எனப்படுப—இடைச்சொல் என்று சொல லப்படுவன, பெயரொடும் வினையொடும் நடைபெற்றியலும்- பெயரும் வினையும் உணர்த்தும் பொருளைச் சார்ந்து நின்று அவற்றையே வெளிப்படுத்துநடக்கும், தமக்கு இயல்புஇல-தமக் கென வேறோர் பொருளை உணர்த்தும் இலக்கணமுடைய வல்ல, எ—று.

முன்னும் பின்னும் நிற்குமேனும் பெரும்பான்மையும் இடையே நிற்றலின் இடைச்சொல் என்றார்.

உ—ம்: 'அதுகொல்தோழி காமநோயே' (குறுந்.5) 'வருக தில்லம்ம வெஞ்சேரி சேர' (அகம்.276) எனப் பெயரும் வினை யும் சார்ந்து நின்று அவற்றின் பொருளை விளக்கின.

தமக்கு இயல்பில எனப் பொதுப்படக் கூறியவதனால் சாரப்படும் சொல்லின் வேறாய் நிற்றலேயன்றி, உண்டான், என்றிசினோரே, அருங்குறைத்து என்பனவற்றிற்கு உறுப் பாய் வருதலுங் கொள்க.

---

1 தோற்றுவாய் செய்ததாவது 'இடைச்சொல் பெயர் வினைவழி வரும்' எனக் கூறியது.

2 இலக்கணம் கூறியதாவது 'இடைச்சொல் பெயர் வினையைச் சார்ந்து தனக்கெனப் பொருளின்றி வரும்' என்றது.

3 இப்பொருள் சேனாவரையர் கொண்டது. இதனையும் இவர் உடன்பட்டார்.

கல்லாடனார்.

இச்சூத்திரம் என்னுதலிற்றோவெனின், இடைச்சொற்கு எல்லாம் பொதுவாயதோர் இலக்கணம் உணர்த்துதல் நுதலிற்று.

இ—ள்: இடைச்சொல் என்று சொல்லப்படுவன பெயர்ச் சொல்லோடும் வினைச்சொல்லோடும் வழக்குப் பெற்று நடக்கும்; அவ்வாறு அவற்றோடு நடத்தலல்லது தாமாக நடக்கும் இயல்பில, எ—று

உ-ம்: அதுமன், வருகதில் அம்ம எனவரும்.

'தமக்கியல்பில' என்றதனான் பெயரோடும் வினையோடும் அவ்விடைச்சொற்கள் வருவழிச் சொற்புறத்து வழி வருதலும் அச்சொல்வழி வருதலும் என இருவகைத்து என்பது பெறப்பட்டது.

உ—ம்: வருகதில், உண்டான் எனவரும். இவை வினை. அதுமன், மற்றையது எனவரும். இவை பெயர்.

மற்று இச்சூத்திரத்தின் பொருண்மையும் இலேசின் பொருண்மையும் 'இடைச்சொற்கிளவியும் உரிச்சொற் கிளவியும்' என்ற சூத்திரத்துள்ளும் அதன் இலேசினுள்ளும் அடங்குமால் எனின், அது நிரல்நிறை வாய்பாட்டதாக பாற் பெயரெனப்பட்டு வரும் என்றும் வினையொடு உரிவரும் என்றும்கொள்ளக்கிடந்தமையின், இடையும் இரண்டொடும் வரும் என்றற்குக் கூறினார் என்பது.

இனி அவ்விலேசு நிரனிறைச் சூத்திரத்த தாகலாற் புறத்து வழி வருதல் இடைச்சொற்காகவும் உள்வழி வருதல் உரிச்சொற்காகவும் கொள்ளக் கிடக்கும் என்பது கருதி, ஈண்டும் இருவகையானும் இடைவரும் என்பதற்கு இலேசு கூறினார் போலும்.

வெள்ளை வாரணனார்.

இஃது இடைச்சொற்கெல்லாம் பொதுவிலக்கணம் கூறுகின்றது.

இ—ள்: இடைச்சொல் என்று சொல்லப்படுவன பெயரொடும் வினையொடும் வழக்கிற் பொருந்தி நடக்கும்; தாமாக நடக்கும் இயல்பு இல. எ—று

பால.

கருத்து: என என்னும் இடைச்சொல்லின் பொருட் குறிப்பு இவை என்கின்றது.

பொருள்:- என என்னும் இடைச்சொல், வினைப் பொருண்மையும், குறிப்புப் பொருண்மையும், இசைப் பொருண்மையும், பண்புப் பொருண்மையும், எண்ணுதற் பொருண்மையும் பெயர்ப்பொருண்மையும் ஆகிய ஆறும் குறித்த சொற் பொருளைக் கருதி வரும் நிலைமையதாகும்.

வினை முதலிய அறுவகைப் பொருள்தரும் சொற்களைப் பொருந்த அவற்றையே தன் பொருளாகக் கொண்டு வருமென்பார் "அவ்வறு கிளவியும் கண்ணிய நிலைத்தே" என்றார்.

எ-டு:

1. மலைவான் கொள்கென உயர்பலிதூஉய் எனவும்
2. துண்ணெனத் துடித்தது மனம் எனவும்
3. ஒல்லென ஒலிக்கும் கடல் எனவும்
4. வெள்ளென விளர்த்தது வானம் எனவும்
5. நிலனென நீரெனத் தீயென வளியென வானெனப்பூதம் ஐந்து எனவும்
6. அழுக்காறெனவொரு பாவி எனவும்

முறையே வந்தவாறு கண்டு கொள்க.

'எனல்' என்பதன் அடியாகப் பிறந்த 'என' என்னும் செய வென்னெச்சம் வேறு இவ்இடைச் சொல்வேறு என அறிக.

என்று

254. என்றென் கிளவியு மதனோ ரற்றே. (11)

(என்றுஎன் கிளவியும் அதன் ஓர் அற்றுஏ)

ஆ. மொ.

இல.

The morpheme 'enṛu' is of the same nature (as that of 'ena')

ஆல்.

The morpheme /eṉṟu/ does the same.

'இடைச்சொற்கிளவியும் உரிச்சொற்கிளவியும் அவற்றுவழி மருங்கிற்றோன்றும்' (பெய.5) என்றதனால் இடைச்சொல் பெயரும் வினையும் சார்ந்துவரும் என்பது பெறப்பட்டது.

'பெயரொடும் வினையொடும் நடைபெற்றியலும்' என ஈண்டு மீண்டும் கூறியது, 'பெயரும் வினையும் உணர்த்தும் பொருளைச் சார்ந்து நின்று அவற்றை வெளிப்படுப்பதல்லது தமக்கெனப் பொருளுடைய வல்ல என்றவாறு' என இதன் பொருளை விளக்குவர் சேனாவரையர். எனவே இடைச்சொற்கள் பொருளுணர்த்தும் வழித் தமக்கெனப் பொருளின்றிப் பெயர்ப் பொருண்மையுணர்த்தியும் வினைப்பொருண்மையுணர்த்தியும் அவற்றைச் சார்ந்தல்லது தனித்து வாரா என வலியுறுத்தவாறு.

உ—ம்: 'அது கொல்தோழி காமநோயே' எனவும்,

'வருகதில் அம்ம எம் சேரி சேர' எனவும்

கொல், தில் என்னும் இடைச்சொற்கள் முறையே பெயரையும் வினையையும் சார்ந்து நின்று அப்பொருளை வெளிப்படுத்தவாறு காண்க.

பெயரையும் வினையையும் சார்ந்து வருதல் இடைச்சொற்கும் உரிச்சொற்கும் உரிய பொது விலக்கணம். தமக்கெனப் பொருளின்மை இடைச்சொற்குச் சிறப்பிலக்கணமாகும்.

'பெயரொடும் வினையொடும் நடைபெற்றியலும் தமக்கியல்பில' எனப் பொதுப்படக் கூறியவதனால் இடைச்சொற்கள் தம்மாற் சாரப்படும் சொல்லின் வேறாய் வருதலேயன்றி, உண்டனன், உண்டான் எனவும், என்மனார், என்றிசினோர் எனவும், அருங்குரைத்து எனவும் அச்சொற்கு உறுப்பாய் வருதலும் கொள்ளப்படும்.

ஆதித்தர்:

இடைச்சொல் பெயரொடும் வினையொடும் சேர்ந்து பயிலப்பெறும், தனியாகப் பயிலப்பெறும் இயல்பு இல்லை.

எனப்படுப—என்பவை; பகுதிப் பொருள் விகுதி நடைபெறுதல் வழங்கப் பெற.

விளக்கம் முன் கூறியவற்றிற் காண்க.

சுப்பிரமணிய சாஸ்திரியார் :

'பெயரொடும்... தமக்கியல்பில' என்பதன் பொருள் :- சேனாவரையர், 'ஈண்டுப் பெயரும் வினையும் உணர்த்தும்

பொருளைச் சார்ந்து நின்று அவற்றை வெளிப்படுப்பதல்லது தமக்கெனப் பொருளுடையவல்ல' என்று கூறுகின்றார். நச்சினார்க்கினியரும் அவ்வாறே கூறுகின்றனர். அஃதாவது இரண்டாம் வேற்றுமைப் பொருள் முதல் ஏழாம் வேற்றுமைப் பொருள் வரையில் ஆறு வேற்றுமைப் பொருள்களும் முடியப் பெறுந் தகுதி மரம் முதலிய பெயர்களுள்ளே இருத்தலால் 'மரத்தை' என்னுமிடத்து 'ஐ' உருபு மரம் செயப்படுபொருளே யன்றிக் கருவி முதலியன அன்று என்பதைக் காட்டும். அவ்வாறே விகுதிகளும் பகுதிப் பொருளையே காட்டும் என்பது. அது வேற்றுமை யுருபுகளின் விஷயத்து ஒருவாறு பொருந்தினும் விகுதி விஷயத்தைக் குறித்து ஆராய்வோமாயின் பொருந்தாமை காணலாம். 'தீமையன்' என்னுமிடத்து, 'தீமை' என்ற சொல் பண்பைக் குறிக்கும். 'அன்' என்பது பண்பியைக் குறிக்கும். தீமை என்பதிலேயே பண்பியைக் குறிக்கத் தகுதி இருக்கின்றது என்று கூறுவது பொருத்தம் இன்று. அம்முறையே 'நடந்தான்' என்னுமிடத்தும் 'நட' என்பது தொழிலையும், 'ஆன்' என்பது அத்தொழிலைச் செய்பவனையும் குறித்தலால், 'நட' என்றபகுதியே செய்பவனையும் காட்டத் தகுதியுடைத்து என்பது பொருத்தமின்று. தீமையன் நடந்தான் முதலிய இடங்களிற் போலவே 'மரத்தை' முதலிய இடங்களிலும் மரம் என்பது மரமாகிய பொருளைக் குறிக்கும்; ஐ முதலியன செயப்படு பொருள் கருவி முதலியவற்றில் ஒன்றாம் என்பதைக் குறிக்கும் என்று கூறுவதே சால்புடைத்து. பெயர், வினை இவற்றின் புறத்தில் வரும் அந்தில், தஞ்சம் என்பனவற்றிற்குத் தனியே பொருள் உள என்பது வெளிப்படை.

இச்சூத்திரம் இடைச் சொல்லின் இலக்கணம் கூறுவதன்று. 'தமக்கியல்பிலவே' என்பதற்கு உரைகாரர்கள் கூறிய பொருளும் பொருத்தம் இன்று. எனின், இச்சூத்திரத்தின் பொருள்தான் யாது என்ற ஐயம் தோன்றலாம். அதற்கு விடை :—

'இடைச் சொற் கிளவியும்' என்ற சூத்திரம், இடைச்சொல் என்பது வெளிப்படையாயும் குறிப்பாயும் பெயரொடும் வினையொடும் சார்ந்து வரும் என்பதை உணர்த்த, இச்சூத்திரம் மரம், காளை, நட, போ, வேறு முதலிய பெயர் வினைகளைப் போல் இடைச்சொல் தனித்து நின்று பொருள் விளக்காது என்று உணர்த்துகின்றது என்னலாம். ஈண்டுப் பெயரொடும் வினையொடும் நடைபெற்றியலும் என்பது அனுலதிக்கப் பட்டது என்க.

'இடைச் சொற்கிளவியும் உரிச்சொற் கிளவியும், அவற்று வழி மருங்கிற் தோன்றும் என்ப' (பெய. 5) என்ற சூத்திரத்தால் இடைச்சொல் உரிச்சொல் இரண்டும் பெயர், வினை இவற்றைச் சார்ந்து வரும் என்பது கூறப்பட்டமையின், அவற்றுள் ஒன்றற்கொன்று வேற்றுமையாதெனின், இடைச்சொல் பெயர் வினைகளிடத்துச் சார்ந்த சொல்லாய் [1]அப்பிரதானமாய் இருக்கும் என்றும், உரிச்சொல் அவற்றின் பகுதியாய்ப் பிரதானமாய் இருக்கும் என்றும் அறிக. உரிச்சொல்லைப் பற்றி விரிவாய் உரியியலிற் கூறப்படும்.

சிவலிங்கனார் :

பெயரியலில் பெயர்ச்சொல் வினைச்சொல் எனச் சொல் இரண்டு என்பதும் அவற்றினிடமாக இடைச் சொல்லும் உரிச் சொல்லும் வரும் என்பதும் எனவே சொல் நான்கு வகைப்படும் என்பதும் கூறப்பட்டன. இச்சூத்திரமும் இடைச்சொல் பெயர் வினைகளோடு சார்ந்து வரும் என்பது கூறுகின்றது. அதனால் கூறியது கூறலாகும் இச்சூத்திரம். எனவே இதற்குத் தனிப் பொருள் கூறவேண்டும் எனக்கருதி உரையாளர்கள் உரை கூறினர். அவ்வுரை மூன்று வகையில் அமைகிறது.

1. பெயரியலில் கூறிய போது இடையுரிகள் பெயர் வினைகளைச் சார்ந்து வரும் என்றார். அதன் பொருள் காணும் போது பெயரை இடையும் வினையை உரியும் சார்ந்து வரும் என்றும் கொண்டு விடலாமாதலின் அதை விலக்குதற்கு இச்சூத்திரம் இடைச்சொல் பெயரையும் வினையையும் சார்ந்து வரும் எனக் கூற வேண்டுவதாயிற்று.

2. பெயரியலில் இடைச்சொல் பெயரையும் வினையையும் சார்ந்து வரும் என்றது சொல்லளவில் கூறப்பட்டது; பொருளளவில் கூறப்பட்டதன்று. இச் சூத்திரத்தில் 'இடைச்சொல் தனக்கெனத் தனிப் பொருளின்றிப் பெயர்ப் பொருளையும் வினைப் பொருளையும் சார்ந்து அவற்றின் பொருளே தனக்கும் பொருளாக வரும், என்பது கூறப்பட்டது.

3. கொற்றன், மரம் எனப் பெயர்ச் சொல்லும் வந்தான், போனான் என வினைச் சொல்லும் தனித்து நின்று பொருள் உணர்த்துதல் போல் இடைச் சொல்லானது மன் தில் எனத் தனித்து நின்று பொருளுணர்த்தாது; பெயரொடும் வினை

1. அப்பிரதானம் முதன்மையில்லாதது—சிறப்பில்லாதது.

யொடும் சார்ந்து நின்றே பொருளுணர்த்தும் என்பது இச் சூத்திரத்திற் கூறப்பட்ட கருத்து.

மூன்றாவது கருத்து சுப்பிரமணிய சாஸ்திரியார் கூறியது. மூன்று கருத்துகளையும் ஏற்று இச்சூத்திரக் கருத்தைப் பின் வருமாறு கூறலாம்:—

"இடைச் சொல்லாவது தனித்து நின்று பொருளுணர்த் தாது, பெயரொடும் வினையொடும் சார்ந்து பெயர்ப் பொரு ளையும் வினைப்பொருளையும் தனக்குரியதாகக் கொண்டு வெளிப்படுத்தி நிற்பதாம்."

ச. பாலசுந்தரம்

கருத்து :— நிறுத்த முறையானே இடைச்சொற்களின் இலக்கணங் கூறத் தொடங்கி இச்சூத்திரத்தான் அவற்றது பொதுவியல்பாமாறு கூறுகின்றார்.

பொருள்:— இடைச்சொல் என்று கூறப்படுபவை பெய ரொடும் வினையொடும் வழங்குதலைப் பெற்றியலும், அவை தாமாக நடக்கும் இயல்பில்லாதன. பால் முதலியவற்றைக் காட்டும் இடைச்சொற்களொடு கூடாமல் நிற்கும் முதனிலைச் சொற்கள் யாவும் உரிச் சொற்களேயாயினும் ஆ, கா, பூ என் றாற்போலவும் வா, போ, கா, என்றாற் போலவும் வருமிடத்து வினை முதற் பொருள்தரும் இடைச்சொல்லும், ஏவற்பொருள் தரும் இடைச் சொல்லும் குன்றி நின்று பெயராயும், வினை யாயும் வரும் ஓரெழுத்து ஒரு மொழியாய் சொற்கள் இருவகை வழக்கினும் நடைபெறுதலானும், தத்தம் பொருளவாய் வரும் இடைச் சொற்களும் வேற்றுமை உருபுகளும், பெயர் வினை களைச் சார்ந்து வருதலானும் பொதுப்படப் பெயரொடும் வினையொடும் என்றார்.

இதனைப் பின்னர் ஆசிரியர்,

"அவ்வச் சொல்லிற் கவையவை பொருளென
மெய் பெறக் கிளந்த இயல வாயினும்
வினையொடும் பெயரொடும் நினையத் தோன்றித்
திரிந்து வேறு படினும்தெரிந்தனர் கொளலே" (இடை—47)

எனக் கூறுதலான் அறியலாம்.

பெயரொடும் வினையொடும் நடைபெறுதலாவது:—

அவற்றிற்கு உறுப்பாகி ஒருங்கு இயலுதலும் அவற்றைச் சார்ந்து இயலுதலுமாம்; "தமிக்கியல்பிலவே" என்றது தனித்து நின்று தம் பொருள் உணர்த்தா என்றவாறாம்.

பெயரொடும் வினையொடும் என்றது 'வழிமொழிதல்' அவற்றுவழி மருங்கிற்றோன்றும் என்ப (பெயரியல்-5) என்றதனான் இக்கருத்துப் பெறப்படுமாயின் அவற்றொடு ஒருங்கு வரும் என்பதும் ஈற்றினும் இடையினும் அவற்றிற்கு உறுப்பாக வருமென்பதும் பெறப்பட வைத்தல் இதன் பயனாகும்.

அன்றியும் அச்சூத்திரம் இடைச்சொல் பெயரொடும் உரிச்சொல் வினையொடும் வரும் என நிரனிறையாகப் பொருள் கோடற்கும் ஏற்பநிற்றலான் அதன் பொருள் புலப்பட ஈண்டு விதந்தோதினார் என்க. அன்றியும் இடைச் சொற்களின் தலையாய இலக்கணமாகிய ''தாமாக நடக்கும் இயல்பில" என்பதற்குப் ''பெயரொடும் வினையொடும் நடைபெற்றியலும்" என்பது அவாய் நிலையாக நிற்றலின் இங்ஙனம் கூறுதல் கடப்பாடாதலையும் அறிக:

எ. டு:— அது கொல் தோழி காமநோயே—கொன்னே கழிந்தன்றிளமை என இவை பெயரொடும் வினையொடும் சார்ந்து வந்தன. மலையன், உண்டான், கரியன் என இவை அவற்றிற்கு உறுப்பாய் வந்தன பிறவும் அன்ன.

இடைச் சொற் பாகுபாடு

245. அவைதாம்
புணரிய னிலையிடைப் பொருணிலைக் குதநவும்
வினைசெயன் மருங்கிற் காலமொடு வருநவும்
வேற்றுமைப் பொருள்வயி னுருபா குநவு
மசைநிலைக் கிளவி யாகி வருநவு
மிசைநிறைக் கிளவி யாகி வருநவுந்
தத்தங் குறிப்பின் பொருள்செய் குநவு
மொப்பில் வழியாற் பொருள்செய் குநவுமென்
றப்பண் பினவே நுவலுங் காலை. (2)

(அவைதாம்
புணரியல் நிலையிடைப் பொருள்நிலைக்கு உதநவும்
வினைசெயல் மருங்கின் காலமொடு வருநவும்
வேற்றுமைப் பொருள்வயின் உருவு ஆகுநவும்
அசைநிலைக் கிளவி ஆகி வருநவும்
இசைநிறைக் கிளவி ஆகி வருநவும்
தம்தம் குறிப்பின் பொருள்செய் குநவும்
ஒப்புஇல் வழியால் பொருள்செய் குநவும் என்று
அப்பண்பின ஏ நுவலும் காலை.)

ஆ. மொ:

They are,
those which help to give the proper meanings in the joining of words;
those which denote tenses in the making of verbs;
those which serve as case signs in declensions of nouns;
those which serve as expletives in the formation o words;
those which serve as particles of euphony in the formation of words;
those which serve as symbol of ideas and those which convey sense by means of comparison.
These are the nature of morphemes if defined.

ஆல்.

On examination they show the following functions. They appear in between words giving meaning as they join, appear with verbs when they show time, appear as markers in showing the casee, as empty morphs, as euphonic fillers, onomatopoeic words and as the morphemes that give the se nse in comparisons.

பி, இ. நா.

வீரசோழியம். 69.

இல்லை உண்டு ஆல் இல் இவை முதலா இடைச் சொற் களுக்கோர்
எல்லை யுண்டாக இயற்ற வொண்ணா இசையும் பொருளும்
ஒல்லை யுண்டாக நிற்கும் இடமும் தேர்ந்து இவற் றோடொக்கச்
சொல்லை யுண்டாக்குக என்பது நூலின் துணி பொருளே.

நேமி நாதம் சொல். 50.

சாரியையாய் ஒன்றல் உருபாதல் தங்குறிப்பின்
நேரும் பொருளாதல் நின்றசையாய்ப்—போர்தல்
வினைச்சொற்கீ றாதல் இசை நிறைத்து மேவல்
அனைத்தே யிடைச்சொல் அளவு.

நன்னூல் 420.

வேற்றுமை வினைசா ரியையொப் புருபுகள்
தத்தம் பொருள இசைநிறை யசைநிலை
குறிபெண்ணெண் பகுதியின் தனித்திய லின்றிப்
பெயரினும் வினையினும் பின்முன் ஓரிடத்து
ஒன்றும் பலவும் வந்து ஒன்றுவது இடைச்சொல்.

இலக்கண விளக்கம். 251.

வேற்றுமை வினைசா ரியையொப் புருபுகள்
தத்தம் பொருள இசைநிறை யசைநிலை
இத்திறம் ஏழில் தனித்தியல் இன்றிப்
பெயரினும் வினையினும் பின்முன் ஓரிடத்து
ஒன்றும் பலவும்வந் தொன்றுவ திடைச்சொல்.

தொன்னூல் விளக்கம். 130.

இடைச்சொல் தனிநிலை யின்றி முன்பின்
வினை பெயர் சேர்ந்து வேற்றுமை சாரியை
வினை யொப் புருபுகளும் விளங்குதம் பொருளவும்
இசைநிறைப் பனவும் அசைநிறைப் பனவும்
குறிப்பும் எனஎண் கூற்றவை என்ப.

முத்துவீரியம் ஒழிபியல் 1.

வேற்றுமை வினைசா ரியையொப் புருபுகள்
இசைநிறை யசைநிலை இருமூன்று திறத்தன.

இளம்.

* வ-று: புணரியல் நிலையிடைப் பொருள்நிலைக்கு உதவுவன. ''இன்னே வற்றே'' (எழு. புணரியல் 17) என்னுந் தொடக்கத்தன.

1வினைசெயல் மருங்கின் காலமொடு வருவன: ''அன் ஆன்,'' (வினை. 8), ''அம் ஆம்'' (வினை. 5) என்னுந் தொடக்கத்தன.

---

* வ-று விளக்கங்களைப் பிற உரையாளர் உரைகளிற் காண்க.

1. வினைசெயல்— பகுதிவிகுதி இடைநிலை சாரியை முதலியவாக வினைச் சொல்லை யமைத்தல். கால மொடுவருவன: காலமும் அதனுடன் வரும் விகுதி முதலியவுமான இடைச் சொற்கள். உண்டான் என்பதில் (உண்+ட்+ஆன்) டகரக்கால எழுத்தும் ஆன் விகுதியும் இடைச் சொற்கள்.

வேற்றுமைப் பொருள்வயின் உருபாவன: ஐ, ஒடு, கு, இன், அது, கண், விளி (வேற். 3) என்னுந் தொடக்கத்தன.

அசைநிலைக் கிளவி: கேண்மியா, கண்டிகும் (புறம். 251) என்னுந் தொடக்கத்தன.

1 மற்றையன முன்னே விரிக்கின்றார்.

சேனா.

இ-ள்: மேற் சொல்லப்பட்ட இடைச் சொற்கள் தாம், இரண்டு சொற் புணருமிடத்து அப்பொருள் நிலைக்குதவு வனவும், வினைச் சொல்லை முடிக்கு மிடத்துக் காலப் பொருள வாய் வருவனவும், செயப்படு பொருள் முதலாகிய வேற்றுமைப் பொருட்கண் உருபு என்னும் குறியவாய் வருவனவும், பொரு ளுடையனவன்றிச் சார்த்திச் சொல்லப்படுந் துணையாய் வருவனவும், வேறு பொருளுணர்த்தாது இசை நிறைத்தலே பொருளாக வருவனவும், தத்தம் குறிப்பிற் பொருளுணர்த்து வனவும், ஒப்புமை தோன்றதாவழி அவ்வொப்புமைப் பொருள் பயப்பனவும் எனக் கூறப்பட்ட ஏழியல்புடைய சொல்லு மிடத்து, எ—று.

புணரியல்நிலை—புணரியலது நிலை. ஆண்டுப்பொருள் நிலைக்கு உதவுதலாவது, 'எல்லாவற்றையும்' என்புழி வற்றுச் சாரியை நிலைமொழிப் பொருள் அஃறிணைப் பொருள் என்பது பட வருதலும், எல்லா நம்மையும் என்புழி நம்முச் சாரியை அப்பொருள் தன்மைப் பன்மையென்பது படவருதலு மாம். அல்லனவும் தாம் சார்ந்து வரும் மொழிப் பொருட்கு உபகார முடையவாய் வருமாறு ஓர்ந்து கொள்ளப்படும். அல்லாக்கால் சாரியை மொழியாகா வென்பது.

வினைச்சொல் ஒரு சொல்லாயினும் முதல் நிலையும் இறுதி நிலையும் இடைச்சொல்லுமாகப் பிரித்துச் செய்கை செய்து காட்டப்படுதலின், 'வினைசெயல் மருங்கின்' என்றார். அம் முடிபுணர்த்தாமைக்குக் காரணம் 'புணரியல் நிலையிடை யுணரத் தோன்றா(எழு. குற்றி-77)என்புழிச்சொல்லப்பட்டது. அவற்றுள் ஒரு சாரன 2பாலுணர்த்தாமையானும்' 3எல்லாங் காலம் உணர்த்துதலானும் 'காலமொடு வருநவும்' என்றார்.

---

1. மற்றையன: இசைநிறை, குறிப்பிற் பொருள் செய்குந, ஒப்பில் வழியாற் பொருள் செய்குந.
2. பால் உணர்த்தாதன: வியங்கோள், வேறு, இல்லை, உண்டு, பெயரெச்சம், வினையெச்சம் முதலியனவற் றின் விகுதிகள்.
3. எல்லாம் காலம் உணர்த்தலாவது வெளிப்படையாக இடைநிலைகள் காலம் உணர்த்தல்.

வேற்றுமைப் பொருளவாய் வருவன பிற சொல்லும் உள வாகலின் அவற்றை நீக்குதற்கு 'உருபாகுநவும்' என்றார். பிற சொல்லாவன 1 'கண்ணகன் ஞாலம், 'ஊர்க்கால் நிவந்த பொதும்பர்' (குறிஞ்சிக்கலி 20) என ஏழாம் வேற்றுமைப் பொருட்கண் வரும் கண் கால் முதலாயினவும், 'அனையயாகல் மாறே' (புறம். 4) 'இறந்தோன் பெயரன் பிறந்தமாறே,' 'இயலபுளிக் கோலோச்சு மன்னவன்' (குறள். 545) என மூன்றாம் வேற்றுமைப் பொருட்கண்வரும் மாறு, உளி என்பனவும், அன்னபிறவும் ஆம்.

அஃதேல், வேற்றுமையுருபும் என்று ஓதுவார்; ஓதவே 2இவை நீங்கும்எனின், அஃதொக்கும், அவைதம்மையும் தழீஇக் கோடற்கு, 'வேற்றுமைப் பொருள்வயின்' என்றார். 3அவை வருங்கால் நிலைமொழியுருபிற்கேற்ற செய்கை ஏற்புழிப்பெறு தலுடைமையின் 'உருபாகுநவும்' என்றார். 4இஃது இருபொருள் உணர்த்தலான் இருதொடராகக் கொள்க.

---

1. கணணகல் ஞாலம—இடமகன்ற உலகம், ஊர்க்கால் நிவந்த பொதும்பர்—ஊரில் உயர்ந்தெழுந்த சோலை, அனையை யாகல் மாறு—அன்னையை ஆகலான், சிறந்தோன் பெயரன் பிறந்தமாறே-பெயரன் பிறந்த தால் சிறந்தோன், இயல்புளிக் கோலோச்சு மன்னவன். முறையால் கோல் ஓச்சும் மன்னவன்.

2. இவை—கண் கால் முதலியன.

3 நிலைமொழி உருபிற்கேற்ற செய்கை பெறுதலாவது: நீ+கண் > நின் கண் என நீ என்பது கண் உருபுடன் புணரும் போது நின் என்றாவது போலவே கண் உருபின் பொருள்பட வரும் உழை என்பதுடன் சேரும் போதும் நீ+உழை > நின்+உழை என நின் என்றாகும். இதனால் உருபின் பொருள் பட வரும் கால் முதலிய சொற்களையும் உருபு என்றார்.

4. இருபொருள் உணர்த்துமாறு: வேற்றுமைப் பொருள் வயின் உருபாகுந—
(1) வேற்றுமைப் பொருளிடத்து உருபாகி வருவன அவை ஐ, ஆல் முதலியன.
(2) வேற்றுமைப் பொருளிடத்து உருபாக (உருபின் பொருளாக) வருவன. அவை ஏழாம் வேற்றுமையுரு பாகிய கண் என்பதன் இடப் பொருளாக வரும் கால், உழை முதலியன.

அசைத்தல்—சார்த்துதல். பொருளுணர்த்தாது பெயரொடும் வினையொடும் சார்த்திச் சொல்லப்பட்டு நிற்றலின், அசைநிலையாயிற்று. அவை 'அந்தில்' முதலாயின. 'புகழ்ந்திகுமல்லரோ பெரிதே, 'உரைத்திசினோரே' எனச் சார்ந்த மொழியை 1வேறுபடுத்தி நிற்றலின் அசை நிலைச் சொல்லாயின என்பாரும் உளர்.

செய்யுட்கண் இசை நிறைத்து நிற்றலின் இசைநிறையாயின.

குறிப்புச் சொல்லுவான் கண்ணதாயினும் அவன் குறித்த பொருளைத் தாங்குறித்து நிற்றலின் 'தத்தங் குறிப்பின்' என்றார். சொல்லுவான் குறித்த பொருளைத் தாம் விளக்கும் எனவே, 'கூரியதோர் வாள்' என மன்னானன்றி ஓசை மேவறு பாட்டான் ஒரு காற்றிட்பம் இன்று என்னும் தொடக்கத்து ஒழியிசைப்பொருள் தோன்றலும் பெறப்படும். பொருட்கும் பொருளைப் புலனாகவுடைய உணர்விற்கும் ஒற்றுமை கருதி பொருளுணர்வைப் 'பொருள்' என்றார். 'மிகுதி செய்யும் பொருள' (உரியியல் 3) என்பது முதலாயினவற்றிற்கும் ஈதொக்கும்.

ஒக்கும் என்னும் சொல்லன்றே ஒப்புமையுணர்த்துவது; அச்சொல் ஆண்டின்மையான் ஒப்புமை தோன்றாமையான் 'ஒப்பில் வழியால்' என்றார். உவமையோடு பொருட்கு ஒப்பில்லையென்றாரல்லர் என்பது. ஒக்கும் என்னும் சொல்லை ஒப்பு என்றார் என்பாரும் உளர். ஒப்பில் வழியாற் பொருள் செய்குநவாவன: அன்ன, ஏய்ப்ப, உறழ, ஒப்ப என்பன முதலாகப் பொருளதிகாரத்துள் (பொருளதி.346) கூறப்பட்ட முப்பத்தாறனுள் 'ஒக்கும்' என்பது ஒழிய ஏனையவாம்.

சாரியையும் வேற்றுமையுருபும் உவமவுருபும் குறிப்பாற் பொருளுணர்த்துமாயினும், புணர்ச்சிக்கண் உபகாரப்படுதலும் வேற்றுமைத் தொகைக்கும் உவமத் தொகைக்கும் அவ்வுருபு பற்றி இலக்கணங் கூறுதலும் முதலாகிய பயன் நோக்கி இவற்றை வேறு கூறினார்.

---

1. வேறுபடுத்தி நிற்றலின்-அசைத்து நிற்றலின் (அசைத்தல்-சார்த்துதல், வேறு படுத்தல்)

1இடைச்சொல் ஏழனுள்ளும் முதல் நின்ற மூன்றும் மேலே யுணர்த்தப்பட்டமையான் முன் வைத்தார். ஒப்பில் வழியாற் பொருள் செய்குக முன்னர் உணர்த்தப்படுதலின் இறுதிக்கண் வைத்தார். ஒழிந்த மூன்றும் இவ்வோத்தின் கண் உணர்த்தப் படுதலின் இடைவைத்தார்.

தெய்.

இ-ள்: 'அவைதாம் புணரியல் நிலையிடைப் பொருள் நிலைக் குதநவும்' என்பது, மேற் சொல்லப்பட்ட இடைச் சொற்கள் தாம் ஒரு சொல்லோடு ஒரு சொல் புணர்த்தியலும் வழி, அப்பொருள் நிலைக்கு உதவியாகி வருவனவும் என்ற வாறு.

2பொருள் நிலைக்கு உதவலாவது அல்வழிப் பொருட்கு உரியன இவை வேற்றுமைப் பொருட்கு உரிய இவையென வருதல். அவையாவன 'இன்னேவற்றே' (புண 17) என்பன முதலாயின.

அவை சாரியையன்றோவெனின் அவை இடைச்சொல் எனவும் ஒரு குறி பெறும் என்றவாறு.

'வினை செயல் மருங்கிற் காலமொடு வருநவும்' என்றது வினைச் சொன்முடிவு பெறு மிடத்துக் காலங் காட்டும் சொல் லோடு பால் காட்டும் சொல்லும் என்றவாறு. அவையாவன:

---

1. இடைச்சொல் ஏழு: சாரியை, விகுதி, வேற்றுமை யுருபு, அசைநிலை, இசைநிறை, குறிப்பிற் பொருள் செய்வன, உவம உருபு என்பன. சாரியை எழுத்ததி காரத்துப் புணரியல் முதலியவற்றில் கூறப்பட்டது, விகுதி வினையியலிற் கூறப்பட்டது. வேற்றுமையிய லில் வேற்றுமையுருபு கூறப்பட்டது. அசைநிலை, இசைநிறை, தத்தம் குறிப்பிற் பொருள் செய்குக இவ் வியலிற் கூறப்பட்டன. உவம உருபு பின்னர் உவம வியலிற் கூறப்பட்டது.

2. பொருள் என்றதை உயர்திணை அஃறிணைப் பொருள்கள் எனக் கொண்டனர் சேனாவரையரும் நச்சினார்க்கினியரும்.

உண்டனம், உண்டாம், உண்ணா நின்றனம், உண்கின்றனம் உண்பம், உண்குவம் என்புழி இறந்த காலம் குறித்த டகரமும், நிகழ் காலம் குறித்த நின்று கின்று என்பனவும், எதிர்காலம் குறித்த பு, கு என்பனவும், ஆம் ஆம் எனப் பால் காட்டுவன வும், இவ்வாறு வருவன பிறவும் ஆம்.

'வேற்றுமைப் பொருள்வயின் உருபாகுநவும்' என்பது அவ்வேற்றுமைப் பொருளிடத்து உருபாகி நிற்கும் சொற்களும் என்றவாறு. அவையாவன: ஐ, ஒடு, கு முதலிய. இவையும் இடைச்சொல் எனக்குறி பெற்றன.

'அசை நிலைக் கிளவியாகி வருநவும்' என்பது பொருள்பட நில்லாது அசை நிலையாகி நிற்பனவும் என்றவாறு.

'இசை நிறைக் கிளவியாகி வருநவும்' என்பது அசை நிலைக் கிளவி போலப் பிரிந்து நில்லாது ஒரு சொல்லோடு ஒற்றுமைப்பட்டு இசை நிறைத்தற் பொருட்டாகி நிற்பனவும் என்ற வாறு.

'தத்தங்குறிப்பிற் பொருள்செய் குநவும்' என்பது தத்தம் குறிப்பினாற் பொருள் உணர்த்து வனவும் என்றவாறு.

'ஒப்பில் வழியாற் பொருள்செய் குநவும்' என்பது குறிப் பினால் வருதலின்றிய பொருத்தம் இல்லாதவிடத்துப் பொருள் உணர்த்து வனவும் என்றவாறு.

'அப்பண்பினவே நுவலுங் காலை' என்பது அவ்வியல் பினையுடைய சொல்லுங் காலத்து என்றவாறு.

'தத்தங்குறிப்பின்' என்பதற்குச் 'சார்ந்த சொல்லின் குறிப் பினால்' எனவும், 'ஒப்பில் வழி, என்பதனை 'ஒரு சொல் லோடு பொருத்தமின்றித் தனி வந்துழி' எனவும் பொருள் உரைப்பினும் அமையும்.

அஃதற்றாக, 'ஒப்பில் வழி' என்பதற்கு 'ஒக்கும்' என்னும் சொல்வாராத உவமவுருபு எனப் பொருள் உரைப்பவால் எனின், 'ஒப்பினானும பண்பினானும்'என்று—அப்பாற் காலம் குறிப்பொடு தோன்றும் (வினை 16) என்றமையானும், போல, அன்ன,ஏய்ப்ப, உறழ என்பன 'சாத்தன் புலி போலும்' எனவும் 'புலி போலப் பாய்ந்தான்' எனவும், 'புலி போன்ற சாத்தன்' 'புலி போலும் சாத்தன்' எனவும் இவ்வாறு பிறவும் முற்றும், வினையெச்சமும், பெயரெச்சமுமாகி வருதலினாலும் அவை யெல்லாம் வினைக்குறிப்பென்று கொள்க.

அவற்றுள் 'புணரியல் நிலையிடைப் பொருள் நிலைக்கு உதவுந' எழுத்ததிகாரத்துக் கூறப்பட்டன (குற்றிய.) 'வினை செயல் மருங்கிற் காலமொடு வருந' வினையியலுட் கூறப் பட்டன. வேற்றுமைப் பொருள்வயின் உருபாகுந வேற்றுமை யோத்தினுட் கூறப்பட்டன. ஏனை நான்கும் ஈண்டு ஓதப் படுகின்றன.

நச்.

இஃது அவ்விடைச் சொற்களின் பாகுபாடு கூறுகின்றது

இ-ள்: அவைதாம்—முற்கூறிய இடைச் சொற்கள் தாம், புணரியல் நிலையிடைப் பொருள்நிலைக் குதநவும்—இரு மொழி தம்மில் புணர்தல் இயன்ற நிலைமைக்கண் அவற்றின் பொருள் நிலைக்கு உதவிசெய்து வருவனவும், வினைசெயல் மருங்கின் காலமொடு வருநவும்—முதல் நிலை நின்று காரியத் தினைத் தோற்றுவிக்கும் இடத்துக் காலங்காட்டும் இடைச் சொற்களோடே பாலும் இடமும் காட்டும் இடைச்சொற் களாய் வருவனவும், வேற்றுமைப் பொருள்வயின் உருபு ஆகுநவும்—வேறுபடச் செயும் செயப்படு பொருள் முதலாய வற்றின்கண் உருபு என்னும் குறியவாய் வருவனவும், அசை நிலைக் கிளவி ஆகி வருநவும்—தமக்கோர் பொருளின்றித் தாஞ்சார்ந்த பெயர்வினைகளை அசையப் பண்ணும் நிலை மையவாய் வருவனவும்,இசை நிறைக்கிளவி ஆகி வருவனவும்— செய்யுட்கண் இசை நிறைத்தலே பொருளாக வருவனவும், தத்தங்குறிப்பிற் பொருள் செய்குநவும்—கூறுவார் தத்தங் குறித்த குறிப்பினாலே அவர் குறித்த பொருளை விளக்கி நிற்பனவும், ஒப்பு இல்வழியால் பொருள் செய்குநவும்—நாடக வழக்கினான் உய்த்துணரினன்றி உலகியல் வழக்கினாற் காட்டப்படுவதோர் ஒப்பின்றி நின்ற ஒப்புமைப் பொருண் மையை உணர்த்தி வரும் உவமவுருபுகளும், என்று அப்பண் பினவே நுவலுங்காலை—என்று சொல்லப்பட்ட அவ்வேழியல் பினையுடைய சொல்லுமிடத்து, எ-று.

பொருள் நிலைக்குதவுவன, எல்லாம் என்பதனை வற்றுச் சாரியை அஃறிணையாக்கியும், நம்முச்சாரியை உயர்திணை யாக்கியும் நிற்பன போல்வன. இதனானே காரம், கரம் முதலிய எழுத்துச்சாரியையும் கொள்க.

உ-ம்: 'உண்டான்' என்புழி 'உண்' என்னும் முதல்நிலை காலங்காட்டுகின்ற டகரத்தினையும், பாலும் இடமும் காட்டும் ஆனினையும் விரித்து நின்றவாறு காண்க.

உண்டு என்னும் எச்சம் முதலியனவும் பாலும் இடமும் உணர்த்தும் என்பது, வந்தான், வந்தது என்னும் வினைகளாற் பெறுதல் 'பிரிவு வேறுபடூஉஞ் செய்தியவாகி' (வினை 25) என்பதனாற் கொள்க. தன்னின முடித்தல் என்பதனால் உண்டவன் என்றாற் போலும் தொழிற்பெயரும், நம்பி, நங்கை என்னும் பெயர்ப் பெயரும் இவ்விடைச் சொற் பெற்று வருதல் கொள்க.

'கண்ணகன் ஞாலம்' என்புழிக் 'கண்' இடப்பொருள் உணர்த்துதலும், 'ஊர்க்கால்' என்புழிக் 'கால்' உருபாகலும் முற்கூறினாம். (வேற். 21 உரை) 'அனையை யாகன்மாறே' (புறம். 4) என்புழி 'மாறு' என்னும் இடைச்சொல் வினையை யடுத்துக் காரணப்பொருள் உணர்த்தி நிற்றலின் மூன்றாம் வேற்றுமைப் பொருள் உணர்த்தி நின்றதல்லாமை காண்க. அது மூன்றாவதன் பொருள் உணர்த்திற்றேல், 'கூறாய் தோழி யாம் வாழுமாறே' என்புழி வாழுமாற்றையென இரண்டாவது விரியாதாம். 'மந்திர விதியின் மரபுளி வழாஅ' (திருமுருகு. 95) என்புழி முறைமையின் வழுவாத அந்தணர் என ஐந்தாவது விரிதலானும், 'இயல்புளிக் கோலோச்சு மன்னவன்' (குறள் 545) என்புழி 'முறைமையிலே செங்கோல் நடாத்தும்' என ஏழன் உருபு விரிதலானும் 'உளி' என்பது மூன்றன் உருபின் பொருள் பட வந்ததன்று; பகுதிப் பொருள் விகுதியாய் நின்று, தனக் கேற்ற உருபையேற்று நின்றது. இம்மூன்றும் புணரியலுள்ளும் வினையியலுள்ளும் வேற்றுமையோத்தினுள்ளும் கூறி, இடை நின்ற மூன்றும் ஈண்டுக் கூறுகின்றார். இறுதி நின்ற 'ஒப்பில் வழியாற் பொருள் செய்யும் உவம உருபுகள்,' 'அன்ன ஏய்ப்ப' என்னும் சூத்திரத்தான் உவம இயலுட் கூறுப. அவை ஒப்பின்றி ஒப்புணர்த்துதல் 'ஒப்பும் உருவும் வெறுப்பும் என்றா' (பொருளியல் 52) என்னும் பொருளியற் சூத்திரத் தான் உணர்க.

கல்.

என்-எனின், அவ்விடைச் சொற்களின் பாகுபாடாமாறு உணர்த்துதல் நுதலிற்று.

இ—ள்: மேல் இடைச்சொல் என்று சொல்லப்பட்டவை தாம், இருமொழி தம்மிற் புணர்தலியன்ற நிலைமைக்கண் அவற்றின் பொருள் நிலைமைக்கு உதவி செய்து வருவனவும், வினைச்சொற்களை முடிக்குமிடத்துக் காலங்காட்டும் இடைச் ளோடு கூடித் தாம் பால்காட்டும் சொற்களாய் வருவனவும்

வேறுபாடு செய்த பொருண்மையிடத்து வேற்றுமையுருபாய் வருவனவும்,வழக்கின்கண் தமக்கு ஓர் பொருளின்றித் தாம் அடைந்த பெயர் வினைகளை அசையப்பண்ணி நிற்கும் நிலைமையவாய் வருவனவும், பெயர்ப் பொருளிடத்துப் பொருளின்றி ஓரோர் அசையை நிறைத்தற்பொருண்மையவாய் வருவனவும், பெயர் வினைகள்போல விளங்கப் பொருளுணர்த் தாத சொற்கள் தத்தம் குறிப்பானே ஒரு பொருளையுணர்த்தி வருவனவும், ஒத்த என்னும் வாய்பாடு தன்கண் நில்லாத கூற் றானே நின்ற ஒப்புமைப் பொருண்மையை உணர்த்தி வருவன வும் என்று சொல்லப்பட்ட அவ்விலக்கணங்களை உடையன வாம் அவற்றைச் சொல்லுங்காலத்து, எ—று.

புணர்ச்சிக்கண் வருவன எழுத்தோத்தினுள் 'இன்னே வற்றே' (புணரி). என்னும் சூத்திரத்தான் ஓதப்பட்டன. இனித் தன்னின முடித்தல் என்பதனான் காரம், கரம்,கான் என்னும் எழுத்துச்சாரியையும் கொள்ளப்படும்.

வினைச் சொற்கள் பால்காட்டி வருவன வினையியலுள் "அம் ஆம்" முதலாக ஈறு பற்றி ஓதினவெல்லாம் எனக் கொள்க.

இனி, அவ்வினைச் சொற்கள் 'காலமொடு வருநவும்' என்ற தனால் காலங்காட்டி வருவன 'உண்டான்' என்புழி இடைக் கண் டகரமும்,'உண்ணாநின்றான்' என்புழி ஆநின்றும், 'உண் பான்' என்புழிப் பகரமும் அத்தன்மைய பிறவும் எனக்கொள்க. காலம் உணர்த்த வருதலான் அவை காலம் எனப்பட்டன. உண்டான் என்புழிக் காலம் காட்டும் டகரத்துடனே பால் காட்டும் 'ஆன்' வந்தவாறு அறிக.

இவ்வாறு பாலும் காலமும் காட்டுவன வினைக்கு என்று ஓதினும் அதனைப் பெரும்பான்மையாக்கி 'உண்டவன்' என்றாற்போலப் 1பெயர்க்கும் கொள்க.

இனி ஒன்றெனமுடித்தல் என்பதனால் வினைச் சொற்கண் பாலுணர்த்துவனவே யன்றிப் பெயர்க்கேயுரிய வாய்பட்டால் உணர்த்துவனவும் கொள்ளப்படும், அவை நம்பி, நங்கை என்னும் இகர ஐகார ஈறுபோல்வன எனக் கொள்க.

வேற்றுமை யுருபாய் வருவன வேற்றுமையோத்தினுள் 'அவைதாம் பெயர் ஐ ஒடுகு' (வேற்.) என்னும் சூத்திரத்துப் பெயர் ஒழிந்த ஏழும் எனக் கொள்க இவற்றை ஒத்து அடைவு

1. பெயர்—வினையாலணையும் பெயர்.

பற்றி முன்கூறாதது, வினைக்கண் வருவன பெரும்பான்மை யாகல் பற்றிப் போலும்.

மற்றை அசைநிலையும், இசைநிறையும், குறிப்பிற் பொருள் செய்குநவும் இவ்வோத்தினுள் தத்தம் சிறப்புச் சூத்தி ரத்துள்ளே உதாரணம் காட்டப்படும்,

ஒப்பில் வழியாற் பொருள் செய்குநவற்றிற்கு உதாரணம் இதன்பின்னதிகாரத்து உவமையியலுட் காணப்படும்.

இச்சூத்திரத்து முன்னைய மூன்றும் முன்னர் ஓதிப் போந் தனவாகலான் முன்வைக்கப்பட்டன. பின்னையது பின்னதி காரத்துக் கூறலால் பின் வைக்கப்பட்டது. இடையன இவ் வோத்தினுள் கூறப்படுதலான் இடைநின்றன.

ஆயின் இடைக்கண் நின்ற மூன்றனுள்ளும் பொருள் செய் வதனை முன்சொல்லாது அசைநிலை இசைநிறைகளை முன் சொல்லியது என்னையெனின், இவை இரண்டும் ஒழிய ஈற்றின் முன்னும் பின்னும் நின்றவையெல்லாம் பெரும்பான்மையின வாய் நிற்றலானும், அவைதாம் இவையாய் நிற்றலானும், இவைதாம் அவையாய் நிற்றல் சிறுபான்மையாகலானும் என்பது.

வெள்.

இஃது அவ்விடைச் சொற்களின் பாகுபாடு கூறுகின்றது.

இ—ள் : முற்கூறிய இடைச்சொற்கள்தாம், இருமொழி தம்மிற் புணர்தல் இயன்ற நிலைமைக்கண் அவற்றின் பொருள் நிலைக்குஉதவிசெய்து வருவனவும், வினைச்சொற்களைமுடிக்கு மிடத்து அச் சொல்லகத்துக் காலங் காட்டும் உறுப்பு முதலியன வாய் நிற்பனவும், வேற்றுமைப் பொருட்கண் வேற்றுமையுருபு களாய் வருவனவும், தமக்கோர் பொருளின்றித் தாம் சார்ந்த பெயர் வினைகளை அசையப் பண்ணும் நிலைமையவாய் வருவனவும், செய்யுட்கண் இசை நிறைத்தலே பொருளாக வரு வனவும், தத்தங் குறிப்பாற்பொருளுணர்த்துவனவும், ஒப்புமை தோன்றாத வழி அவ்வொப்புமைப் பொருண்மையையுணர்த்தி வருவனவும் எனச் சொல்லப்பட்ட ஏழியல் பினையுடையன சொல்லுமிடத்து, எ—று.

'புணரியல் நிலையிடைப் பொருள் நிலைக்குதவுந'என்றது, அல் வழிப் பொருளுக்கு உரியன இவை வேற்றுமைப் பொரு ளுக்கு உரியன இவையென எளிதிற் பொருளுணர்ந்து கொள்ளு தற்கு அறிகுறியாகிய இன், வற்று முதலிய சாரியைகளை, இவை எழுத்ததிகாரத்திற் கூறப்பட்டன.

'வினை செயல் மருங்கின் காலமொடு வருந' என்றது, வினைச் சொல்லை முதல் நிலையும் இறுதி நிலையும் இடை நிலையும் ஆகப் பிரித்துச் செய்கை செய்யுமிடத்துக் காலம் காட்டியும் பால் காட்டியும் அதனகத்து உறுப்பாய் நிற்பன வற்றை இவை வினையியலுட் கூறப்பட்டன.

'வேற்றுமைப்பொருள்வயின் உருபாகுந' என்றது, ஐ, ஒடு, கு, இன், அது, கண் என வரும் வேற்றுமையுருபுகளை. இவை வேற்றுமையியலிற் கூறப்பட்டன.

அசைத்தல்—சார்த்துதல். பொருளுணர்த்தாது பெய ரொடும் வினையொடும் சார்த்திச் சொல்லப்பட்டு நிற்றலின் அசை நிலை என்பது காரணப் பெயர். அசை நிலைக்கிளவி யாகி வருவன மியா, இகும் முதலாயின.

செய்யுட்கண் இசை நிறைத்து நிற்பன இசை நிறையாம். இசை நிறையாவன ஏ முதலாயின.

'தத்தங் குறிப்பிற் பொருள் செய்குந' என்றது, தத்தங் குறிப்பினாற் பொருளுணர்த்தும் இடைச்சொற்களை. குறிப்பு என்பது சொல்லுவான் கண்ணதாயினும் அவன் குறித்த பொருளைச் சொற்கள் தாங்கி நிற்றலின் 'தத்தம் குறிப்பிற் பொருள் செய்குந' என்றார்.

அசை நிலை, இசைநிறை, தத்தங் குறிப்பிற் பொருள் செய்குந ஆகிய இம் மூவகை யிடைச் சொற்களும் இவ் இடை யியலின் கண்ணே உணர்த்தப்படுகின்றன.

'ஒப்பில் வழியாற் பொருள் செய்குந' என்றது, ஒப்புமை யுணர்த்தும் 'ஒத்தல்' என்னும் சொல் இல்லாத நிலையில் ஒப்புமைப் பொருளையுணர்த்தும் அன்ன ஆங்க முதலிய உவம வுருபுகளை. பொருள் புலப்பாடாகிய உவமைக்குரிய இவ்வுருபு கள் பொருளதிகாரத்தில் உவமவியலில் விரித்துரைக்கப்படும்.

இடைச்சொல் ஏழனுள் முதல் நின்ற மூன்றும் மேலே உணர்த்தப்பட்டமையால் முன் வைத்தார். ஒப்பில் வழியாற் பொருள் செய்குந பின்னர் உணர்த்தப்படுதலின் இறுதிக் கண் வைத்தார். எஞ்சிய மூன்றும் இவ்வியலில் உணர்த்தப்படுதலின் இடை வைத்தார்.

ஆதி.

இ—ள் : பத்து + மூன்று = பதின்மூன்று — இன்
பத்து + பத்து = பதிற்றுப்பத்து—இற்று
முறுக்கு + வடை = முறுக்கும் வடையும்—உம்

இன், இற்று, உம் போல் இரு சொற்கள் புணரும் போது இடையில் வருவனவும்; (1)

படித்தான் படிக்கிறான் படிப்பான்

இங்கு த், கிறு, ப்—காலங் காட்டும் முறையில் வரும் த், கிறு, ப் முதலியனவும், (2)

பெயர்களோடு சேர்ந்து வேற்றுமை யுருபாக வரும், ஐ, ஒடு, கு, இன், அது, இல், ஏ முதலிய உருபுகளும் (3)

கற்றதனா லாய பயனென் கொல்

ஓ! இவனா செய்தான்

இவ்வாறு பொருளற்று நிற்கும் அசைநிலைச் சொற்களும் (4)

'எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே'

'இவ்வளவிற் காணுங் கொல், இவ்வளவில் மீளுங் கொல்' எனச் செய்யுளியல் குறித்து நிற்கும் இசை நிறைச் சொற்களும் (5),

அடடே அப்படியா? சீ சீ அப்பால் போ, ஐயோ இறந்தனரோ—இவ்வாறு குறிப்பால் பொருள் தருவனவும் (6)

அன்னம் போலத் தூயது, மதி போன்ற முகம், மயிலன்ன சாயலாள்—இங்குற்றவை போன்ற உவமை யுருபுகளும் (7)

இவை போன்ற பிறவும் இடைச் சொற்களாம்.

பிற : மரத்தை—அத்து சாரியை.

'எண் என்ப ஏனை எழுத்து என்ப'—என்ப—இசை நிறையிடைச் சொல்.

'வஞ்சிப்பது ஒரும் அவா' ஒரும்—இடைச்சொல்

என்ன, எப்போது வந்தாய்? என்ன —இடைச்சொல்.

பார் பார்! இப்படிக் கொடுமையுண்டா? பார் பார்—இடைச் சொல்.

அகரம் ஆகாரம்—கரம், காரம் இடைச்சொல்.

இவ்வாறு இடைச் சொற்கள் காற்றுப் போல எங்கும் ஓட்டி வரும்.

சூப்.

'வினைசெயல் மருங்கின் காலமொடு வருநவும்' என்பதற்கு உதாரணம் அன் ஆன்—அம் ஆம் என்னுந் தொடக்கத்தன

என்றார் உரையாசிரியர். ''வினைச் சொல்லை முடிக்குமிடத்துக் காலப் பொருளாய் வருவனவும்''என்றும், ''வினைச் சொல் ஒரு சொல்லாயினும் முதனிலையும் இறுதி நிலையும் இடைச்சொல் லும் ஆகப் பிரித்துச் செய்கை செய்துகாட்டப்படுதலின் 'வினை செயல் மருங்கின்' என்றார்; அவற்றுள் ஒரு சாரன பாலுணர்த் தாமையானும், எல்லாங் காலம் உணர்த்தலானும் 'காலமொடு வருநவும் என்றார்'' என்றும் கூறினர் சேனாவரையர்.

''முதனிலை நின்றுகாரியத்தினைத் தோற்றுவிக்குமிடத்துக் காலங் காட்டும் இடைச்சொற்களோடே பாலும் இடமும் காட்டும் இடைச் சொற்களால் வருவனவும்'' என்றும், ''உண் டான் என்புழி உண் என்னும் முதனிலை காலங் காட்டுகின்ற டகரத்தினையையும், பாலும் இடமும் காட்டும் ஆனினையும் விரித்து நின்றவாறு காண்க'' என்றும் கூறினர் நச்சினார்க் கினியர். தெய்வச் சிலை யாரது கொள்கையும் இதுவேயாம்.

உரையாசிரியர் மதப்படி அன் ஆன் அள் ஆள் முதலிய வினை விகுதிகளே இடைச் சொல்லாகும். சேனாவரையர் கொள்கையும் அவ்வாறே என்பது, 'டதற வென்பன எதிர் காலத்திற்குரிய எழுத்தன்மையால், பாலுணர்த்தும் இடைச் சொற்கு உறுப்பாய் வந்தன எனவே படும்' என்ற வாக்கியத்தாலும், 'ஆகாரம் காலவெழுத்துப் பெறாது உண்ணாதின்னா வெனவரும்' என்ற வாக்கியத்தா லும், 'அவற்றுள் ஒரு சாரன பாலுணர்த்தாமையானும், எல்லாங் காலம் உணர்த்தலானும்' என்று இச்சூத்திர வுரையிற் கூறப்பட்ட வாக்கியத்தானும் விளங்குகின்றது. இவ்விருவரது கொள்கையை ஊன்றி நோக்கின் அன் ஆன் முதலிய வினை விகுதிகள் காலவெழுத்தை முன்னர்ப் பெற்று வருமேயன்றித் தனியே வாராவென்பதும்,இவர்கள் காலத்தில் காலவெழுத்துக் கள் இடைச் சொல்லாகக் கருதப்படவில்லை என்பதும், அன் ஆன் முதலியனவே இடைச்சொல்லாகக் கருதப்பட்டன என்ப தும் பெறப்படும். மேலும் 'காலமொடு' என்னுமிடத்து உடனி கழ்ச்சியையுணர்த்தும் 'ஒடு' என்னும் உருபு இவர்கள் கூற்றிற் குப் பொருந்தும்.

நச்சினார்க்கினியர் தெய்வச்சிலையார் கொள்கையை நோக்கின் 'காலமொடு வருநவும்' என்பதற்குக் காலங்காட்டும் இடைச் சொற்களோடே (பாலும் இடமும் காட்டும் இடைச் சொற்களாய்) வருவனவும் என்று பொருள் கொள்ள வேண்டி யிருக்கும், வருநவும் என்பதற்கு ஆவதாம் என்பது எழுவா யாகையால் அவ்வாறு பொருள் கொள்வது பொருந்துமா? ஆயி

னும் இவ்விருவரும் அவ்வாறு கூறுவதற்குக் காரணம் அவர்கள் காலத்தில் காலவெழுத்துகள் தனிமையாய் இடைச்சொல்லாக வழங்கப்பட்டனவாதல் வேண்டும்.

'அம்முடிபுணர்த்தாமைக்குக் காரணம்' புணரியல் நிலையிடையுணரத் தோன்றா (குற்றி.76) என்புழிச் சொல்லப்பட்டது எனச் சேனாவரையர் கூறினர். அங்கு அவரே கூறினரா? அன்றி 'மெய்யொருங்கியலும்' என்றதனால் உண்டான் என்புழிச் செய்கையும் காலமும் பாலும் தோற்றி நிற்குமாறு பிரித்துப் புணர்க்கப்படாமை கொள்க' என்று உரையாசிரியர் கூறியதைக் குறித்தனரா? முன்னர்க் கூறியதாயின் சேனாவரையர் எழுத்ததிகாரத்துக்கும் உரை எழுதினர் என்பது பெறப்படும்.

வேற்றுமைப் பொருள்வயின் உருபாகுந: இதன் உரை கூறுமிடத்துச் சேனாவரையர் 'அனையை யாகன் மாறே' (புறம்.4) என்றவிடத்து மாறு மூன்றாம் வேற்றுமைக்கண் வந்தது என்று கூறினர். புறநானூற்றுரையாசிரியர் 'அத்தன்மையாதலால்' என்று அதற்குப் பொருள் கூறினர். நச்சினார்க்கினியர் 'மாறு என்னும் இடைச்சொல் வினையையடுத்துக் காரணப்பொருள் உணர்த்தி நிற்றலின் மூன்றாம் வேற்றுமைப் பொருள் உணர்த்தி நின்றதல்லாமை உணர்க' என்று சேனாவரையரை மறுத்தார். மூன்றாம் வேற்றுமைப் பொருள் கூறுமிடத்து 'இன்னான் ஏது' (வேற்.) என்ற வாக்கியத்தால் காரணப்பொருளும் மூன்றாம் வேற்றுமைப் பொருளாம் என்று கூறியதனானும், ஆதல் என்ற தொழிற்பெயரையடுத்துக் காரணப் பொருளைக்கொண்டே 'மாறு' வந்திருத்தலானும் நச்சினார்க்கினியர் மறுப்புப் பொருந்துமா?

அவ்வாறே 'இயல்புளிக் கோலோச்சு மன்னவன்' (குறள் 545) என்னுமிடத்து 'உளி' என்பது மூன்றாம் வேற்றுமைப் பொருளில் வந்தது என்றார் சேனாவரையர். பரிமேலழகரும் 'உளி' என்பது மூன்றாவதன் பொருள்படுவதோர் இடைச்சொல் எனவே கூறினர். நச்சினார்க்கினியர் 'இயல்புளிக் கோலோச்சு மன்னவன் என்புழி முறைமையிலே செங்கோல் நடாத்தும் என ஏழன் உருபுவிரிதலானும், உளி என்பது மூன்றன் உருபின் பொருள்பட வந்ததன்று' என்று மறுத்தனர். ஏழனுருபு விரிந்ததாகக் கொள்ளினும், 'உளி' என்பதை இடைச்சொல் என்றே கொள்ளக் குறையென்?

சேனாவரையத்தில் 'சார்ந்த மொழியை வேறுபடுத்து நிற்றலின் அசைநிலைச் சொல்லாயின என்பாரும் உளர்' என்ற வாக்கியம் உளது. இங்கு வேறுபடுத்து நிற்றலான் என்பதன் பொருள் இடைச்சொல் எல்லாம் வேற்றுமைச் சொல்லே.

என்னும் சூத்திரவுரையான் நன்கு விளங்கும்.

சிவ.

உரையாளர் உரைகளைக் கொண்டு இச்சூத்திரத்துக்குப் பின் வருமாறு பொருளும் உதாரணமும் கூறலாம்.

புணரியல் நிலையிடைப் பொருள் நிலைக்கு உதநவும்: புணரியல் நிலையிடை உதவுநவும், புணரியல் நிலையிடைப் பொருள் நிலைக்கு உதவுநவும் என இரண்டாகக் கொள்க. மரக்கிளை என்பது மரத்துக்கிளை என அத்துச்சாரியை பெறுவது புணரியல் நிலையில் அத்துச்சாரியை உதவியது என்னலாம். கிளியின் கால் என்றவிடத்து இன் சாரியையும் அதுவே. எல்லாவற்றையும், எல்லா நம்மையும் என்னுமிடங்களில் வற்றுச்சாரியை அஃறிணைப் பொருளுக்கும் நம்சாரியை உயர் திணைப் பொருளுக்கும் உதவியவாறு காண்க. இதனால் பொருட்சிறப்பில்லாச் சாரியைகளும் பொருட்சிறப்புடைய சாரியைகளும் புணரியல் நிலையிடையுதவும் என்பது கூறப்பட்டது.

வினைசெயல் மருங்கில் காலமொடு வருவன: வினை செய்தலாவது ஒரு வினைச்சொல்லை உண்டாக்குதல். உண்டாக்குதற்கு முதல் நிலை (பகுதி) தவிர இறுதிநிலை இடைநிலை சாரியை முதலியன தேவை. அவற்றுள் விகுதியும் இடைநிலையும் காலம் காட்டுவன. இடைநிலை காலம் காட்டும்போது விகுதி காலம் காட்டாது. காலம் காட்டும் விகுதியும் காலம் காட்டா விகுதியும் உண்டு. ஒரு வினைச்சொல்லை உண்டாக்கும்போது காலம் காட்டும் இடைச்சொற்களோடு வருவனவும் இடைச்சொற்களாம். உண்டு-உண்டேன். இதில் (உண்+டு என) டு விகுதி இறந்தகாலம் காட்டியது. உண்டேன் இதில் (உண்+ட்+ஏன்என) டகர ஒற்றுக் காலம் காட்டியது; விகுதி காலம் காட்டவில்லை. உண்டனென் இதில் (உண்+ட்+அன்+என் என) அன் என்பது காலம் காட்டும் இடைநிலையுடன் வந்தது. இதில் அன் சாரியை எனப்படும். இவற்றால், வினை செயல் மருங்கில் வருவனவும் வினை செயல் மருங்கில் காலமொடு வருவனவும் இடைச் சொற்கள் ஆம் எனக்கொள்க. உண்டனென் என்பதில் அன்சாரியையினையும் என் விகுதியினையும் வினைசெயல் மருங்கின் வந்தன எனவும், டகர ஒற்றினை வினை செயல் மருங்கின் காலமொடு வந்தது எனவும் கொள்க. அதனால் வினைசெயல் மருங்கின் இடைச் சொல்லாக வருவன விகுதி, இடைநிலை, சாரியை என்னவாம் என்க.

வேற்றுமைப் பொருள்வயின் உருபாகுநவும்: இதனை வேற்றுமைவயின் உருபு ஆகுநவும், வேற்றுமைப் பொருள்வயின் ஆகுநவும் என இருவகைப்படுத்துக. வேற்றுமைவயின் உருபு ஆகுந ஐ ஆல் கு இன் அது கண் என்பனவாம். வேற்றுமைப் பொருள்வயின் ஆகுந மூன்றாம் வேற்றுமைக்குரிய கொண்டு உடன் என்பனவும், ஐந்தாம் வேற்றுமைக்குரிய நின்று இருந்து என்பனவு, ஏழாம் வேற்றுமைக்குரிய கால் கடை உழை முதலியனவும் ஆம். உதாரணம்: மரத்தை மரத்தால் முதலியனவும் வாள் கொண்டு வெட்டினான் அவனுடன் போனான் முதலியனவும், மரத்தினின்று வீழ்ந்தான், மரத்தினிருந்து வீழ்ந்தான் என்பன மரத்து நின்று வீழ்ந்தான்; மரத்திருந்து வீழ்ந்தான் என வருவன போல்வனவும், ஊர்க்கால் எழுந்த சோலை முதலியனவும் ஆம்.

அசைநிலைக்கிளவியாகி வருவன: இதனை அசைநிலையாகி வருவன எனவும் அசைநிலைக்கிளவியாகி வருவன எனவும் இருவகையில் கொள்க. அசைநிலையாகி வருவன சொல் வடிவு பெறாதன. அவை ஏ, ஓ முதலியன. கிளவி (சொல்) ஆகி வருவன சொல் வடிவு பெற்றன. அவை போலும், [1]வைத்து முதலியன. 'பாண்டிச்சேரி என்றோர் ஊர் உண்டே' என்பதில் ஏகாரம் ஈற்றில் அசையாய் வந்தது. பாண்டிச்சேரி என்றோர் ஊர் உண்டுபோலும். இதில் போலும் என்பது சொல்வடிவுள்ள அசைநிலை. 'பாண்டிச்சேரியில் வைத்து அவனைக்கண்டேன்' இதில் வைத்து என்பது சொல் வடிவு பெற்ற அசைநிலை.

ஒப்பில் வழியாற் பொருள் செய்குநஃ ஒப்பு வழியாற் பொருள் செய்குந எனவும் ஒப்பு இல்வழியாற் பொருள் செய்குந எனவும் கொள்க. ஒப்பு வழியாற் பொருள் செய்தலாவது உவமை வகையால் வருவது. அது போலும் என்பது. மதி போலும் முகம் என்று காண்க. இதில் போலும் என்பது உவம உருபு. இது உவம உருபிடைச்சொல் எனப்படும். ஒப்பு இல்வழியாற் பொருள் செய்தலாவது உவமை கருதினும் அதனின் வேறுபாடு தோன்றப் பொருள் கொள்ளுமாறு அமைவது. அவ்வாறு அமைவன புரைய, எள்ள, கடுப்ப முதலியவாகிய (உவமப் பொருளில் வரும்) சொற்கள். மதிபுரையும் முகம் என்பது மதிபோலும் முகம் என்பதாயினும் மதியை விட உயரும் முகம் எனக் கருதுமாறும் அமைந்தது காண்க. இப்படியே மதியெள்ளுமுகம் மதிகடுக்கும் முகம் முதலியவும் கொள்க.

---

1. வைத்து என்பது திருநெல்வேலி மாவட்ட வழக்கில் வரும் இடைச்சொல்.

மற்றையன உரையாளர் உரைகளிற் கண்டவாறே கொள்க.

பால.

கருத்து: இடைச்சொற்களின் வகை கூறுகின்றது.

பொருள்:— மேற்சொல்லப் பெற்ற இடைச்சொற்கள் தாம் நுவலுங்காலை நிறுத்த சொல்லும் குறித்து வருகிளவியும் புணர்ந்தியலும் நிலைமைக்கண் அவற்றின் பொருள் நிலைமை உணர்தற்கு உதவுவனவும், வினைப்பெயர் வினைச் சொல்லாகி இயக்கமுணர்த்துமிடத்துக் காலங்காட்டுதலொடு வருவனவும், வேற்றுமைப் பொருள் விரியுமிடத்து உருபாக வருவனவும், அசைநிலை என உணர்த்தும் சொல்லாக ஆகி வருவனவும் இசை நிறைக்கும் சொல்லாக ஆகி வருவனவும், கூறுவோர் தாம் குறித்த குறிப்பிற்கேற்ப பொருள் இயன்று வருவனவும் ஒக்கும் என்னும் ஒத்தற் பொருள் இல்லாத வழியும் அவ்வொப் புப் பொருளை உணரச் செய்வனவும் என்று சொல்லப்படும் அவ் ஏழு இயல்பினவாகும்.

அப்பண்பினுன் அவை ஏழு வகைப்படும் என்றவாறு. பண்பென்றது ஈண்டு 'இயல்பு' என்னும் பொருட்டாய் நின்றது.

1) புணரியல் நிலையிடைப் பொருள் நிலைக்குதநவும் 'என்பதனைப் புணரியல் நிலைக்கு உதநவும், பொருள் நிலைக் குதநவும் எனப் பிரித்துக் கூட்டிப் பொருள் காண்க.

அவையாவன இருமொழிப் புணர்ச்சியுள்ளும், ஒருமொழிப் புணர்ச்சியுள்ளும் வரும் சாரியைகளாம்.

எ.டு:— மரத்துக்கிளை—அவற்றுக்கோடு—வண்டின் கால், பதிற்றகல் எனவரும் இவ் இரு மொழிப் புணர்ச்சியுள், 'அத்து, வற்று, இன்' என்பவையும், கண்டனம், கண்டனன் எனவரும் இவ் ஒரு மொழிப் புணர்ச்சியுள் அன் என்பதும் புணரியல் நிலைக்குதவின எல்லாவற்றையும், எல்லாநம்மையும் என வரும் இவற்றுள் வற்றுச் சாரியை நிலை மொழிப் பொருள் அஃறிணை என்பதும் நம்முச்சாரியை நிலைமொழிப் பொருள் உயர்திணை என்பதும்,

சித்திரையாற் கொண்டான், சித்திரைக்குக் கொண்டான் என வருமிவற்றுள் ஆன் சாரியை நிலைமொழி நாட் பெயர் என்பதும் இக்குச்சாரியை நிலைமொழி திங்கட் பெயர் என்ப தும் உணரப் பொருள் நிலைக்குதவின. பிறவும் இவ்வாறே கண்டுகொள்க.

2) வினை செயன் மருங்கிற்காலமொடு வருந:—திணையும் பாலும் இடமும் காட்டும் இறுதி இடைச் சொற்களும், காலங் காட்டும் இடைச்சொற்களுமாம். இதனை வினை செயல் மருங் கின் வருநவும் காலமொடு வருநவும் எனப் பிரித்துக் கூட்டிப் பொருள் கொள்க.

வினைச்சொற்கள் ஒருமொழிப்புணர்ச்சியாகலின் அவற்றை நிறுத்த சொல்லும் குறித்து வருகிளவியுமாக வைத்துப் புணர்த்தற்கு இயலாமையின் கால இடைநிலைகளை அம்மாம் முதலிய பால்காட்டும் இறுதி இடைச் சொற்களொடு உடனாக வைத்தும், உம்—மன் முதலியவற்றை ஈற்றின் கண் வைத்தும் உணருமாறு ஓதினார். இதனான் காலமுணர்த்தும் எழுத்துக்களும் அசைகளும் இடைச்சொற்களே என உணர வைத்தார்.

இறுதி இடைச் சொற்கள் வினையியலுள் ஓதப்பெற்றன. குறிப்பு வினை கால இடைநிலையொடு வாராமையின், வினை மருங்கின் என்னாது ''வினைசெயல் மருங்கின்'' என்றார்.

காலம் காட்டும் இவ் இடைச் சொற்கள் சொல்லின் இடை யினும் ஈற்றினும் ஏற்றபெற்றியாய் வருமெனக.

எ.டு:— உண்டனன், உண்டான், உண்ணாநின்றனன், உண்ணாநின்றான், உண்பான் எனவரும் இவற்றுள் அன், ஆன் என்பவை பால்காட்டும் இறுதியிடைச் சொற்கள், ட், ஆநின்று, ப் என்பவை காலங்காட்டும் காலக்குறிப்பிடைச் சொற்கள்.

காலமொடு வருநவும் எனப் பொதுப்படக் கூறியதனான் உண்ணா—உண்ணான், எனவரும் 'ஆ' கார எதிர்மறையும், வாழ்க, வீழ்க எனவரும் வியங்கோளீறுகளும், 'செய்யும்' என் னும் உம் ஈறும், மன என்னும் முற்றீறும், ஒருசார் வினையெச்ச ஈறுகளும் பிறவும் கொள்க.

இவற்றை எல்லாம் இவ்வாசிரியர் இந்நூற்கண் உடம் பொடு புணர்த்திக் கூறியுள்ளமையான் அறிந்து கொள்க.

3) வேற்றுமைப் பொருள்வயின் உருபாகுந:— ஐ ஒடு கு இன் அது கண் முதலியவை உருபிடைச் சொற்கள்.

உருபும் என்னாது 'ஆகுநவும்' என்றதனான் இன்னும் ஆறு மாகிய மாற்றுருபுகளும் மாறு—உளி, உடைய எனவரும் சொல் லுருபுகளும் கொள்க.

எ.டு:— வேற்றுமையியல் உரையுள் கண்டு கொள்க.

காலான்முடவன்—வாணிகத்தின் ஆயினான் என்பவை மாற்றுருபுகள் சிறந்தோன் பெயரன் பிறந்தமாறே. இயல்புழிக் கோலோச்சும் மன்னவன், சாத்தனுடைய இல்லம், என்பவை சொல்லுருபுகளைப் பெற்று வந்தனவாம். பிறவும், இவ்வாறு வருவனகண்டு கொள்க.

4) அசைநிலைக்கிளவி என்பது பிற பொருளுணர்த்தாமல் செய்யுள் வழக்குப் பற்றிச் சீர்க்கு உறுப்பாகவும் சீராகவும் ஓசை நிரப்புவதற்கு வரும் சொல்லுறுப்பினை அசை என்பது மரபு. இதனை,

"இசை திரிந்திசைப்பினும் இயையுமன் பொருளே" (பொருளியல்—1) என்பதனானும் அறிக.

செய்யுள் அமைப்பு நோக்கிப் புலவரான் ஆக்கிக் கொள்ள படுதல் தோன்ற "ஆகிவருநவும்" என்றார். அசையாகித்துணை புரிதலே இதன் பொருளாகும். இசைநிறைக்கிளவிக்கும் இஃதொக்கும்.

எ. டு:—அந்திற் கச்சினன் கழலினன் (அகம்—79)

"ஆங்கக் குயிலும் மயிலுங்காட்டி." என்பவை சீராக அசைத்து அடிநிரப்பி நின்றன.

"அதுமற் றவலங் கொள்ளாது நொதுமற்கலுழும்"

உரைமதி வாழியோ வலவ" என்பவை சீர்க்கு உறுப்பாய் அசைத்து வந்தன.

"பழமுதிர் சோலை மலைகிழவோனே" ஏகாரம் ஈற்றசையாய் சீர்நிறைத்து நின்றது.

5) இசைநிறைக்கிளவி என்பது சார்ந்த சொல்லின் பொருட்குத் துணையாகச் செய்யுட்கண், சீர் நிறைத்து ஓசைபற்றி வரும்.

எ.டு:— "ஏஎ இஃதொத்தன் என்பெறாஅன் கேட்டைக் கான்" எனவும் "அளிதோ தானேயது பெறலருங் குரைத்தே" எனவும் வரும்.

6) தத்தங் குறிப்பிற் பொருள் செய்குந:—பல நிலைகளில் வரும்.

எ.டு:— கூரியதோர் வாள்மன்—வருகதில் அம்மவெம்சேரி சேர-
சாத்தானும் வந்தான், கொன்னூர் துஞ்சினும் எனவரும். இவை இடம் நோக்கிப் பொருள்தருவன ஆதலின் "தத்தங்குறிப்பின்" என்றார்.

சாரியை இடைச்சொல் முதலியன பொருள்தருதலும் "குறிப்பே" என்னும் அவை ஓராற்றான் வரயறைப்படுதலின் அவை ஒழிந்த ஏனையவற்றற்கே இக்குறியீடு செய்தார் என்க.

7) ஒப்பில் வழிபாற் பொருள் செய்குந:—

எ.டு:—எரியகைந்தன்ன தாமரை-யாழ்கெழுமணி மாடற் றந்தணன்-

''குறுந்தொடி ஏய்க்கும் மெலிந்துவீங்கு திவவின்''

"வின் பொருபுகழ் விறல் வஞ்சி, மகன் றாயா தல் புலரவதா லெனவே" என உவமச்சொல் இடைச்சொல்லாக வரும். பிறவும் உவமவியலுரையுட் கண்டு கொள்க. இதனைத் தத்தங் குறிப்பிற் பொருள் செய்குநவற்றின் பின் வைத்தமையான் இவையும் தத்தங்குறிப்பிற் பொருள் செய்வனவாம்.

ஈண்டு வகைப்படுத்த ஏழுனுள் முதல்நின்ற மூன்றும்மேலே உணர்த்தப்பட்டமையின் முன்வைக்கப் பெற்றன. ஒப்பில் வழி யாற் பொருள் செய்வன இனி உவமவியலுள் உணர்த்தப் படுதலின்பின் வைக்கப்பட்டது. ஏனைய மூன்றும் இவ்வியலுள் உணர்த்தப்படுதலின் இடையே வைக்கப்பட்டன.

இடைச்சொல் நிற்கும் இடம்

246. அவைதா
முன்னும் பின்னு மொழியடுத்து வருதலுந்
தம்மீறு திரிதலும் பிறிதவ ணிலையலு
மன்னவை யெல்லா முரிய வென்ப. (3)

(அவைதாம்
முன்னும் பின்னும் மொழி அடுத்து வருதலும்
தம் ஈறு திரிதலும் பிறிது அவண் நிலையலும்
அன்னவை எல்லாம் உரிய என்ப.)

ஆ. மொ:
இல.

The scholars say that their appearance either before or after words, the change in their endings and the appearance of one before another, are permissible.

ஆல்

It is said that it may appear in all these ways following or preceding words, deforming its endings and taking with it another of its kind.

பி. இ. நூ.
நன்.420.

பெயரினும் வினையினும் பின்முன் ஓரிடத்து
ஒன்றும் பலவும்வந்து ஒன்றுவது இடைச்சொல்,

இல. வி. 251.

பெயரினும் வினையினும் பின்முன் ஓரிடத்து
ஒன்றும் பலவும் வந்து ஒன்றுவது இடைச்சொல்.

இளம்.

வ. று: பெயரை* முன்னும் பின்னும் அடுத்து வருவன:
'அதுமன்', கொன்னூர் (குறுந். 138) என்பன.
வினையை முன்னும் பின்னும் அடுக்குமாறு:
வருகதில் லம்மவெஞ் சேரி சேர
ஓதந்தார், ஓ கொண்டார்.
என்பன.
தம்மீறு திரிந்தவை:
கொன்னை, மன்னை (இடை.4) (இடை.6) என்பன
பிறிதவண் நிலையிற்று:
*மகவினை என்பது.

சேனா.

இ–ள்: மேற் சொல்லப்பட்ட இடைச்சொல், இடை வருதலேயன்றித், தம்மாற் சாரப்படும் சொற்கு முன்னும் பின்னும் வருதலும், தம்மீறு வேறுபட்டு வருதலும், பிறிதோர் இடைச்சொல் ஓரிடைச்சொல்முன் வருதலுமாகிய அத்தன்மையவெல்லாம் உரிய, எ-று.

உ-ம்: 'அதுமன்' (புறம் 147) எனவும், கேண்மியா (புறம். 148) எனவும் சாரப்படு மொழியை முன்னடுத்து வந்தன. 1 கொன்னூர் (குறுந்.138) எனவும், 'ஓஒவினிதே' (குறள் 1176) எனவும் பின்னடுத்து வந்தன. 'உடனுயிர் போகுக 2தில்ல' (குறுந். 57) என ஈறு திரிந்து வந்தது. 3வருகதில் லம்ம வெஞ் சேரி சேர (அகம் 276) என்பது பிறிதவணின்றது.

---

* முன்பின் என்பன இடமுன் இடப்பின் ஆகும்.

* மகவினை என்பதில் இன் சாரியை யிடைச்சொல்லுடன் இரண்டன் உருபாகிய ஐ இடைச் சொல்லும் இருத்தலின் பிறிதவண் நிலையலுக்கு உதாரணம் ஆம். இதனினும் 'வருகதில்லம்ம' எனச் சேனாவரையர் காட்டிய உதாரணம் சிறக்கும்.

1. கொன் – அச்சம் 2. தில் என்பது தில்ல என ஈறு திரிந்தது. 3. தில் என்பதுடன் அம்ம என்று பிறிதும் ஓர் இடைச்சொல் அங்கு நின்றது.

4'அவைதாம்' எனப் பொதுவகையான் ஓதினாரேனும் இவ்விலக்கணம் இவ்வோத்தின்கண் உணர்த்தப்படும் அசைநிலை முதலாகிய மூன்றற்கும் எனக் கொள்க.

('அன்னவை யெல்லாம்' என்றதனான் 'மன்னைச் சொல்' (இடை. 4) 'கொன்னைச் சொல்' (இடை. 5) எனத் தம்மை யுணர நின்ற வழி ஈறு திரிதலும், 'னகாரை முன்னர்' (மொழி மரபு. 19) என எழுத்துச் சாரியை ஈறு திரிதலும் கொள்க.)

தெய்.

இதுவும் இடைச் சொற்கு உரியதோர் மரபு உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள் : மேற்சொல்லப்பட்ட இடைச்சொல்தாம் மொழியை முன்னும் பின்னும் அடுத்து வருதலும், தத்தம் ஈறு திரிந்து வருதலும், பிறிதோர் இடைச் சொல் ஆண்டு அடுத்து வருதலும், ஆகிய அத்தன்மைய எல்லாம் உரிய, எ-று.

உ.ம் : அதுமன், கேண்மியா என்பன மொழிமுன் வந்தன. கொன்னூர், ஒஒ கொடியை என்பன மொழிப் பின் வந்தன. 'மன்னைச் சொல்' என்றவழி ஈறு திரிந்தது. 'வருகதில்லம்ம' என்பது பிறிது அவண் நின்றது. பிறவும் அன்ன.

நச்

இஃது இன்னும் அவற்றுக்கோர் பொதுவிதி கூறுகின்றது.

இ-ள் : அவைதாம்—முற்கூறிய இடைச்சொற்கள் தாம் இடை வருதலேயன்றி, மொழி முன்னும் பின்னும் அடுத்து வருதலும்—தம்மாற் சாரப்படுஞ் சொற்களை முன்னும் பின்னும் தாம் அடைந்து வருதலும், தம் ஈறு திரிதலும்—தம் ஈற்றெழுத்து வேறுபட்டு வருதலும், பிறிது அவண் நிலையலும்—ஓர் இடைச்சொல் நிற்கின்றவிடத்தே மற்றோர் இடைச் சொல் நிற்றலுமாகிய, அன்னவையெல்லாம் உரிய என்ப—அத் தன்மையையுடைய இலக்கணங்கள் எல்லாம் இடைச்சொற்கு உரிய என்று சொல்லுவர் ஆசிரியர், எ-று.

உ-ம்: அதுமன்,கேண்மியா—இவை முன் அடுத்தன. 'கொன்னூர் துஞ்சினும்' (குறுந். 138) 'ஒஒ இனிதே'—இவை பின் அடுத்தன. 'உடனுயிர் போகுகதில்ல' (குறுந். 57)—இது திரிந்தது. 'வருகதில் லம்ம வெஞ் சேரிசேர' (அகம் 276)

---

4. அவைதாம் என்பது முன் சூத்திரத்துள்ள ஏழினையும் உணர்த்தலின் இவ்வாறு எழுதினார்.

'பண்டறியாதீர்பால்' 1'படர்கிற்பீர் மற்கொலோ' (கலி. 29) — இவை பிறிது நின்றன.

'அன்னவை யெல்லாம்' என்றதனால், 'மன்னைச்சொல்லே', 'கொன்னைச் சொல்லே' எனத் தம்மையுணர நின்றவழி ஈறு திரிதலும், 'னகாரை முன்னர்' என எழுத்துச் சாரியை ஈறு திரிதலும் கொள்க.

கல்.

என்-எனின், இன்னும் அவற்றிற்காவதோர் விதியுணர்த்துதல் நுதலிற்று.

இ-ள் : மேல் வகுக்கப்பட்டவைதாம் முன்னிடத்தும் பின்னிடத்தும் பெயர் வினையாகிய மொழிகளை அடைந்து வருதலும், அச்சொற்கள் தம்மீறு ஒருவழி எழுத்து வேறுபட்டு வருதலும், மற்றோர் இடைச்சொல் தான் நிற்குமிடத்தே நிற்றலுமாகிய அத்தன்மையையுடைய இலக்கணம் எல்லாவற்றிற்கும் இலக்கணமாதற்குரிய, எ—று.

உ-ம்: முன்னடுத்தது: அதுமன், கேண்மியா என்பன. பின்னடுத்தது: கொன்னூர், ஓஒதந்தார் என்பன. ஈறு திரிந்தது: மன்னனைக் காஞ்சி, இஃதொத்தன் என்பன. பிறிதவண் நிலையல்: மகவினை, மடவை மற்றம்ம என்பன.

மன்னைச் சொல், தில்லைச் சொல் என்பனவோவெனின், அவை பொருளுணர்த்தாது சொல் தம்மை யுணர நின்றவாகலான் ஈண்டைக்கு ஆகா வென்பது. மற்றென்னை திரிபு பெறுமாறெனின், உடம்பொடுபுணர்த்தல் என்பதனான் அவற்றை யிவ்வாறு ஓதிய சூத்திரங்களால் பெறுதும் என்பது.

***வெள்.**

(சேனாவரையர் உரையே)

ஆதி

அவ்விடைச் சொற்கள் மொழியை யடுத்து முன் வருதலும், பின் வருதலும், தம் ஈறு வேறுபட்டு வருதலும், மற்றொரு இடைச்சொல் தன்னிடம் சேர்தலும் இத்தன்மையனவாக உள.

---

1. 'படர்கிற்பீர் மற்கொலோ' என்பதில் மன் என்னும் இடைச்சொல்லுடன் கொல் எனும் பிறிதும் ஓர் இடைச்சொல்லும் நின்றது.

* சேனாவரையரையே பின்பற்றி எழுதிய வுரைகளாயின் அவை இனிவருஞ் சூத்திரங்களில் விடப்படும்.

விளக்கம் : முன் என்பது இலக்கண நெறியின் வலப் பக்கத்தைக் குறிக்கும். ஏன்? நாம் இடமிருந்து வலம் நோக்கி எழுதுகிறோம். ஆதலின் முன்னோக்கிச் செலும் வலம் 'முன்' எனவும், தொடக்கமாகிய இடம் 'பின்' எனவும் கூறப்படும்.

அதுதான்—தான்
அடித்தான்பார்—பார் } முன் உற்றது
1அம்சிறைத்தும்பி—அம்
ஆஆ! அப்படியா—ஆஆ } பின் உற்றது.

சொல்வதை உடனே செய்க—உடன் ஈறு திரிந்தது.
2காண்டற்கு—அல் ஈறு திரிந்து 'அற்' ஆயிற்று.
மரத்தின் மேல—அத்து இன் மேல்
3ஊர்ப்புறத்தில்—புறம் அத்து இல் } இடைச்சொல் மேல் இடைச்சொல்.
மன், கொன், உம்—இவைஈறுதிரிந்து மன்னை, கொன்னை, உம்மை என வழங்கப் பெறும்.

பால.

கருத்து: இடைச்சொற்கள் பெயர் வினைகளை யடுத்து வரும் முறைமையும் பிற இயல்புகளும் ஆமாறு கூறுகின்றது.

எ.டு:- பண்டுகாடுமன்—கேண்மியா; இவை முன்னடுத்து நின்றன. கொன்னூர்—ஒஓ இனிதே; இவை பின்னடுத்தன. உடனுயிர் போகுகதில்ல—தில் என்பது ஈறுதிரிந்து வந்தது. வருகதில்லமளம் சேரிசேர—பிறிதவண் வந்து இணைந்து நின்றது.

"அன்னவையெல்லாம்" என்றதனான், மன்னைச் சொல் தில்லைச் சொல் எனத் தம்மை உணரநின்ற வழியும் ஈறுதிரிதலும், னகாரை என எழுத்துச் சாரியை ஈறுதிரிதலும்

---

1 அம்சிறைத்தும்பி என்பதில் அம் அழகு என்னும் பொருள்படுவதோர் இடைச்சொல்.

2 காண்டற்கு—இதில் அல் இல்லை; தல் என்பது தொழிற்பெயர் விகுதி. லகரம் றகரமாகத் திரிந்தது இவ்வுருவு நோக்கியாதலின் ஈறு திரிதற்கு இவ்வுதாரணம் சிறவாது. மன்-மன்னை, தில்-தில்ல என்பன போல்வனவே சிறக்கும்.

3 ஊர்ப்புறத்தில்-புறத்து, இல் என்பன இரண்டும் ஏழன் உருபின் பொருள்பட வந்த இடைச்சொற்கள்,

வேற்றுமையுருபுகளுள் காவலோனக்களிறஞ்சும்மே என ஐகாரம் முழுவதும் திரிதலும் பிறவும் கொள்க.

மன்

247. கழிவே யாக்க மொழியிசைக் கிளவியென்
றம்மூன் றென்ப மன்னைச் சொல்லே. (4)
(கழிவே ஆக்கம் ஒழியிசைக் கிளவி என்று
அ மூன்று என்பமன்னைச் சொல் ஏ).

ஆ. மொ.

இல.

The scholars say that the morpheme 'Man' denotes three senses which are that which is past, that which is created and that which is understood.

ஆல்

The morpheme (man) appears to express nostolgia for what is lost, wonder at a complete change and irony at what is implied.

பி.இ.நூ.

நேமி. 52.

காண்தகுமன் ஆக்கம் கழிவே ஒழியிசை.

நன். 432

மன்னே அசைநிலை ஒழியிசை ஆக்கம்
கழிவு மிகுதி நிலைபேறு ஆக்கம்.

இல. வி. 263

கழிவே ஆக்கம் ஒழியிசை அசைநிலை
என நான் கென்ப மன்னைச் சொல்லே.

முத்து. ஒ. 2.

ஆக்கம் ஒழியிசை கழிவையும் தரும்மன்.

இளம்.

இச்சூத்திரம் என்னுதலிற்றோவெனின், இடைச்சொற்களை ஏழுவகையென விரித்தார்; அவற்றுள் மூன்றுவகை மேலே யுணர்த்தி, ஒழிந்த நான்குவகையுள் தத்தங்குறிப்பிற் பொருள் செய்குநவற்றை விரிப்பான் தொடங்கினார். [1]அது கருத்து.

---

1. ஈண்டு ''அஃது உணர்த்துதல் நுதலிற்று'' என்றிருப்பின் நன்று — சுந்தரமூர்த்தி.

வ-று:2'சிறிய கட்பெறினே எமக்கீயு மன்னே' (புறம். 235) எனக்கழிவின்கண் வந்தது.

'பண்டு காடுமன், இனிக்கயல் பிறழும் வயலாயிற்று' என ஆக்கத்தின் கண் வந்தது.

1'கூரியதோர் வாண்மன்-இனி இற்றென்றானும்...ஒரு சொல்லை ஒழிவு பட வந்தமையின் ஒழியிசை.

சேனா.

இவ்வோத்தின்கண் உணர்த்தப்படும் மூவகையிடைச் சொல்லுள் தத்தங் குறிப்பாற் பொருள் செய்குந பொருளுணர்த்துதற் சிறப்புப் பரப்புடைமையான் அதனை முன் உணர்த்துகின்றார்.

இ—ள் : கழிவு குறித்து நிற்பதும், ஆக்கம் குறித்து நிற்பதும் ஒழியிசைப் பொருண்மை குறித்து நிற்பதும் என மன்னைச் சொல் மூன்றாம், எ—று.

உ—ம் : 'சிறியகட் பெறினே யெமக் கீயு மன்னே" (புறம் 235) என்புழி மன்னைச் சொல், இனி அது கழிந்தது என்னும் பொருள் குறித்து நின்றது 'பண்டு காடுமன்; இன்று கயல் பிறழும் வயலாயிற்று' என்புழி அஃது ஆக்கம் குறித்து நின்றது. 'கூரியதோர் வாள்மன்' என்புழித்திட்பம் இன்று என்னும் எச்சமாய் ஒழிந்த சொற்பொருண்மை நோக்கி நின்றது.

தெய்.

ஈண்டு உரைக்கப்படுகின்ற இடைச்சொல் நான்கும் பொருள் புணர் இடைச்சொல்லும், பொருள்புணரா இடைச் சொல்லும் என இரு வகைப்படும். அவற்றுள், பொருள் புணரா இடைச்சொல் ஆமாறு உணர்த்துதல் நுதலிற்று.

இ—ள் : கழிந்ததுஎன்னும் பொருண்மையும், ஆம் என்னும் பொருண்மையும், எஞ்சிய இசையான் உணரும் பொருண்மையும் உணரவரும், மன் என்னும் சொல், எ—று.

---

2. "கொஞ்சம் கள்கிடைத்தாலும் எமக்கு ஈயும்;இனிஅது கழிந்துபோயிற்று"என்பது பொருள்.

1. கூரியதோர் வாளாயிருந்தது இப்பொழுது இத் தன்மைத்து (மழுங்கியது) ஆயிற்று.

மன் மன்னை என நின்றது.

உ-ம் : 'சிறிய கட் பெறினே எமக்கீயும் மன்னே' (புறம். 235) என்புழி மன் கழிந்தது என்னும் பொருள்பட நின்றது. 'புதுமல ரணிய இன்றுவரின் அது'மன் எம் பரிசில் ஆவியர் கோவே' (புறம் 147) இதனுள் மன் என்பது ஆம் என்பது குறித்து நின்றது.1 'கூரிய தோர் வாள் மன்' என்ற வழித் திட்ப மின்று என்றானும், 'வெட்டவல்லார் உளராயின்' என்றானும் ஒழிந்த சொல்லினான் உணரும் பொருள் பட்டது.

நச்.

இது தத்தம் குறிப்பிற் பொருள் செய்வனவற்றுள் ஒன்றன் பொருட்பாகுபாடு கூறுகின்றது.

இ—ள் : மன்னைச் சொல் கழிவே ஆக்கம் ஒழியிசைக் கிளவி என்று அம்மூன்று என்ப—மன்னைச் சொல் கழிவுப் பொருண்மையும் ஆக்கப் பொருண்மையும் எச்சமாய் ஒழிந்து நின்ற சொற்பொருண்மையும் என்று சொல்லப்பட்ட அம் மூன்று கூற்றையுடையது என்று கூறுவர் ஆசிரியர், எ—று.

உ—ம் : 'சிறிய கட் பெறினே எமக்கீயு மன்னே' (புறம் 235) புதுமலர் கஞல இன்று பெயரின் அதுமன் எம்பரிசில் ஆவியர் கோவே' (புறம் 147) 'கூரியதோர் வாள்மன், திட்ப மின்று என வரும்.

கல்.

என்-எனின், இது தத்தம் குறிப்பிற் பொருள் செய்குந வற்றுள் ஒன்றன் பொருட் பாகுபாடு உணர்த்துதல் நுதலிற்று.

இ—ள் : கழிவுப் பொருண்மைக்கண் வரும் மன்னும், ஆக்கப் பொருண்மைக்கண் வரும் மன்னும், ஒழியிசைப் பொருண்மைக்கண் வரும் மன்னும் என மூன்று கூற்றதாம் என்ப மன்னென்னும் சொல்லது பொருட்பாகுபாட்டு வேற்றுமை எ-று.

இவ்வாறு பொருளுணர்த்தலும் அவ்விடைச் சொற் காவ தோர் இலக்கணம் என்பது. அவ்வுதாரணம் உரையிற் கொள்ளப் படும்.

---

1. கூரியதோர் வாளாயிருந்தது இனித்திட்பமின்று; வெட்டவல்லார் உளராயின் இது கூரியதோர் வாளா கும் எனத் தனித்தனிப் பொருள் காண்க.

உ-ம் : 'சிறிய கட் பெறினே எமக்கீயு மன்னே' (புறம். 235) —இது கழிவு.

'பண்டுகாடுமன்' -இஃது ஆக்கம். பண்டு காடு என் பதன்றோ இன்று நாடு என்று ஆக்கம் உணரத்துகின்றது எனின், அதன் பொருளை இதுவும் கூடி நின்று உணர்த்திற்று எனவுணர்க.

'பண்டு கூரியதோர் வாள்மன்' — இஃது ஒழியிசை. இன் றோர் குறைபாடு உடைத்தாயிற்று என்றும் சொல் ஒழிந்தமை தோற்றுவித்து நின்றமை காண்க.

வெள் ......

கழிவு என்பது பயனின்றிக் கழிந்ததற்கு இரங்குதலாகும். ஆக்கம் என்பது முன்னை நிலையினும் மிக்குளதாதல். ஒழி யிசை என்பது சொல்லொழிந்து நின்ற சொற்களின் பொருளைத் தந்து நிற்றல்.

ஆதி.

மன் என்னும் இடைச்சொல் கழிவு ஆக்கம் ஒழியிசைப் பொருளில் வரும்.

* உ-ம் : அன்று யாவரும் வந்து அடிதொழ வாழ்ந்தேன் மன்—
இன்று அது இல்லை என இரங்கல்—வாழ்ந்தேனே?
எனப்பொருள் கழிவு.

பண்டு பரிசிலர் மன்; இன்று புரவலர் (பரிசில் வாழ்க்கையர் ஆக்கமுற்று இன்று பிறங்குகின்றார் எனப் பொருள்) -ஆக்கம்.

நல்ல ஒரு பாட்டுமன்—பாட்டு நல்லது. பாடிய இசை அதனைக் கெடுத்தது என ஒழிந்த ஒரு பொருள் தந்தது—ஒழியிசை.

மன் இடத்தில் 'உம்ம்' என்று அமைத்து ஏக்கம், வியப்பு, எள்ளல் பொருள் தோன்றக் கூறிய கருத்தை நன்கு உணர்க.

இசரயேல் :

மன் சங்க இலக்கியத்தில் மிகுதி, உறுதி ஆகிய பொருள் களிலும் வழங்குகின்றது.

பசந்தனள்மன் என் தோழி (குறுந். 303)—மிகுதி.
உறுவது ஒன்று உண்டுமன் (குறுந். 193—உறுதி.
(இடையும் உரியும்—பக். 20)

---

* காட்டப்பட்ட உதாரணங்கள் உலக வழக்கில் இல் லாதன. செய்யுள் வழக்கே காட்டல் சிறந்தது.

பால.

கருத்து : இவ்வியலுள் உணர்த்தப்படும் மூவகை இடைச் சொற்களுள் தத்தங் குறிப்பிற் பொருள் செய்வன பொரு ளுணர்த்துஞ்சிறப்பும் அவற்றின் பன்மையும் நோக்கி அவற்றை முதற்கண் உணர்த்தத் தொடங்கி இச் சூத்திரத்தான் 'மன்' என்னும் இடைச்சொல் பெற்று வரும் பொருட் குறிப்பு இவை எனக் கூறுகின்றார்.

பொருள் : மன் என்னும் இடைச்சொல் செயற்கழிவும் ஆக்கமும், எச்சமாக ஒழிந்து நிற்கும் பொருண்மையும் என்று சொல்லப்பட்ட அம்மூன்று பொருட் கூறுபாட்டினை உடைய தென்று கூறுவர் புலவர்.

எ-டு : ''சிறிய கட் பெறினே எமக்கீயு மன்னே" இது கழிந்த பொருள் சுட்டிநின்றது. 'பண்டுகாடுமன்' (இப்பொழுது வயலாயிற்று) இது ஆக்கம் குறித்து நின்றது. கூரியதோர் வாள்மன் (இப்பொழுது திட்பமின்று) இது ஒழிந்த சொற் பொருண்மை சுட்டி நின்றது.

தில்

248. விழைவே கால மொழியிசைக் கிளவியென்
றம்மூன் றென்ப தில்லைச் சொல்லே. **(5)**
(விழைவே காலம் ஒழியிசைக் கிளவி என்று
அ மூன்று என்ப தில்லைச் சொல் ஏ)

ஆ. மொ.

இல:

The morpheme 'thil' denotes three senses which are desire, time and suggestion (inference)

ஆல்.

The morphem /til/ appears to introduce the three expressions of a great desire, of time and implied meaning.

பி. இ. நூ:

நேமி. சொ. 52

.........தில்லை பருவம் விழைவு
நயனில ஒழியிசையும் நாட்டு.

நன். 431.

விழைவே காலம் ஒழியிசை தில்லே

இல.வி. 264. ,, ,, ,,

முத்து. ஒ. 3. ,, ,, ,,

இளம்.

வ-று: 1"வார்ந்திலங்கு வையெயிற்றுச் சின்மொழி யரிவையைப்

பெறுகதில் லம்ம யானே" (குறுந். 14)

இது விழைவின்கண் வந்தது.

2"பெற்றாங் கறிகதில் லம்ம வில் லூரே" (குறுந். 14)

இது காலம் பற்றி வந்தது.

"வருகதில் லம்மருவஞ் சேரி சேர" (அகம் 276) என்பது, வந்தக்கால் இன்னதொன்று செய்வல் என்னும் சொல் ஒழிந்து நின்றமையால் ஒழியிசைக்கண் வந்தது.

யாதானும் ஒரு சொல் ஒழிவுபடவரின் அஃது ஒழியிசை எனப்படும் என்றவாறு.

சேனா.

இ-ள்: விழைவு குறித்து நிற்பதும், காலங் குறித்து நிற்பதும், ஆண்டொழிந்து நின்ற சொற்பொருளை நோக்கி நிற்பதும் எனத் தில்லைச் சொல் மூன்றாம், எ-று.

உ-ம்: வார்ந்திலங்கு வையெயிற்றுச் சின்மொழி யரிவையைப்

பெறுகதில் லம்ம யானே" (குறுந். 14) என அவளைப் பெறுதற்கண் உளதாகிய விழைவின்கண் வந்தது.

"பெற்றாங் கறிகதில் லம்மவில் லூரே" (குறுந். 14) எனப் பெற்ற காலத்தறிக வெனக் காலங் குறித்து நின்றது.

"வருகதில் லம்மருவஞ் சேரி சேர" (அகம். 276) என வந்தக்கால் இன்னது செய்வல் என்னும் ஒழியிசைப் பொருள் நோக்கிற்று.

தெய்.

இதுவுமது.

இ-ள்: விழைவுப் பொருளையும் காலப் பொருளையும் ஒழியிசைப் பொருளையும் உணர வரும் தில் என்னும் சொல், எ-று.

---

1. பொருள்: நேராக விளங்குகின்ற கூர்மையான பற்களையும் சிலவான சொற்களையும் உடைய பெண்ணை யான் அடைவேனாக.
2. பொருள்: பெற்ற பொழுது இவ்வூர் அறிக.

உ-ம் : 'அரிவையைப் பெறுகதில் லம்ம யானே'(குறுந்.14) இது விழைவு பற்றி வந்தது.

1பெருங்காட்டுப் பண்ணிய கருங்கோட்டு ஈமம்
நுமக்கரி தாகுக தில்ல எமக்கெம்
பெருந்தோட் கணவன் மாய்ந்தென வரும்பிற
வெள்ளிதழ் கவிழ்ந்த தாமரை
நள்ளிரும் பொய்கையும் தீயுமோ ரற்றே. (புறம். 246)

இதனுள் ஈமம் புகுதல் நுமக்கு அரிதாகுக; எமக்கு இக்காலத்துப் பொய்கையொடு ஒக்கும் என்றமையாற் காலம் குறித்தது.

"வருகதில் லம்மவெஞ் சேரி சேர" (அகம். 276) வந்தா லிவ்வாறு செய்வன் என்னும் ஒழியிசை குறித்து நின்றது.

நச்.

இதுவுமது.

இ—ள்: தில்லைச் சொல் விழைவே காலம் ஒழியிசைக்கிளவி என்று அம்மூன்று என்ப—தில்லைச்சொல் விருப்பமும் காலமும் ஒழிந்து நின்ற பொருண்மையும் என்று சொல்லப்பட்ட அம் மூன்று கூற்றையுடையதென்று கூறுவர் ஆசிரியர், எ—று.

உ-ம் : வார்ந்திலங்கு வையெயிற்றுச் சின்மொழி
யரிவையைப்
பெறுகதில் லம்ம யானே" (குறுந். 14)

எனப் பெறுதற்கண் உளதாகிய விருப்பம் கூறிற்று.

"வருகதில் வல்லே வருகதில் வல்லென
வேந்துவிடு விழுத்தூ தாங்காங் கிசைப்ப
நூலரி மாலை சூடிக் காலிற்
றமியன் வந்த" (புறம். 184)

இது காலம் குறித்தது.

---

1. பொருள்: சுடுகாட்டின்கண் அமைக்கப்பட்ட பெரிய கட்டைகளால் ஆன பிணப்படுக்கை உங்களுக்கு அரியவாகுக; எங்களுக்கு எம்முடைய பெரிய தோளையுடைய கணவன் இறந்தானாக அரும்பு இல்லாதபடி வளமான இதழ் மலர்ந்த தாமரை யையுடைய நீர்மிக்க பெரிய பொய்கையும் இப் பிணத்தீயும் ஒரு தன்மையவே.

2. பொருள்: அரசனால் சொல்லிவிடப்பட்ட சிறந்த தூதுவர் விரைவாக வருக; விரைவாக வருக என ஆங்காங்கே ஒலியெழுப்ப, நூலரி மாலையைச் சூடிக்கொண்டு தான் ஒருவனே காலினாலேயே நடந்து வந்த"

''வருகதில் லம்மவெஞ் சேரி சேர'' (அகம். 276) என வந்தக் கால் இன்னது செய்வல் என ஒழியிசை குறித்தது.

கல்.

என்—எனின், இதுவுமது.

இ-ள்: விழைவின் கண்ணதும் காலத்தின் கண்ணதும் ஒழி யிசைக் கண்ணதும் என மூன்று கூற்றதாம் என்ப தில் என்னும் இடைச்சொல், எ-று.

உ-ம்: 1வார்ந்திலங்கு வையெயிற்றுச் சின்மொழி
யரிவையைப்
பெறுகதில் லம்ம யானே'' (குறுந். 14)

இது விழைவு.

2''பெற்றாங் கறிகதில் லம்மவிவ் வூரே''

என்பது காலம்.

3''வருகதில் லம்மவெஞ் சேரி சேர''

என்பது ஒழியிசை.

ஆதி.

*உ-ம்: பரிசுச் சீட்டின் பணம் பெறுகதில் யானே—விழைவு.
பெற்றதில் மகிழ்க அவனே—காலம் (பெற்றநாளில்)
வருகதில் அவன்—ஒழியிசை—வந்தால் அடிப்பேன்.

கொன்

249. **அச்சம் பயமிலி காலம் பெருமையென்**
றப்பா னான்கே கொன்னைச் சொல்லே.

(அச்சம் பயம்இலி காலம் பெருமை என்று
அ பால் நான்கே கொன்னைச் சொல்ஏ) (6)

---

* இவ்வாறு உலகவழக்கில் கூறுதல் இல்லை. இவர் காட்டும் இடைச்சொல்லாட்சி பற்றிய உலக வழக்கில் உள்ளன கொள்க. இல்லன உதாரணம் ஆகா எனத் தள்ளுக. இவ்விடைச் சொற்கள் பெரும்பாலும் செய்யு ளிலேயே காணப்படுவன. ஆதலின் உரையாளர் யாவரும் செய்யுள் உதாரணங்களே காட்டினர்.

ஆ. மொ:

இல.

The morpheme 'Kon' denotes four senses Which are fear, uselessness, time and greatness.

ஆல்.

The morpheme Kon appears to introduce the four implied expressions of fea, uselessness, time and greatness.

பி. இ. நூ:

நேமி. சொ. 52

.... கொன்
ஆண்டறி காலம் பெருமையச்சமே—நீண்ட
பயனின்மை

இல. வி. 265

அச்சம் பயமிலி காலம் பெருமையென்று
அப்பால் நான்கே கொன்னைச் சொல்லே.

முத்து. ஓ. 4

அச்சம் பயமிலி காலம் பெருமையென்று
அப்பால் நான்கே கொன்னைக் கிளவி.

இளம்.

வ-று: 1கொன்முனை யிரவூர் போலச்
சிலவா குகநீ துஞ்சு நாளே (குறுந். 91)

என அச்சத்தின்கண் வந்தது.

கொன்னே வந்தது
கொன்னே போயினார்

என்பன பயமின்றி வந்தன.

"கொன்வரல் வாடை நினதெனக் கொண்டேனோ" என்று நலியுங்காலை யறிந்து வந்த வாடை என்றவாறு; இது காலத்தின் கண் வந்தது.

---

1. பொருள்: அச்சம்தரும் போர்க்களத்திலுள்ள இரவு துயிலாது விழித்திருக்கும் ஊரில் உள்ளார்போல நீ துயிலும் நாள்கள் சில ஆகுக.

"கொன்னூர் துஞ்சினும் யாந்துஞ் சலமே" (குறுந்.138) என்பது பெருமைக் கண் வந்தது.

சேனா.

இ—ள்: அச்சப் பொருளதும், பயமின்மைப் பொருளதும், காலப் பொருளதும், பெருமைப் பொருளதும் எனக் கொன்னைச் சொல் நான்காம், எ—று.

உ-ம்: **"கொன்முனை யிரவூர் போலச் சிலவாகுக நீ துஞ்சு நாளே"** (குறுந். 91)

என்புழி அஞ்சி வாழும் ஊர் எனவும்,

"கொன்னே கழிந்தன் றிளமை" (நாலடி. 55)

என்புழிப் பயமின்றிக் கழிந்தது எனவும்,

"கொன்வரல் வாடை நினதெனக் கொண்டேனோ"

என்புழிக் காதலர் நீங்கிய காலம் அறிந்து வந்த வாடை எனவும்,

"கொன்னூர் துஞ்சினும் யாந்துஞ் சலமே" (குறுந். 138)

என்புழிப் பேரூர் துஞ்சினும் எனவும் கொன்னைச் சொல் நான்கு பொருள்பட வந்தவாறு கண்டு கொள்க.

தெய்.

இதுவுமது.

இ—ள்: அச்சப் பொருண்மையும், பயனின் றென்னும் பொருண்மையும், காலப் பொருண்மையும், பெரிது என்னும் பொருண்மையும் பற்றி வரும், கொன் என்னுஞ் சொல், எ—று.

உ-ம்: **"கொன்முனை யிரவூர் போல"** (குறுந். 91) என்பது அச்சம் உணர நின்றது.

"கொன்னே கழிந்தன் றிளமையும்" (நாலடி. 55) என்புழிப் பயனின்மை யுணர நின்றது.

"கொன் வரல் வாடை"

என்ற வழிக் காலத்து வருகின்ற வாடை எனக் காலம் உணர நின்றது.

"கொன்னூர் துஞ்சினும்" (குறுந். 138)

என்றவழிப் பெருமை யுணர நின்றது.

இம் மூன்று சொல்லும் பெயர் வினையை யொட்டி வாராது தனி வந்து ஒப்பில் வழியாற் பொருளுணர்த்தினமை

அல்லன், நரந்தங்கண்ணி யிவனோ டிவளிடை, கரந்தவுள்ள மொடு' (குறுந். 54) என்றவழிக் காரணம் பிறிதாகல் வேண்டும் என்னும் ஐயம் குறித்து நின்றது.

எதிர்மறையாவது யாதானும் ஒரு தொழிலை எதிர்மறுத்த தொழிற்கண் வரும். 'சாத்தன் வருதற்கும் உரியன்' என்றவழி வாராமைக்கும் உரியன் எனவரும்.

முற்று என்பது மற்றொரு பொருளை நோக்காது நிற்கும். 'தமிழ்நாட்டு மூவேந்தரும் வந்தார்' எனவரும். 'முழுதும் உணர்ந்தார்' என்பதும் அது.

எண் என்பது பல பொருளை எண்ணிக் குறித்து வரும் 3'மண்டிணிந்த நிலனும், நிலனேந்திய விசும்பும், விசும்பு தைவரு வளியும், வளிதலைஇய தீயும், தீமுரணிய நீரும்' (புறம். 2) எனவரும்.

தெரிநிலை என்பது ஒரு பொருளை ஐயப்படுதலும் துணிதலும் இன்றி ஆராயும் நிலைமைக்கண் வருவது. 4'ஐதேய்ந்தன்று பிறையுமன்று, மைதீர்ந்தன்று மதியுமன்று' (கலி. 57) என வரும்.

ஆக்கம் உம்மையடுத்த சொற்பொருள்மேலாகும் நிலைமையைக் குறித்துவரும் 'வாழும் வாழ்வு', 'உண்ணும் ஊண்' எனத் தொழிலினது ஆக்கம் குறித்து நின்றவாறு கண்டு கொள்க. இது பெயரெச்ச வினைச்சொல் அன்றோ வெனின் ஆம். அதன்கண் உம் இடைச்சொல் என்க அதனானேயன்றே 'உம் உந்தாகும் இடனுமா ருண்டே' (இடை. 42) என்னும் இலக்கணத்தான், 'நெல்லரியும் இருந்தொழுவர்' (புறம். 24) என்னும் பாட்டினுள், 'செஞ்ஞாயிற்று வெயில் முனையின் தெண்கடல் திரைமிசைப் பாயும்' எனற் பாடலது பாயுந்து என வந்தது. இவ்விலக்கணம் வினையியலுள் ஓதாமையால் பெயரெச்ச 'உம்' இடைச்சொல் என்று கொள்ளப்படும். 'பாயும் புனல்' என்பது 'பாய்புனல்' எனத் தொக்குழி, வேற்றுமைப் பொருட்கண் உருபு பெயர் நிற்பத் தொக்கவாறு

---

3. பொருள்: மண் செறிந்த நிலமும், நிலத்தைத் தாங்கிய விசும்பும், விசும்பில் சுழலும் காற்றும், காற்றை யுடன்கொண்ட தீயும், தீயினுக்கு மாறுபட்ட நீரும்.

4. பொருள் : நச். உரைக்குறிப்புப் பார்க்க.

யான் ஒப்பில் வழியாற் பொருள் செய்தன. பிறவும் இவ்வாறு வருவன அறிந்து கொள்க.

நச்.

இதுவுமது.

இ—ள்: கொன்னைச் சொல் அச்சம் பயமிலி காலம் பெருமை என்று அப்பால் நான்கே—கொன்னைச் சொல் அச்சப் பொருள் பயமின்மைப் பொருள் காலப் பொருள் பெருமைப் பொருள் என்று கூறப்பட்ட அக்கூற்று நான்கேயாம், எ-று.

உ-ம்: 'கொன்முனை யிரவூர் போல' என அச்சமும், 'கொன்னே கழிந்தன் றிளமையும்' எனப் பயம் இன்மையும், 'கொன் வரல் வாடை' எனக் காதலன் நீங்கிய காலமறிந்து வருதலையுடைய வாடை எனக் காலமும், 'கொன்னூர் துஞ்சி னும்' எனப் பெருமையும் உணர்த்திற்று.

கல்.

என்-எனின், இதுவும் அது.

இ—ள்: அச்சத்தின் கண்ணும், பயனின்மைக்கண்ணும், காலத்தின் கண்ணும், பெருமைக் கண்ணும் என அக் கூறு நான் காம் கொன்னைச் சொல் எ—று.

உ-ம்: 'கொன்முனை யிரவூர்' என்பது அச்சம். 'கொன்னே வந்தான்' என்பது பயனின்மை. 'கொன் வரல் வாடை நினதெனக் கொணடேனோ' என்பது காலம். 'கொன்னூர் துஞ்சினும்' என்பது பெருமை.

ஆதி.

* உ-ம்: கொன்படை வீரர்—அச்சம்தரும்.
கொன்னே கழிந்தது என் வாழ்நாள்—வீணாக
கொன் பொருள் வரவு பயன்பட்டது—காலத்தில் வந்தது.
கொன்நகர்—பெருநகர்.

---

* உதாரணம் செய்யுளிலிருந்து காட்டலே சிறந்தது
இடைச் சொல் பற்றித் தொல்காப்பியர், தொல்காப்பிய மொழியியல் பக். 238.

பி-கு.

"கொன் என்ற சொல் ஒரு பெயருக்கோ வினைக்கோ அடையாய் அமைந்திருக்க அதனை இடைச்சொல் எனக் கருது வது எவ்வாறு பொருந்தும் எனத் தோன்றவில்லை" என்பர் குமாரசாமி ராஜா.

உம்.

250. எச்சஞ் சிறப்பே யைய மெதிர்மறை
முற்றே யெண்ணே தெரிநிலை யாக்கமென்
றப்பா லெட்டே யும்மைச் சொல்லே (7)

எச்சம் சிறப்பே ஐயம் எதிர்மறை
முற்றே எண்ணே தெரிநிலை ஆக்கம் என்று
அ பால் எட்டே உம்மைச் சொல் ஏ)

ஆ. மொ:

இல.

The morpheme 'um' denotes eight senses which are incompletness, greatness, doubt, negativeness, completeness enumeration, clearness and benifit.

ஆல்.

The morpheme /um/ goes with these eight implied incompletness, greatness, doubt, negation, completeness, enumer ation, indication of known alternatives and becoming somthing.

பி. இ. நூ.

நேமி. சொ 51

தெரிநிலை யாக்கம் சிறப்பு எச்சம் முற்று எண்
அரிதாம் எதிர்மறையே ஐயம்—தரும் உம்மை

நன் 425

எதிர்மறை சிறப்பு ஐயம் எச்சம் முற்று அளவை
தெரிநிலை ஆக்கமொடு உம்மை எட்டே.

இல. வி. 256

எதிர்மறை சிறப்பு எண் எச்சம் முற்று ஐயம்
தெரிநிலை ஆக்கம் என எட்டு உம்மே.

தொன். 134

உம்மையே யெதிர்மறை எச்சம் முற்று அளவை
சிறப்பு ஐயம் ஆக்கம் தெளிவு என எட்டே.

முத்து. ஒ. 5.

எதிர் மறை எச்சம் முற்று எண்ணே தெரிநிலை
ஐயம் சிறப்பு ஆக்கமும் அளிக்கும் உம்மை.

இளம்.

வ-று: சாத்தனும் வந்தான் என்றால் அவனை யன்றிப் [1]பிறரையும் வரவு விளக்கு மாகலின் அஃது எச்சவும்மை.

"தேவரே தின்னினும் வேம்பு கைக்கும்" (நாலடி மெய்ம்மை. 2) என்பது சிறப்பு உம்மை.

"குறவரும் மருளும் குன்றத்துப் படினே" (மலைபடு. 275) என்பதும் அது.

'பத்தானும் எட்டானும்'

என்பது துணியாமை மேல் நின்றமையான் ஐயத்தின்கண் வந்தது.

"கொற்றன் வருவதற்கும் உரியன்'

என்பது வாராமையும் செப்பிநிற்கும் ஆகலின் எதிர்மறை யும்மையாயிற்று.

'தமிழ் நாட்டு [2] மூவரும் வந்தார்'

என்பது முற்றும்மை.

'நிலனும் நீரும் தீயும் வளியும்'

என்பது எண்ணும்மை.

'நன்றும் அன்று தீதும் அன்று, இடைநிகர்த்தாயிற்று' என்பது தெரிநிலையும்மை. இடைநிகர்த்தாயினமை தெரிந் தொழிந்தனம், அவ்விரண்டும் அத்துணைத்து ஒழிய நின்றிலாமையின்.

[3] 'நெடியனும் வலியனும்'

என்பது ஆயினான் என்னும் ஆக்கத்துக்கண் வந்தது ஆக்கவும்மை.

---

1. பிறரது வரவையும் விளக்கும் என்னும் பொருளது.
2. மூவரும் என்பது மூவேந்தரைக்குறித்தது.
3. 'நெடியனும் வலியனும் ஆயினான்' என்றிருப்பின் நன்று.

சேனா.

இ-ள்: எச்சங்குறிப்பது முதலாக ஆக்கம் குறிப்பது ஈறாக உம்மைச் சொல் எட்டாம், எ-று.

உ-ம்: 'சாத்தனும் வந்தான்'என்னும் உம்மை, கொற்றனும் வந்தான் என்னும் எச்சம் குறித்து நிற்றலின் எச்சவும்மை. கொற்றனும் வந்தான் என்பதூஉம் இறந்த சாத்தன் வரவாகிய எச்சங்குறித்து நிற்றலின் எச்சவும்மை.

(குறவரும் மருளும் குன்றத்துப்படினே' (மலை படு 275) என்பது குன்றத்து மயங்கா திபங்குதற்கண் குறவர் சிறந்மையாற் சிறப்பும்மை)

1 ''ஒன்றிரப்பான் போல் இளிவந்துஞ் சொல்லும் உலகம்
புரப்பான் போல்வதோர் மதுகையும் உடையன்
வல்லாரை வழிபட் டொன் றறிந்தான் போல்
நல்லார்கட் டோன்று மடக்கமும் உடையன்
இல்லோர் புன்கண் ஈகையிற் றணிக்க
வல்லான் போல்வதோர் வண்மையும் உடையன் (கலி. 47)

என்புழி இன்னான் என்று துணியாமைக்கண் வருதலின் ஐயவும்மை.

'சாத்தன் வருதற்கும் உரியன்' என்பது வாராமைக்கும் உரியன் என்னும் எதிர்மறையை ஒழிபாகவுடைத்தாய் நிற்றலின் எதிர்மறையும்மை.

'தமிழ்நாட்டு மூவேந்தரும் வந்தார்' என எஞ்சாப் பொருட்டாகலான் முற்றும்மை.

'நிலனும் நீரும் தீயும் வளியும் ஆகாயமும் எனப்பூதம் ஐந்து' என்புழி எண்ணுதற்கண் வருதலின் எண்ணும்மை.

---

1. 'பொருள்: ''என்னிடத்து ஒரு காரியத்தை இரந்து நிற்பான்போலத்தன்னைப் பிறரால் இகழப்பட்டு எளியராந் தன்மை தோன்றவும் சில மொழி கூறும்; அங்ஙனம் குறையிரந்து நிற்பினும் உலகத்தை யெல்லாம் பாதுகாப்பான் போலே இருப்பதொரு வலியும் உடையன்; மெய்ப் பொருள் கூறும் நூல்களைக் கூற வல்லவர்களை வழி பட்டு நின்று அப்பொருளை அறிந்தான் போலே நன்மக்களைக் காண்டொறும் மன அடக்கமுடையன்; வறியோர் வறுமையைக் கொடையினாலே போக்க வல்லான் போலே இருப்பதொரு வலியும் உடையன்'' — நச்சினார்க்கினியர்.

'இருநிலம் 'அடிதோய்தலிற் றிருமகளுமல்லள் அரமகளு மல்லள் இவள் யாராகும்' என்ற வழித் தெரிதற் பொருட் கண் வருதலின் தெரிநிலையும்மை. திருமகளோ அரமகளோ என்னாது அவரை நீக்குதலின் ஐயவும்மையின் வேறாதல் அறிக.

ஆக்கவும்மை வந்தவழிக் கண்டுகொள்க. உரையாசிரியர் 'நெடியனும் வலியனும் ஆயினான்' என்புழி உம்மை ஆக்கம் குறித்து நிற்றலின் ஆக்கவும்மை என்றார். "செப்பே வழீ இயினும் வரைநிலையின்றே" (கிளவி. 15) என்னும் உம்மை வழுவை இலக்கணமாக்கிக்கோடல் குறித்து நின்றமையின் ஆக்கவும்மை என்பாரும் உளர்.

தெய்:

இதுவுமது.

இ-ள்: எச்ச முதலாகச் சொல்லப்பட்ட எண்வகைப் பொருளும் உணரவரும், உம்மைச் சொல், எ-று.

உ-ம்: எச்சம் இறந்தது தழீஇயதும், எதிரது தழீஇயதும் என இருவகைப்படும். சாத்தனும் வந்தான் என்ற வழி முன் ஒருவனது வரவு குறித்தானாயின் இறந்தது தழீஇயதாம். பின் ஒருவன் வரவு குறித்தானாயின் எதிரது தழீஇயதாம். ஏனை ஒழிந்த பொருளைக் குறித்தமையின் எச்சமாயிற்று.

சிறப்பு என்பது மிகுதி. அஃது உயர்பால் மிகுதலும் இழி பால் மிகுதலும் என இருவகைப்படும். 1'அக்காரம் யாவரே தின்னினும் கையாதாம் கைக்குமே, தேவரே யென்னினும் வேம்பு' (நாலடி. 112) என்றவழி 'யாவர்' என்றது இழிபு குறித்து நின்றது; தேவர் என்பது உயர்பு குறித்து நின்றது.

ஐயம் என்பது ஐயப்பட்ட பொருண்மை குறித்து வருவது. 2'ஏனல் காவல் இவளுமல்லள், மான்வழி வருகுநன் இவனும்

---

1. பொருள்: சர்க்கரையை யாவர் தின்றாலும் கசக் காது; வேப்பம்பழத்தைத் தேவரே தின்றாலும் கசக்கும்.

2. பொருள்: 'இவளும் தினைப்புனம் காவல் செய்பவள் அல்லள்; இவனும் மான் தப்பியோடிய வழியைத் தேடி வருபவன் அல்லன்; நரந்தம்பூமாலை யணிந்த இவனுடன் இவளுக்குக் கரந்த உள்ளம் (உண்டு)."

போல வினை நிற்ப உருபு தொகுதலானும், செய்யும் என்பது வினையும் உருபுமாகிய இருநிலைமைத்து என்று கொள்க. செய்யும் என்னும் முற்றுச் சொல்லின்கண் 'உம்' எவ்வாறு வந்த தெனின், அது மற்றொரு பொருளைக் குறித்து நில்லாமையின் ஈண்டு இடமின்றென்க. முற்ற நிற்றலின் முற்றும்மை எனினும் இழுக்காது.

ஆக்கவும்மை என்பதற்கு'நெடியனும் வலியனும் ஆயினான்' என உதாரணம் காட்டுபவால் எனின், அஃது எண்ணும்மை யென்க. தனிவரின் எச்சவும்மையாம்.

நச்.

இதுவுமது.

இ-ள் : உம்மைச்சொல் எச்சம் சிறப்பே ஐயம் எதிர்மறை முற்றே எண்ணே தெரிநிலை ஆக்கம் என்று அப்பால் எட்டே—உம் என்னும் சொல் எச்சத்தைக் குறிப்பதும் சிறப்பைக் குறிப்பதும் ஐயத்தை குறிப்பதும் எண்ணைக் குறிப்பதும் தெரிநிலையைக்குறிப்பதும் ஆக்கத்தைக் குறிப்பதும் என அக்கூற்று எட்டாம், எ-று.

எச்சம் இறந்தது தழீஇயதும் எதிரது தழீஇயதும் என இரு வகைத்து. சாத்தனும் வந்தான் என்னும் உம்மை கொற்றனும் வந்தான் என எதிரது தழீஇயிற்று. பின் வந்த கொற்றனும் வந்தான் என்பதூஉம் முன் வந்த 'சாத்தனும் வந்தான்' என் பதனைத் தழுவுதலின் இறந்தது தழீஇயிற்று.இனி இவ்விரண்டி னையும் எதிர்காலந் தழீஇயினவாக்கி 'இன்று சாத்தனும் வரும், நாளைக் கொற்றனும் வரும்' என்பன எதிரது தழீஇயின என்றுமாம்.

இன்னும் இவ்வெச்சத்தான் 'யான் கருவூர்க்குச் செல்வல்' என்றாற்கு, யானும் அவ்வூர்க்குப் போதுவல்' என முழுவதூஉம் தழுவுவதும், அவ்வாறு கூறினாற்கு 'யானும் உறையூர்க்குப் போதுவல்' என ஒருபுடை தழுவுவதும் என இரு வகைத்தாம்.

சிறப்பு உயர்வு சிறப்பும் இழிவு சிறப்பும் எனஇருவகைத்து. 1"உப்பொடு நெய்பால் தயிர் காயம் பெய்திடினும், கைப்பறா

---

1 பொருள் : பேய்ச்சுரைக்காயானது உப்பு நெய் பால் தயிர் காயம் ஆகியவற்றைச் சேர்த்துச் சமைத்தாலும் தன் கசப்புச்சுவை அறாது.

பேய்ச்சுரையின் காய்" (நாலடி. 116) "குறவரும் மருளும் குன்றத்துப்படினே" (மலை. 275) "ஊர்க்கும் அணித்தே பொய்கை" (குறுந். 113) என்பன வுயர்வு. 'அவ்வூர்ப் [2]பூசையும் புலால் தின்னாது' என்பன இழிவு.

> "ஒன்று, இரப்பான் போல் எளிவந்தும் சொல்லும் உலகம்
> புரப்பான் போல்வதோர் மதுகையும் உடையன்
> வல்லாரை வழிபட்டொன் றறிந்தான் போல்
> நல்லார்கண் தோன்றும் அடக்கமும் உடையன்
> இல்லோர் புன்கண் ஈகையின் தணிக்க
> வல்லான் போல்வதோர் மதுகையும் உடையன்
> அன்னான் ஒருவன்" (கலி. 47)

என்புழி இன்னான் என்று துணியாமைக்கண் வருதலின் ஐயம். [3]"பொய்கைக்குச் சேய்த்து மன்றே சிறுகான் யாறே" (குறுந். 113) என்பதும் அது.

சாத்தன் வருதற்கும் உரியன் என்பது, வாராமைக்கும் உரியன் என எதிர்மறையை ஒழிபாக வுடைத்தாய் நிற்றலின், எதிர்மறை. இஃது, "அஃறிணை விரவுப் பெயர் இயல்புமாருளவே" (எழுத். தொகை மரபு. 13) எனப் பண்பு பற்றியும் வரும். இது பிறிதோர் பொருளினைத் தழுவாது ஒரு பொருளின் வினையை மறுத்து நிற்றலின் எச்சத்தின் வேறாயிற்று. மேல் ஆசிரியர், 'எதிர்மறை எச்சம்' (எச்ச. 39) என்றமையின் இஃது எச்சத்தின் கூறாம். தமிழ்நாட்டு வேந்தரும் வந்தார், 'யாதும் ஊரே' (புறம். 92), 'நாளும் அன்னான் புகழும் அன்னை' என்பன முற்றும்மை. "நிலனும் நீரும் தீயும் வளியும் ஆகாயமும் எனப் பூதம் ஐந்து" என்பன எண். மண் திணிந்த நிலனும், நிலன் ஏந்திய விசும்பும், விசும்பு தைவரு வளியும்' (புறம். 2) என்பதும் அது.

"இரு நிலம் அடிதோய்தலின் திருமகளும் அல்லள்; அரமகளும் அல்லள்; இவள் யாராகும்?" என்பது திருமகளோ அரமகளோ என ஐயுறாது ஆராய்தற்கண் வருதலின் தெரிநிலை.

---

2. பூசை—பூனை
3. பொருள்: சிறிய காட்டாறு பொய்கைக்குத் தொலைவானதன்று.

1“ஐதேய்ந்தன்று பிறையும் அன்று, மைதீர்ந்தன்று மதியுமன்று, வேய மன்றன்று மலையுமன்று, பூவமன்றன்று சுனையுமன்று” (கலி. 55) என்பதும் அது. நெடியனும் வலியனுமாயினான் என்பது ஆக்கம். “செப்பே வழீஇயினும் வரைநிலை யின்றே” (கிளவி 15) என்பது இலக்கணம் ஆக்கிக் கோடல் குறித்தமை யின் ஆக்கமுமாம்.

கல்.

என்-எனின் இதுவுமது.

இ-ள்: எச்சத்தின் கண்ணதும் சிறப்பின்கண்ணதும் ஐயத்தின் கண்ணதும் எதிர்மறைக்கண்ணதும் முற்றின் கண்ணதும் எண்ணின் கண்ணதும் தெரிநிலைக் கண்ணதும் ஆக்கத்தின் கண்ணதும் என அக்கூறு எட்டாம் உம் என்னுஞ்சொல், எ-று.

எச்சம் இறந்தது தழீஇயதும் எதிரது தழீஇயதும் என இரு வகைத்து. அவையாவன: யான் கருவூர்க்குச் செல்வேன்’ என்றாற்கு ‘யானும் அவ்வூர்க்குப் போதுவல்’ என்பதும், அவ்வாறு கூறினார்க்கு ‘யானும் உறையூர்க்குப் போதுவல்’, என்பதூஉம் எனஇவை.

இனிச்சிறப்பு: உயர்வுச் சிறப்பும் இழிவு சிறப்பும் என இரு வகைத்து. உயர்வு, ‘தேவர்க்கும் வேம்பு கைக்கும்’ என்பது. ‘ஊருக்கும் அணித்தே பொய்கை’ என்பதும் அது. இழிபு அவ்வூர்ப் பூசையும் புலால் தின்னாது என வரும்.

ஐயம்: பத்தும் எட்டும் உள என்பது.

எதிர்மறை: ‘கொற்றன் வருதற்கும் உரியன்’ என்பது. இவ்வெதிர்மறை ‘அஃறிணை விரவுப் பெயர் இயல்புமாருளவே” (தொல். எழு. தொகை.) எனப்பண்பு பற்றியும் வரும். எச்சத்தோடு இதனிடை வேற்றுமை என்னையெனின், அது பிறிதோர் பொருளினைத் தழுவும்; இஃது அப்பொருட்டானும் ஒரு கூற்றைத் தழுவும் என்பது.

---

1 பொருள்: நுதல் வியப்பை யுடைத்தாய்த் தேய்ந்தது, ஆயினும் பிறையும் அன்று, முகம் மறுவற்றது, ஆயினும் மதியும் அன்று; தோள் வேயின் தன்மை நெருங்கிற்று, அது பிறக்கும் இடம் அன்று; கண் பூவின் தன்மை நெருங்கிற்று, அது பிறக்கும் இடமன்று.

இனிமுற்று: 'தமிழ் நாட்டு மூவேந்தரும் வந்தார்' என்பது. 'யாதுமூரே' 'நாளுமன்னான் புகழு மன்னை' என்பனவும் முற்றும்மை.

இனிஎண்: 'நிலனும் நீரும் தீயும் வளியும் ஆகாயமும் எனப் பூதம் ஐந்து' என்பது.

இனித்தெரிநிலை: 'நன்றுமன்று தீதுமன்று' என்பது, 'இடைநிகர்த்தது' என்றோர் பொருண்மை தெரிவித்து நிற்ற லான் தெரிநிலை என்றாயிற்று.

இனி ஆக்கம், 'நெடியனும் வலியனும் ஆயினான்' என்பது, இஃது எண் அன்றோ வெனின், ஒருபொருள் தன்னையே சொல்லுதலின் அன்றாயிற்றுப் போலும்.

மற்றும் இதனகத்து விகற்பமெல்லாம் அறிந்துகொள்க.

பால.

கருத்து :- உம்மை இடைச் சொல்லின் பொருட்குறிப்பு இவை என்கின்றது.

பொருள் :- உம் என்னும் இடைச்சொல் (குறித்துவரும்) எச்சமும், (இழிவும் உயர்வும் குறித்து வரும்) சிறப்பும், ஐயமும். எதிர்மறையும், முழுமையும், எண்ணும், ஆய்வுநிலையும், ஆக்கமும் என்று சொல்லப்படும் அவ் எட்டுப் பொருட்கூறு பாட்டினையுடையதாம்.

எ.டு:- 1) முறையே, சாத்தனும் வந்தான், இது முன்னர்க் கொற்றன் வந்தமையைக் குறித்து நிற்றலின் இறந்தது தழுவிய எச்ச உம்மை.

2) யானைக்கும் அடிசறுக்கும்,என்பது உயர்வு சிறப்பும்மை இவ்வூர்ப்பூசையும் புலால்தின்னாது என்பது இழிவு சிறப்பும்மை

3) ஒன்று இரப்பான்போல் எளிவந்தும் சொல்லும்
உலகம்
புரப்பான் போல்வதோர் மதுகையு முடையன்
வல்லாரை வழிபட் டொன்றறிந்தான் போல்
நல்லார்கள் தோன்றும் அடக்கமுமுடையன்.
.........அன்னான் ஒருவன் (கலி-47)

இஃது இன்னான்எனத் துணியப்படாமையின் ஐயவும்மை.

4) மறப்பினும் ஒத்துக் கொளலாகும்—(குறள்-134) என் புழி மறத்தற்கூடாது எனப் பொருள் தந்து நிற்றலின் எதிர் மறையும்மையாம். மற்றது தள்ளினும் தள்ளாமை நீர்த்து— "கற்றிலனுயினும்கேட்க" எனவருவனவும் அது.

சாத்தன் வருதற்கும் உரியன் என்பது வாராமைக்கும் உரியன் எனப்பொருள் தருமிடத்து எதிர்மறையும்மை, வந்து உண்ணுதற்கும் உரியன் பேசுதற்கும் உரியன் எனப் பொருள் தரின் எச்சவும்மையாம்.

5) முத்தமிழுங்கற்ருன் என்பது முற்றும்மை.

6) நிலனும் நீரும் தீயும் வளியும் காயமும் எனப்பூதமைந்து என்பது எண்ணும்மை.

7) இருநிலம் அடிதோய்தலின் திருமகளும் அல்லள், அரமகளும் அல்லள், இவள் யாராகும்; என ஆய்வின் கண் வருதலின் தெரிநிலை உம்மை, ஆய்வின்பயன் பின்னர் மானிடமகளே எனத்துணிதலாம்.

8) செந்தமிழால் வையினும் உவக்கும் சேயோன், என்புழி வைதலை வாழ்த்தாக எண்ணிக் கோடலின் ஆக்க உம்மையாம்.

"செப்பே வழீ இயினும் வரை நிலையின்றே" என்பது அது.

ஓ

251. பிரிநிலை வினாவே யெதிர்மறை யொழியிசை
தெரிநிலைக் கிளவி சிறப்பொடு தொகைஇ
யிருமூன் றென்ப வோகா ரம்மே. **(8)**

(பிரிநிலை வினாவே எதிர்மறை ஒழியிசை
தெரிநிலைக் கிளவி சிறப்பொடு தொகைஇ
இருமூன்று என்ப ஓகாரம் ஏ).

ஆ. மொ :

இல.

The scholars say that 'o' denotes six senses which are separation, interrogativeness, inference, clearness and greatness.

ஆல்.

The morpheme lol goes with the six expressions of doubt, interrogation, negation, implication, explicitness and distinction.

பி. இ. நூ:

நேமி. சொ. 54.

> "சிறப்பும் வினாவும் தெரிநிலையும் எண்ணும்
> உறப்பின் எதிர்மறையி னோடும்—வெறுத்த
> ஒழியிசையும் ஈற்றசையும் ஓகாரம்."

நன். 423.

> ஒழியிசை வினாச்சிறப்பு எதிர்மறை தெரிநிலை
> கழிவு அசைநிலை பிரிப்பு என எட்டு ஓவே.

இல. வி. 253.

> ஒழியிசை வினாச்சிறப் பெதிர்மறை தெரிநிலை
> கழிவு பிரிப்பு அசைநிலை என எட்டு ஓவே.

தொன். 132.

> ஓ பிரிப் பசைநிலை ஒழிவு எதிர்மறை வினாத்
> தெளிவு கழிவு சிறப்பென எட்டே.

முத்து. ஒ. 6.

> தெரிநிலை எதிர்மறை சிறப்புப் பிரிநிலை
> ஒழியிசை வினா ஆறு ஓகாரம்மே.

இளம்.

வ-று : பிரிநிலை : அவனோ கொண்டான் என்பது.
வினா : அவனோ அவனோ என்பது.
எதிர்மறை : யானோ கொண்டேன் என்பது.
ஒழியிசை : கொளலோ கொண்டான் என்பது. 'கோடற்குத் தகுமாயினும் கொண்டுய்யப் போயினா னல்லன்' என ஒழிவுபட வந்தமையான் ஒழியிசையாயிற்று.

தெரிநிலை : 'நன்றோ அன்று; தீதோ அன்று; இடை நிகர்த்ததாயிற்று' என்பது.

சிறப்பு : ஓஒ பெரியன் என்பது.

சேனா.

இ-ள் : பிரிநிலைப்பொருட்டாவது முதலாக ஓகாரம் அறு வகைப்படும், எ-று.

உ-ம் : "யானோ தேறேன் அவர் பொய் வழங்கலரே" (குறுந். 21) என்பது தேறுவார் பிறரிற் பிரித்தலின் பிரிநிலை எச்சமாயிற்று.

'சாத்தன் உண்டானோ' என்பது வினா ஓகாரம்.

'யானோ கொள்வேன்' என்பது 'கொள்ளேன்' என்னும் எதிர்மறை குறித்து நிற்றலின் எதிர்மறை ஓகாரம்.

'கொளலோ கொண்டான்' என்பது 'கொண்டுய்யப்போயி னானல்லன் முதலாய ஒழியிசை நோக்கி நிற்றலின் ஒழியிசை யோகாரம்.

'திருமகளோ வல்லள் அரமகளோ வல்லள் இவள் யார்?' என்ற வழித் தெரிதற் கண் வருதலின் தெரிநிலை ஓகாரம்.

'ஓஒ பெரியன்' என்பது பெருமை மிகுதி யுணர்த்தலிற் சிறப்போகாரம்.

தெய்.

இதுவுமது.

இ-ள் : பிரிநிலை முதலாக ஓதப்பட்ட ஆறிடமும் என்று சொல்லுவர், ஓகாரமாகிய இடைச்சொல் பொருள்உணர்த்தும் இடம், எ-று.

உ-ம் : பிரிநிலையாவது பிற பொருளினின்றும் பிரித்தமை தோன்ற வருவது. 'கானங் காரெனக் கூறினும் யானோ தேறேன் அவர் பொய்வழங்கலரே அவரோ'வாரார்'(குறுந்.29) என வரும். எல்லாரும் தேறினும் யான்தேறேன், எல்லாரும் வரினும் அவர் வாரார் எனப் பிரிநிலைப் பொருண்மை தோன் றியவாறு கண்டு கொள்க.

வினா என்பது வினாவுதற் பொருள்மேல் வரும். அதுவோ? உண்டாயோ? எனவரும்.

எதிர்மறையாவது தன்னாற் சொல்லப்பட்ட பொருளின் மாறுபட்டு வந்தது. உண்ணேனோ வாரேனோ என்றவழி உண்பல், வருவல் என்னும் பொருள்பட்டது.

ஒழியிசையாவது தன்னாற் சொல்லப்பட்ட பொருளன்றி, மற்றொரு பொருளுங் கொள்ள நிற்பது. 'செய்கையோ செய்தான்'என்ற வழிப் பின்பும் இவ்வாறு செய்திலன் என்னும் பொருளுங் குறித்து நின்றவாறு கண்டு கொள்க.

தெரிநிலை என்பது ஒரு பொருளை ஆராயும் நிலைமைக் கண் வருவது. 'திருமகளோ அல்லள், நாமகளோ அல்லள்; இவள் யாராகும்' எனவரும்.

சிறப்பென்பது பொருளின் உயர்வு குறித்து நிற்கும். 'காணக நாடனை நீயோ பெரும' எனவரும். அஃதேல் எழுத்ததிகாரத்து ஓகார வீற்றுள் ஐயம் என்றும் ஓர் ஓகாரம் ஓதினா ரால் எனின், அது தெரிநிலைக்கண் அடங்கும் என்பதூஉம் ஒன்று.

வந்தது கண்டு வாராதது முடித்தல் என்பதனால், [1]ஆண்டு மாறுகோள் எச்சமும் வினாவும் ஐயமும் என ஓதப்பட்ட வற்றுள் (உயிர்ம. 88) [2]வாராததுங்கொள்ளப்படும். ஒருவனோ ஒருத்தியோ தோன்றுகின்றார் எனவரும்.

நச்.

இதுவுமது.

இ-ள்: பிரிநிலை வினாவே எதிர்மறை ஒழியிசை தெரி நிலைக் கிளவி சிறப்பொடு தொகைஇ இரு மூன்று என்ப ஓகாரம்மே—பிரிநிலைப் பொருண்மை வினாப் பொருண்மை எதிர்மறைப் பொருண்மை எஞ்சிநின்ற சொற்பொருண்மை ஆராயும் நிலைமையையுடைய பொருண்மை என்கின்ற இவற்றை மிகுதிப் பொருண்மையோடே தொகுத்து ஓகாரப் பொருண்மை ஆறு என்று கூறுவர் ஆசிரியர், எ-று.

உ-ம்: 'யானோ தேறேனவர்பொய் வழங்கலரே' (குறுந். 29) — இது தேறுவார் பிறரிற் பிரித்தலின் பிரிநிலை.

சாத்தன் உண்டானோ?—இது வினா
யானோ கொள்வேன்?— இஃது எதிர்மறை

[3]கொளலோ கொண்டான்—இது, கொண்டு உய்யப்போக லாயினான் என்றலின் ஒழியிசை.

'திருமகளோ அல்லள்; அரமகளோ அல்லள்; இவள் யார்?' என்பது தெரிநிலை.

'ஓஒ உவமன் உறழ்வின்றி ஒத்ததே' (களவழி. 36)—இது மிகுதி உணர்த்தலின் சிறப்பு.

---

1. ஆண்டு உயிர் மயங்கியல் 88 ஆம் சூத்திரத்துள்.
2. வாராதது—இச்சூத்திரத்தில் வாராதது ஐயம்.
3. பிறர் 'கொண்டுய்யப் போயினானல்லன்' என்னும் ஒழிந்த பொருளைத் தருவதாகக் கூற, இவர் 'கொண் டுய்யப் போகலாயினன்' என்றதைத் தந்ததன் நோக்கம் எதிர்மறையாக இன்றி உடன்பாடாக முடிய வேண்டும் எனக் கருதியது ஆகலாம். எதிர்மறையாக முடிவதையும் உடன் படுவர் என்பதை எச்சவியல் 38 ஆம் சூத்திர உரையிற் காண்க.

'மாறுகொள் எச்சமும் வினாவும் ஐயமும்' (உயிர்மய. 88) என்னுஞ் சூத்திரத்தால் ஐயமும் கொண்டார். அது, 'பத்தோ பதினொன்றோ?' எனவரும்.

கல்.

என்-எனின், இதுவும் அது.

இ-ள்: பிரிநிலைப் பொருண்மை, வினாப் பொருண்மை, எதிர்மறைப் பொருண்மை, ஒழியிசைப் பொருண்மை, தெரிநிலைப் பொருண்மை என இவற்றைச் சிறப்புப் பொருண்மையோடு தொகுத்து ஆறு என்று சொல்லுபஆசிரியர், ஓகாரத்துப் பொருண்மை, எ-று.

உ-ம்: பிரிநிலை: அவனோ கொண்டான் என்பது இஃது இப்போது வினாவாய் நடக்கின்றதெனவுணர்க.

இனிவினா : 'அவனோ அல்லனோ'
இனி எதிர்மறை: 'யானோ கொள்வேன்' என்பது.
இனி ஒழியிசை: 'கொளலோ கொண்டான்' என்பது.
இனித் தெரிநிலை: 'நன்றோ வன்று; தீதோவன்று' என்பது
இனிச் சிறப்பு: 'ஓ பெரிது' என்பது.

ஆதி.

உ-ம் : இவனோ திருடன்—பிரிநிலை
இவனோ திருடன் – வினா
இவனோ திருடன்—எதிர்மறை
பிச்சைக்கோ வந்தான்—ஒழியிசை (திருட)
ஆணோவன்று; பெண்ணோவன்று—தெரிநிலை
ஓ! நன்கு படித்தாய்—சிறப்பு

இசரயேல்.

அன்னையோ யாம்எம் மகளைப் பாராட்டக் கதுமென (கலி. 85)—வியப்பு.

கேளாய் வாழியோ மகளை நின்தோழி (அகம். 63)—அசை நிலை. (இடையும் உரியும் பக். 21)

ஏ

252. **தேற்றம் வினாவே பிரிநிலை யெண்ணே**
யீற்றசை யிவ்வைந் தேகா ரம்மே. **(9)**
(தேற்றம் வினாவே பிரிநிலை எண்ணே
ஈற்றசை இவ்ஐந்து ஏகாரம் ஏ.)

ஆ. மொ:
இல.

The 'ஏ' serves five purposes which are denoting clearness, interrogativeness, separation and enumeration, and being final syllable.

ஆல்.

'ஏ' goes with the five expressions of clarity of choice, interrogation, doubt, enumeration and the final enphonic phoneme.

பி. இ. நூ:

நேமி. சொ. 57

தேற்றம் வினாஎண் எதிர்மறையும் தேமொழியாய்
ஈற்றசையும் ஏகாரம் என்.

நன். 422

பிரிநிலை வினாஎண் ஈற்றசை தேற்றம்
இசைநிறை என ஆறு ஏகாரம்மே.

இல. வி. 252

தேற்றம் வினாஎண் பிரிநிலை எதிர்மறை
ஈற்றசை எனஆறு ஏகா ரம்மே.

தொல். 131

ஏஎன் இடைச்சொல் ஈற்றசைதேற்றம் எண்
வினாப்பிரி நிலை இசைநிறை என ஆறே.

முத்து. ஒ. 7

எண்ணே பிரிநிலை ஈற்றசை தேற்றம்
வினாவோ ரைந்தும் விளக்கும் ஏகாரம்.

இளம்.

வ-று: தேற்றம்: 'அவனே கொண்டான் என்பது.

வினா: 'நீயே கொண்டாய்' என வினாவிச் சொல்வது.

பிரிநிலை: 'அவனே கொண்டான்' என்பது; பலருள் ஒருவனைப் பிரித்துச் சொல்லியது.

எண்: நிலனே நீரே தீயே வளியே ஆகாயமே எனவரும்.

ஈற்றசை: 1 "கடல்போற் றோன்றல காடிறந் தோரே" (அகம். 1) எனவரும் ஈற்றின்கண் என்றவாறு.

சேனா.

இ-ள்: தேற்றேகார முதலாக ஏகாரம் ஐந்து, எ-று.

உ-ம்: 'உண்டேஎ மறுமை' எனத் தெளிவின்கண் வருதலின் தேற்றேகாரம்.

'நீயே கொண்டாய்' என வினாப் பொருள் உணர்த்தலின் வினாவேகாரம்.

'அவருள் இவனே கள்வன்' எனப் பிரித்தலின் பிரிநிலை யேகாரம்.

'நிலனே நீரே தீயே வளியே' என எண்ணுதற்கண் வரு தலின் எண்ணேகாரம்.

'கடல்போற் றோன்றல காடிறந் தோரே' (அகம்.1) என்பது செய்யுள் இறுதிக்கண் வருதலின் ஈற்றசையேகாரம்.

2 'வாடா வள்ளியங் காடிறந் தோரே' (குறுந். 216) எனச் செய்யுளிடையும் வருதலின் ஈற்றசை என்பது மிகுதி நோக்கிச் சென்றகுறி.

தெய்.

இதுவுமது.

இ-ள்: தேற்றம் முதலாக ஐந்து பகுதிய; ஏகார இடைச் சொல், எ-று.

உ-ம்: 'அவனோ செய்தான்' என்பது துணிவு குறித்த வழித் தேற்றேகாரமாம். ஈண்டு அளபெடை வரும். வினாக் குறித்தவழி வினாவேகாரமாம். 'யானே வந்தேன்' என்ற வழிப் பிறர் கூடலின்றியே எனப் பொருள்படுதலிற் பிரிநிலை யேகாரமாம். எண்ணுக் குறித்துவரும் சொல்லே குறிப்பே ஆயிரண் டெச்சம்......ஈற்றசை என்பது சொல்லின் இறுதிக்

---

1. பொருள்: கடல் போல் தோன்றுதலையுடைய காட்டைக் கடந்து சென்ற நம்தலைவர்.
2. பொருள்: வாடாத வள்ளிக் கொடிபடர்ந்த காட்டைக் கடந்தார். "வாடா வள்ளி யங் காடிறந்தோரே" என்பது செய்யுளின் ஈற்றடியன்மையின் இவ் வாறு எழுதினார்.

கண் அசைநிலையாகி நிற்பது. கடல்போற் றோன்றல காடிறந் தோரே' எனவரும்.

அஃதேல் எழுத்ததிகாரத்துள் 'மாறுகோள் எச்சமும் வினாவும் எண்ணும்' (உயிர்ம. 73) என ஏகாரவீறு ஓதினார்; அவற்றுள் மாறுகொள் எச்சம் ஈண்டு ஓதாதது என்னையெனின், ''வன்புற வரூஉம் வினாவுடை வினைச்சொல், எதிர் மறுத்துணர்த்தற்கு உரிமையும் உடைத்தே" (வினை. 47) என்றாராகலின் அது வினாவினுள் அடங்கும். அன்றியும் வந்தது கண்டு வாராதது முடித்தல் என்பதனானும் கொள்க. "யான் வைதேனே'' என்ற வழி வைதிலேன் என்னும் எதிர் மறைப் பொருள் பட்டது.

இவை மூன்று சொல்லும் பெயரொடு ஒட்டுப்பட்டு நின்று தத்தம் குறிப்பினாற் பொருள் உணர்த்தின. பிறவும் இவ்வாறு வருவன அறிந்து கொள்க.

நச்.

இது பெரும்பான்மை பொருள்படுமாறும் சிறுபான்மை அசைநிலையாமாறுங் கூறுகின்றன.

இ-ள்: தேற்றம் வினாவே பிரிநிலை எண்ணே ஈற்றசை இவ்வைந்து ஏகாரம்மே—தெளிவுப்பொருண்மை வினாப் பொருண்மை பிரிநிலைப்பொருண்மை எண்ணுப் பொருண்மை ஈற்றசையாதல் என இவ்வைந்து வகைப்படும் ஏகாரம், எ-று.

உ-ம்: உண்டேஎ மறுமை! நீயே உண்டாய்?, அவருள் இவனே கள்வன், 'நிலனே நீரே தீயே வளியே', 'கடல்போல் தோன்றல காடிறந்தோரே' எனவரும்.

ஈற்றசை என்றதனைச் செய்யுள் ஈற்றின்கண் அன்றி 'வாடாவள்ளியங் காடிறந்தோரே' (குறுந். 216) எனச் சொல்லின் ஈற்றிலும் கொள்க. யானே கொண்டேன் என்புழி நீயே கொண்டாய் என்னும் எதிர்மறைப் பொருள் தருதல் 'மாறுகொள் எச்சமும் வினாவும்' (உயிர்ம. 73) என்பதனாற் கொள்க.

கல்.

என்—எனின், இது பெரும்பான்மை பொருள்படுமாறும் சிறுபான்மை யசைநிலையாமாறும் உணர்த்துதல் நுதலிற்று.

இ—ள் : தேற்றப் பொருண்மை வினாப் பொருண்மை பிரிநிலைப் பொருண்மை எண்ணுப் பொருண்மை ஈற்றசை யாதல் என இவ்வைந்து வகைப்படும் ஏகாரம், எ—று.

உ—ம் : தேற்றம்—அவனே கொண்டான்.

இனி வினா: நீயே கொண்டாய்
இனிப்பிரிநிலை: அவனே கொண்டான்
இனிஎண்: நிலனே நீரே தீயே வளியே
இனி ஈற்றசை: 'கடல் போல் தோன்றல காடிறந் தோரே'. ஈற்றசை என்றமையான் மொழிமுதற்கண் அசை யாகாது என்பது.

ஆதி.

உ—ம்: ஒன்றே தெய்வம்—தேற்றம்
இவனே திருடன்—வினா
இவனே திருடன்—பிரிநிலை
மானே மரமே மயிலே குயிலே-என எண்
இயம்புவன் எழுத்தே—ஈற்றசை

பொன். கோதண்டராமன்

இவர் ஏகாரம் தரும் பலபொருள்களையும் தொகுத்துக் கூறியுள்ளார். அவை உதாரணங்களுடன் வருமாறு:—

1. எதிர்மறை— அவர் வாரிவாரிக் கொடுப்பாரே என்ற வழிச் சிறிதும் கொடார் என்ற பொருளில் நிற்றலின் எதிர் மறையாயிற்று.
2. கருதல்—'அவர் இன்று இங்கு வாருவரே' என்றவழி அவர்எப்போதும் போல இன்றும் வருவார் என்று கருதுவதைக் குறித்து நிற்றலின் கருதலாயிற்று.
3. *விலக்கு— 'அவரே போகட்டும்' என்றவழிப் பிறர் போக வேண்டா அவரே போகட்டும் என்று பொருள் பயத்தலின் இது விலக்காயிற்று. அவரே போகட்டும் என்று மற்றவரை விலக்குதல் காண்க.
4. மிகை— 'இதன் பொருள் ஆசிரியர்க்கே தெரியாது'' என்றவழி மிகைப்படுத்திக் கூறிய குறிப்புக் காணப் படுதலின் இது மிகை. 'பாம்பைக் கண்டால் படையே நடுங்கும்' என்பதும் அது.

---

*இதுபிரிநிலையின் பாற்படும்.

5. முற்று—'உன் போக்கு ஊருக்கே பிடிக்கவில்லை' என்ற வழி ஊரிலுள்ளார் அனைவரும் உன் போக்கை வெறுக்கிறார்கள் என முற்றுப் பொருள் பயத்தலின் முற்றாயிற்று. 'வீடே பொலிவிழந்தது' என்றவழி வீடு முற்றும் பொலிவிழந்தது எனப் பொருள்தரின் இதுவும் முற்றாம்.

6. புறக்கணிப்பு—'அவர் போனால் போகட்டுமே' என்ற வழி நண்பர் போதல் புறக்கணிக்கப் படுதலின் புறக்கணிப்பாயிற்று.

7. முடிப்பு— 'குழந்தைக்கு நீங்கள் கொடுக்கத்தானே வேண்டும்'என்று பிறர் கூறிய வழி 'நீங்கள் கொடுக்கத் தான் வேண்டும்; இது முடிந்த முடிபு' என்பது படநிற்றலின் இது முடிப்பாயிற்று.

8. யாப்புறவு (கண்டிப்பு)— நீங்கள் வந்தாலே வந்தது' என்ற வழிக் கண்டிப்பாக வர வேண்டும் என்பது படநிற்றலின் யாப்புறவு.

9. தொடர்ச்சி— தொடர்ந்து வாய் மூடியிருக்கும் ஒருவனை, 'இவன் பேசாமலே இருக்கிறான்' என்புழித் தொடர்ச்சிப் பொருண்மையமைதலின் இது தொடர்ச்சி.

10.* கவர்ச்சி —'இந்த சிறு பையன் இவ்வளவு படித்திருக்கிறானே' என்புழித் தன் மனம் சிறுவன் செய்கையால் கவரப்பட்டமை தோன்றலின் இது கவர்ச்சி.

11. விருப்பு—'நீங்கள் நாள்தோறும் இரண்டு குறள் படிக்கலாமே,' என்புழி விருப்பம் வெளிப்படுதலின் இது விருப்பாயிற்று.

12. துணிவு— தன் பகைவனைத் தாக்கித் தோற்கடிக்கத் தயாராகி நிற்கும் ஒருவன், 'அவன் இப்போது இங்கு வரட்டுமே' என்புழி ஏகாரம் துணிவுப் பொருண்மை பயத்தலால் இது துணிவு.

13. கையறவு—தனக்கெதிரில் ஒருவர் மரணப்படுக்கையில் இருந்து உயிர் நீங்கும் சமயத்தில் இதைக் கண்டு கையற்ற நிலையில் 'உயிர் போகிறதே' என்புழிக் கையறவு தோன்ற நிற்றலிற் கையறவு.

* இது வியப்புக்கும் பொருந்தும்,

14. எதிர்ப்பு—இதைச் செய்வாயா என்று வேண்டிய ஒருவனிடம் 'முடியவே முடியாது' என்று மற்றவன் கூறும் வழி ஏகாரம் எதிர்ப்பு உணர்ச்சி தோன்ற நிற்றலின் இஃது எதிர்ப்பு.

15. ஒப்புதற்குறிப்பு— 'அவர்தானே இங்கிருக்கிறார்' என்றவழிக் கேட்கப்பட்டார் 'ஆம்' என்று ஒப்ப வேண்டும் என்ற குறிப்பு இருப்பின் அஃது ஒப்புதற் குறிப்பு.

16. ஒப்புமை நோக்கு— 'இந்தச் சிறுவன் இவ்வளவு படித்தால் பெரியவர் எவ்வளவு படிக்கலாம்' என்ற கருத்தோடு 'இந்த சிறுவனே இவ்வளவு படிக்கிறான்' என்புழி ஏகாரம் ஒப்புமை நோக்கு. ஐந்து வயதிலேயே இவனுக்கு இவ்வளவு அறிவிருக்கிறது என்பதும் அது.

17. ஒருமை நாட்டம்—'குழந்தை விளக்கையே பார்க்கிறது' என்ற வழி ஏகாரம் ஒருமை நாட்டத்தை நன்கு புலப்படுத்தி நிற்றலின் இங்கு அஃது ஒருமை நாட்டம்.

18. கழிந்ததற்கிரங்கல்—அவர் இந்தப் போட்டியில் தோற்றுப் போய் விட்டாரே, அவர்க்குப் பயித்தியம் பிடித்துவிட்டதே, நான் குழந்தையையடித்து விட்டேனே—என இவ்வாறு வருவன கழிந்ததற்கிரங்கற் பொருண்மைய.

19. எய்துவதஞ்சல்—மழையில் நனைந்தால் காய்ச்சல் வருமே, நெருப்பைத் தொட்டால் சுட்டு விடுமே, இரவில் தனியாக விட்டால் குழந்தை பயந்து விடுமே-என்பன போல்வன எய்துவது அஞ்சல்.

20. எடுத்து மொழிதல்—தனக்குத் தெரியும் என்பதை எடுத்துச் சொல்ல எண்ணிய ஒருவன் 'எனக்கு இது தெரியுமே' என்றவழி அஃது எடுத்து மொழிதல்.

(இலக்கணவுலகில் புதிய பார்வை-பக். 110—113)

பால.

கருத்து: ஏகார இடைச்சொல்லின் பொருட்குறிப்பு இவை என்கின்றது.

பொருள் : ஏ, என்னும் இடைச்சொல் தெளிவும், வினாவும் பிரிநிலையும் எண்ணாதலும் ஈற்றசையும் என ஐந்து பொருட் கூறுபாடாகும்.

எ.டு:— உண்டேஎ மறுமை, வாய்மையே வெல்லும், என வரும் இவை தேற்றேகாரம்.

நீயே கொண்டாய்? என்பது வினா ஏகாரம்.

இவனே வலியன் —என்பது பிரிநிலை ஏகாரம்.

நிலனே, நீரே, தீயே, வளியே என எண்ணுதற்கண்வரும் ஏகாரம் எண்ணேகாரம்.

வாடாவள்ளியங்காடிறந்தோரே —எனச் சீர் இறுதிக்கண் வரும் ஏகாரம் ஈற்றசை ஏகாரம்.

ஈறு என்பதற்குச் செய்யுளீறு எனப்பொருள் கூறின் குன்றக் கூறலாம் என்க.

ஏகாரம் அசையாக முதற்கண்ணும் வருமாதலின் ஈற்றசை என்றால், பொருட்குறிப்புகளோடு அசைநிலையையும் உடன் ஓதினார்.

"கூற்றுவயின் ஓரளபாக இசைத்தலும் உரித்"தெனப் பின்னர் எடுத்து விதத்தலைக் கருதி என்க. ஏகார இடைச் சொல்லின் இயல்புபற்றி ஒருங்கு கூறினார் எனினும் அமையும்.

என

253. வினையே குறிப்பே யிசையே பண்பே
யெண்ணே பெயரோ டவ்வறு கிளவியுங்
கண்ணிய நிலைத்தே யெனவென் கிளவி. (10)

(வினையே குறிப்பே இசையே பண்பே
எண்ணே பெயரோடு அவ் அறு கிளவியும்
கண்ணிய நிலைத்துஏ என என் கிளவி)

ஆ.மொ :

இல.

The morpheme 'ena' stands in the six senses which are of verb, of intention, of sound, of nature, of enumeration and of noun.

ஆல்.

The morpheme /ena/ goes with the six expressions of verbs, intention, indications of sounds, quality, enumeration and names.

பி.இ. நா.

அடுத்த சூத்திரத்துக் காண்க.

இளம்.

வ—று: வினை : கொள்ளெனக் கொண்டான் என்பது.
குறிப்பு : விண்ணென விசைத்தது என்பது.
துண்ணெனத் துடித்ததும் என்பதும் அது.
இசை : ஒல்லென ஒலித்தது என்பது.
பண்பு : வெள்ளென விளர்த்தது என்பது.
எண் : நிலனென வளியென எனவரும்.
* பெயர் : ஊரெனப்படுவது உறையூர் எனவரும்.
நாடெனப்படுவது சோணாடு என்பதுமது.

சேனா.

இ—ள் : வினை முதலாகிய ஆறு பொருண்மையும் குறித்து வரும் என என்னும் இடைச்சொல், எ—று.

உ-ம் : "மலைவான் கொள்கென வுயர்பலி தூஉய்" (புறம். 143) என வினைப் பொருண்மையும்,

'துண்ணெனத் துடித்தது மனம்' எனக் குறிப்புப் பொருண்மையும்,

'ஒல்லென வொலித்தது' என இசைப் பொருண்மையும்.

'வெள்ளென விளர்த்தது' எனப் பண்புப் பொருண்மையும்,

'நிலனென நீரெனத் தீயென வளியென' என எண்ணும் பொருண்மையும்,

1'அழுக்கா றென வொரு பாவி' (குறள் 168) எனப்பெயர்ப் பொருண்மையும் குறித்து என என்னும் சொல் வந்தவாறு கண்டு கொள்க.

தெய்.

இதுவுமது.

---

* இவ்வுதாரணங்களால் இளம்பூரணர் சோணாட்டினர் என்னலாம் போலும்.

1. அழுக்காறென—அழுக்காறு என்னும் பெயரையுடைய

இ-ள் : வினை முதலாகப் பெயரீறாகச் சொல்லப்பட்ட ஆறு சொல்லினையும் குறித்த நிலைமைத்து என என்னும் சொல், எ-று.

உ-ம் : கொள்ளெனக் கொடுத்தான் என்பது வினை குறித்து நின்றது.

'பொள்ளென வாங்கே புறம் வேரார்' என்பது விரைவு என்னும் குறிப்பு உணர நின்றது.

'கல்லெனக் கவின் பெற்ற விழவற்றுப் படுத்தபின்' (கலி.5) என்பது இசைப் பொருண்மை குறித்து நின்றது.

'கன்முகை யருவி தண்ணெனப் பருகி' (புறம்.150) என்பது பண்பு குறித்து நின்றது.

பாழெனக் காலெனப் பாகென ஒன்றென இரண்டென என்பது எண்ணுக் குறித்து நின்றது.

'நாளென ஒன்றுபோற் காட்டி' (குறள்) என்றவழிப் பெயர் குறித்து நின்றது.

எழுத்ததிகாரத்துள் 'என என் எச்சம்' என ஓதுதலான் இவையெல்லாம் வினையெச்சப் பொருண்மையுணரவும் பெயரெச்சப் பொருண்மை யுணரவும் வரும் என்று கொள்க.

2ஊரெனப்படுவது உறையூர் எனச் சிறப்புப் பற்றியும் வருமால் எனின், அது பெயர்ப் பொருளின் பாகுபாடாதலிற் பெயரென அடங்கும்.

நச்.

இது பொருள்படுமாறு கூறுகின்றது.

இ-ள்: வினையே குறிப்பே இசையே பண்பே எண்ணே பெயரொடு அவ்வறு கிளவியும் கண்ணிய நிலைத்தே என என் கிளவி – வினைச் சொல்லின் பொருண்மையும் குறிப்பாய் வரும் உரிச்சொல்லின் பொருண்மையும் இசைக்கண்வரும் உரிச் சொல்லின் பொருண்மையும் பண்பின்கண்வரும் உரிச் சொல்லின் பொருண்மையும் எண்ணுப் பொருண்மையும் பெயர்ப் பொருண்மையோடே கூடி அவ்வாறு பொருண்மை யும்தான் இடைநின்று கருதிப் பின்வருஞ் சொல்லோடு இயை விக்கும் நிலைமையை யுடைத்து என என்னும் சொல், எ-று.

---

2. ஊர் எனப்படுவது—ஊர் எனச சிறப்பித்துச் சொல்லப் படுவது.

உ-ம்: [3]கார் வரும்எனக் கருதி நொந்தாள்,
துண்ணெனத் துடித்தது மனம்,
ஒல்லென வொலித்தது,
வெள்ளென விளர்த்தது,
நிலனென நீரெனத் தீயென வளியென,
அழுக்கா றெனவொரு பாவி (குறள். 168)

எனவரும். [4]'நெடுநீர்க் குட்டத்துத் துடுமெனப் பாய்ந்து', (புறம். 243) என்பதும் இசை.

கல்,

என்—எனின், இது பொருள்படுவதொன்று உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள்; முன்னின்ற வினைச் சொல்லைப் பின்வரும் வினை சொல்லோடு இயைவித்தல் என்னும் பொருண்மையும், குறிப்புப் பொருண்மைக்கண் வரும் உரிச்சொல்லினைப் பின்வருஞ் சொல்லோடு இயைவித்தல் என்னும் பொருண்மையும், இசைப் பொருட்கண் வரும் உரிச்சொல்லினைப் பின்வருஞ் சொல் லோடு இயைவித்தல் என்னும் பொருண்மையும், பண்புப் பொருட்கண் வரும் உரிச்சொல்லினைப் பின்வருஞ் சொல்லோடு இயைவித்தல் என்னும் பொருண்மையும்...*

ஆதி.

உ-ம்:

வந்தான்என மகிழ்ந்தேன்—வினையுடன்
சில்லெனக் குளிர்ந்தது—குறிப்பு
ஆஅஅ என இசைத்தார்—இசை
கருகருவென இருட்டியது—பண்பு
நீரென நிலமென வளியென வெளியென நீயென—
குமணன் என ஒரு வள்ளல்—பெயர். எண்

---

3. பொருள்: கார்காலம் வரும் எனக் கருதி வருந்தினாள்.
4. பொருள்: ஆழமான நீர் நிறைந்த குளத்தில் துடும் என்னும் ஒலி எழும்படியாகப் பாய்ந்து.

* இதன் பின்னர் உள்ள உரைகள் கிடைக்கப் பெற வில்லை. தமிழ்நாடு அரசின் தெ. பொ. மீ.யின் பதிப்பில் (1971) 'மியாயிக' (இடை) என்னுஞ் சூத்திரமும் அதன் சிதைந்தவுரையுமட்டும் காணப்படு கின்றன. அச்சூத்திரத்திற் காண்க.

பி. இ. நூ:

நேமி. சொ. 53

வினை பெயரும் எண்ணும் இசை குறிப்பும் பண்பும்
என என்று இரண்டும் இயலும்.

நன். 424

வினைபெயர் குறிப்புஇசை எண் பண்பு ஆறினும்
எனவெனும் மொழிவரும் என்றும் அற்றே.

இல. வி. 255. " " "

தொன். 133

எனவென்பது உவமை எண்குணம் வினைபெயர்
இசை குறிப்பு இயலும் என்றும் இனைத்தே.

முத்து. ஒ. 8.

எண்ணே குறிப்பே இசையே பண்பே
வினையே பெயரே எனஓர் ஆறினும்
எனவெனும் மொழிவரும் என்றும் அற்றே.

இளம்.

வ-று: வினை—கொள்ளென்று கொண்டான் என்பது.
குறிப்பு—விண்ணென்று விசைத்தது என்பது
துண்ணென்று துடித்தது என்பது மது.
இசை — 'ஒல்லென்று ஒலிக்கும்' (ஐந்திணை யைம்பது. 28) என்பது.
பண்பு—வெள்ளென்று விளர்த்தது என்பது.
எண்—நிலனென்று வளியென்று என வரும்.
பெயர் — ஊரென்று சொல்லப்படுவது உறையூர் என்பது.

சேனா.

இ—ள்: என்று என்னும் இடைச் சொல்லும் என என்பது போல அவ் ஆறுபொருளும் குறித்து வரும், எ-று.

உ-ம்: "நரை வருமென்றெண்ணி" (நாலடி-11) எனவும்,

விண்ணென்று விசைத்தது எனவும்,